ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 ச்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-௵ புரட்டாசி-மீ 10-உ (25—9—1932) | மலர் 22


# நீங்கள் விரும்புவதென்ன?

## அறிவுள்ளவர்களாகவும், மூட நம்பிக்கையற்றவர்களாயும், வாழ விரும்புகிறீர்களா?

அர்த்தமற்ற ஓர்வார்த்தையை நம்பி ஏமாந்து, காலத்தை வீணாக்கி, செல்வத்தையழித்து சிதைந்து சோம்பேரிகளாய், வறியராய், வாழ விரும்புகிறீர்களா? இல்லையெனில் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி.எல்., எழுதிய "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நூலை இன்றே வாங்கிபாருங்கள். உண்மைதெரியும், அஞ்ஞானம் தெளியும், சந்தேகம்தீரும், கடவுளைப்பற்றிய அர்த்தமற்ற பயமும், சந்தேகமும் நீங்கும். சிறந்த ஆராய்ச்சி நூல் 80-பக்கங்களுக்கு மேற்கொண்டது விலை 4-அணா,

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவும்.

கிடைக்குமிடம்:— மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

## Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion

By

S. Ramanathan

Pattabhi Sitharamyya

& N. S. Varadachari

in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*

Manager "Kudi Arasu" Erode.

---

உங்கள்

## கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

## பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

## செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works

Beadon St. Calcutta

---

## சுயராஜ்யம் யாருக்கு?

தோழர் ம. சிங்காரவேலு பி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

---

## குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413

Calcutta- (k)

---

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோறும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0

தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—

மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

---

## டாக்டர் சிங்காரம் அவர்களின் கெந்தக நெய்.

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேகஊரல், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், கிரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூலை, கணுச்சூலை, பாரிச வாய்வு, முடக்கு வாய்வு, சர்மத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, மதமதப்பு, திமிர்வாய்வு, புண், புரைகள் ஆராத ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம்செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர் நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.

60 வேளை மருந்து விலை ரூ. 10—0—0

20 ,, ,, 4—0—0

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்.

மலாய்நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அன் கோ.,

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

---

இனாம்! இனாம்!!

## கிராமபோன்.



ஓட்டோக்களிலெல்லாம் சிறந்தது பாஸ்டாஜ் ஓட்டோதான். மணம் சிறந்தது, வாசனை மிக்கது, மூடியைத்திறந்ததும் பூந்தோட்டத்திலிருப்பதாகவே எண்ணுவீர்கள். எவ்வித மனோ நோயையும் போக்கவல்லதிவ்ய ஔஷதம்.

1 பாட்டல் விலை அணா 8.

6 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு டேபிள் டைம்பீஸ் இனாம்.

9 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு வாட்டர் புரூப் ரையின் இனாம்,

12 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு கிராமபோன் இனாம்.

கிராமபோன் ரிகார்டுகள் டஜன் 12 ரூபாயாகும். பாக்கிங் தபால் செலவு வேறு இந்த நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விடாதீர்கள் 1-மாத மட்டுந்தான்.

Universal Stores

2|3 Hazarimul Saha lane

Bandagat Salkia

Howrah.

---

## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம் ஞூ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

# "பிசாசு பிடித்த வீடு"

## தஞ்சை திருபர்களுக்கு விடை.

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

### பிசாசு பிடித்த வீடு.

காட்டுமிராண்டிகளுக்கு கல்லும், காடும், நீரும், நிலமும், செடியும், மரமும், புல்லும் பூண்டும் பிசாசுகளுக்கு இருப்பிடமென்று பயந்து வாழ்கின்றனர். நமது தமிழ் நாட்டு மக்களுக்கு ஒண்டி மரமும், பாழ்வீடும், குட்டிச்சுவரும் பிசாசுகளுக்கு இருப்பிடமாம்! இவ்விதமாக இரண்டு குடும்பங்கள் ஒரு பாழ்வீட்டைப்பிடித்திருந்த பிசாசால் அவ்வீட்டிலிருந்து துரத்தப்பட்டதாகவும் அதனை தமிழ் நாட்டில் பலர் நம்புவதாகவும் அதனை விசாரித்த திரு. வி. டி. ஸ்குடட் என்பவர் அந்த சம்பவம் உண்மைதான் என்று சொல்வதாகவும், அவர் பிரக்யாதி பெற்றவராகையால் அவர் சொல்லை எடுத்துக்கொள்ளவேண்டுமெனவும், தாங்கள் நம்பாமற்போன போதிலும் பிறர் அவர் சொல்லை நம்புகிறபடியால் இந்த மகிமையை விளக்கிக்காட்டவேண்டுமென்று நீண்டதோர் கடிதம் தஞ்சை சுயமரியாதைத்தொண்டர்கள் கையொப்பமிட்டு எழுதியுள்ளார்.

இந்த திரு. ஸ்குடட் என்பவர் பிரபில்யம்பெற்றுமிருக்கலாம். பேய் பிடித்த வீட்டு சம்பவத்தை விசாரித்துமிருக்கலாம், அவர் அந்த வீட்டில் கொல்லப்பட்ட ஒருவரின் 'ஆன்மா' பேயாகிஅந்த வீட்டண்டை உலாவிக்கொண்டிருக்கின்றதாகவும், அவர் நம்பலாம். ஆனால் ஒரு கேள்வி அவரை கேட்கின்றேன். அதாவது, அந்த கொல்லப்பட்டமாது "ஆன்ம" ரூபமாக இருந்துக்கொண்டு, அந்த அகால சப்தங்களைச் செய்ததாக யார் பார்த்தார்கள் என்று கடாவுகின்றேன். பேய் பிடித்த வீட்டுக்கதைகளிலும், முனீஸ்வரன் பிடித்த மரங்களின் கதைகளிலும், "சபதம் கேட்டது", "மலம் வந்து விழுந்தது" "சாணிச்சட்டி உடைந்தது" "மூத்திரம் ஊத்தப்பட்டது" "ஜன்னல் படபடவென்று அடித்தது' "கதவு திடீரெனத் திறந்து கொண்டது", "படியில் தடதடவென்று பெட்டி உருண்டது", இன்னும் பல அகால சம்பவங்கள் நடந்தனவென அனுமானிக்கின்றார்களே யொழிய, யாரும், இந்த கிருத்தியங்களை, அதாவது காரியங்களை, பேய்தான் செய்தது என்று யாரும் பார்த்ததாகச் சொல்வதில்லை. நமது நண்பரைக் கேட்கின்றேன், இந்த, திரு. ஸ்குடட் யார்? எந்த விஷயத்தில் பிரக்கியாதி பெற்றவர்? இவர் எந்த வேளையில், எந்த மணி நேரத்தில் விசாரிக்கப் புகுந்தார்? இவர்கூட யார் இருந்தது? இவர் பார்த்து பிசாசு என்று அனுமானித்ததை எப்பொழுது எழுதினார்? அவர் அந்தக்ஷணத்தில் எழுதினாரா? அந்தப் புத்தகம் எங்கே? எவ்வளவு நேரம் அவர் விசாரித்தார்? வீட்டு மூலைகளை எல்லாம் யார் விசாரித்தார்கள்? ஏன் எவனோ ஒருவன், அந்த வீட்டுச் சொந்தக்காரனுக்கு நஷ்டம் உண்டாக்க, அந்த சப்தங்களை மறைவாக நின்று செய்திருக்கலாகாது? இத்தியாதி சாட்சியங்கள் வரும்வரை இத்தியாதி கதைகளை சற்று அவநம்பிக்கையிலேயே வைப்பதுதான் யோக்கியப் பொறுப்புக்கு லட்சணமென அறிக.

இந்தவிதக் கதைகள், மூட ஜனங்களிடம் அதிகமாக வழக்குறைதைக் காணலாம். இந்தக்கதைகளை நம்புகின்றவர்கள், முக்கியமாக மூன்று விஷயங்களை நிரூபிக்கவேண்டும்:—

முதலாவது, மனிதனுக்குள் திரேகமன்னியில், ஒரு "ஆன்மா" இருப்பதாக ருசுபடுத்தவேண்டும். இரண்டாவது, அவன் இறந்த பிறகு, அந்த "ஆன்மா" தனித்து வாழ்வதாக நிரூபித்தல் வேண்டும். அந்த "ஆன்மா" நமது உள்ளக்கண்ணால் அதாவது திரேகக்கண்ணால் பார்த்ததாக நிரூபித்தலும் வேண்டும். இந்த மூன்று சாட்சியங்களை (Evidence) யாராகிலும் கொடுப்பதற்கு தயாராயிருக்கின்றார்களா? வெனக்கேட்கின்றேன்?

"பேய்" "பிசாசு" என்றால் என்ன? ஐம்பூத சேர்க்கையால் உண்டானதா, அல்லது உளதா? அது என்னவர்ணம்? குட்டையா? நீளமா? அதற்குக் கை காலுண்டா? அதற்குக் கண்கள் உண்டா, எந்த அவயவங்களை உடைத்தாயிருக்கிறது?

அகாலமாக கொலை உண்டவர்களுடைய ஆன்மா தானா பாழ் வீட்டில் தங்க வேண்டும்? ஒரு நாளைக்கு ஆயிரம் அகால கொலைகள் நடக்கின்றனவே, அந்த ஆன்மாக்கள் எந்த கொலை வீட்டில் தங்குகின்றன? யாரும் சஞ்சாரம் செய்யாத வீட்டில் தானா, இந்த திரு. ஸ்குடட் அனுமானித்த ஏகதேச ஆன்மாவுக்கு விளையாட்டு?

கூச்சல் போடத்தானா இந்த பேய்களுக்குத் தெரியும்? கூச்சல் போட வாய்வேண்டுமே, வாயுடைய பிசாசுக்கு, மற்ற அவயவங்களும் இருக்குமன்றோ? ஏன் அந்த அவயவங்களுடன் நாம் செய்யும் வேலைகள் எல்லாம் செய்யக்கூடாது? பிசாசுகளுக்கு ஆடையுண்டோ? சட திரேகத்தில் தான் சூட்சும திரேக ஆன்மா உண்டு. ஆனால் ஆடையில் சூட்சும ஆடையும் உண்டோ?

போர்க்களத்தில் அகாலமாகக்கொல்லப்படுவோருடைய கோடானகோடிமக்களது ஆன்மா, எங்கே உலாவுகின்றன? எந்த ஜன்னலையும், கதவுகளையும் அசைக்கின்றன? இந்த "பரிசுத்த ஆன்மாவுக்கு" மலத்தையும் ஜாலத்தையுமா எரிய சக்தியுண்டு? என் சந்தனத்தை வாரி வீசலாகாது?

இந்த பேய் பிடித்த கதைகளை, பிசாசுபிடித்த கதைகளை நான் கேட்கும்போதெல்லாம், எனக்கு நான் சிறுவனாய் இருக்கும்போது கேட்ட கதை ஒன்று ஞாபகத்தில் வருகின்றது. ஒரு கிழவியின் "ஆன்மாவுக்கு", பாதி இரவில், தாகம் எடுத்ததாம். கழநீர் பானையில் அந்த "ஆன்மா" சென்று கழநீரை குடிக்குங்கால், பானையில் உண்டான சப்தத்தைக் கேட்ட இன்னொரு கிழவி, எலியோ, பெருச்சாளியோ, கழநீரைக்குடிப்பதாக நினைத்து, அந்தப்பானையின் வாயை மூடிவிட்டாளாம்! அதனால், தண்ணீர் குடிக்கச் சென்ற "ஆன்மா" அந்தப்பானையில் அடைப்படவும். அந்தக்கிழவி இறந்துவிட்டாளாம்!! சுடலைக்கு கொண்டுபோகையில், அது மத்தியான வேளையானதால், மாடுகள் தண்ணீர் அருந்த வீட்டுக்கு வரவும், கழநீர்ப்பானை திறக்கப்படவும், அதில் அடைபட்ட "ஆன்மா" ஓடி வந்து, இறந்த கிழவிக்குள் புகுந்து கொள்ளவும், அந்தக் கிழவி தூங்கி விழித்தவள் போல் எழுந்தாளாம்!!! இந்தக்கதையை உண்மை எனவே, என்னுடன் விளையாடிய சிறுவர்கள் சொல்லுவார்கள். அதுபோலவே, நமது சுயமரியாதை இளைஞர், திரு. ஸ்குடட் சொல்லும் கதையை உண்மையென நம்புகின்றார்கள் போலும்!!

பேய்க்கதைகள் (Ghost Stories) உலகில் அநந்தமுண்டு, ஆனால் அந்தப் "பேயை" கூத்து மேடைகளைத்தவிர, மற்ற எந்த இடங்களிலும் யாரும் பார்த்ததில்லை. அராபிக்கதைகளில் (Arabian Nights Tales) ஒருபூட்டியிலிருந்து பூதமொன்று புறப்பட்டகதையை நமது சிறுவர்கள படித்திருப்பார்கள். அதை ஏன் உண்மை என நம்பலாகாது எனக் கேட்கின்றேன். அது போன்ற கதைகள் தான், குட்டிச்சுவர் பிசாசுக்கதையும், பாழ் வீட்டு பிசாசுக் கதையுமென அறிக.

உயிர் [The Living] உலகில் ஜனித்து பல கோடி வருஷங்களாகின்றன. மனித உயிர் [Living Men] உலகில் ஜனித்து, சில லட்ச வருஷங்களாயினவாம். கோடானகோடி உயிர்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆன்மா உண்டானால், அந்த எண்ணிறந்த ஆன்மாக்களுக்கு இருப்பிடமெங்கே? கோடி கோடி கோடானகோடி நண்பர்களுக்கு எத்தனை குட்டிச்சுவர்கள், ஒற்றை மரங்கள், பாழ்வீடுகள் வேண்டும்! முப்பத்திமுக்கோடி தேவர்கள் இருக்கின்றார்கள் என்றால் சிரிக்கிறீர்களே, ஏன் இந்த திரு. ஸ்குடட் சொல்லும் கதையைக்கேட்டு நகைக்காமல் ஊக்கத்துடன் இந்த உபயோகமற்ற கதையைப்பற்றி வினவுகின்றீர்கள்.

உயிர்வாழும் மக்களுக்கு அருந்த உணவு இல்லாமலும், சுகவீடு இல்லாமலும், இறந்தால் வாய்க்கு அரிசி கூட இல்லாமல் நம்மைச்சுற்றி கோடானகோடி மக்கள் இருந்து வருகையில் அதனைப்போக்க உங்கள் மனதை செலுத்தாது குட்டிச்சுவரில் பேயுண்டா? பாழ்வீட்டு படியில் பெட்டிசத்தம் கேட்டதா? கொலையுண்டவளின் ஆன்மாவா அதனைச் செய்திருக்கும்? என்ற சிறுவர் நகைக்கத்தகுந்த கேள்விகளை கேட்கப் புகுந்தீர்களோ? இது என்னகோரம்!

நீங்கள் இந்தக்கதைகளின் ஆபாசங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால்

The Evidence for the Supernatural by Ivor Tuckett விலை அணா 12, அடையார் Theosophical Society யில் கிடைக்கும். Dreams and Ghosts by A Lang (Longmans) price 3sh 6ds இந்த புத்தகங்களை வாங்கி படிக்கலாம்.

இந்தக்கதைகளில் சிறியதோர் உண்மையுண்டு. அதாவதெனில் மூடநம்பிக்கை அதிகரிக்க அதிகரிக்க அதனால் ஒரு மயக்கம் (Halucination) உண்டாகின்றது. பேய்கள் ஆடுகின்றமாதிரியாகவும், இறந்தவர்கள் பேசுகின்ற மாதிரியாகவும் கண்களுக்கும் காதுகளுக்கும்தோன்றும், கேட்கும். பக்தியால் வெறிகொண்டவர்களுக்கும் 'சிவன்' பிரசன்னமாகி ஆட்கொண்டதாகவும், விஷ்ணு கருடவாகனரூடராய் காட்சி கொடுத்ததாகவும், ஏசு மரித்தெழுந்ததாகவும் தோன்றும். இந்தக்காட்சிகள் ஓர்விதமனமயக்கால் உண்டாவது சகஜம். இதனை (Halucination) மனமயக்கம், மனபித்தம் என்று வழங்குவார்கள். இதனைப்போன்றே பேய், பூதங்கள் உண்டென நம்புகின்றவர்களுக்கு குட்டிச்சுவர் பேய்களாகவும், பாழடைந்த வீடுகள் பிசாசுகளுக்கு இருப்பிடமாகவும், அகால சப்தங்களுடன் வெள்ளை சேலைக்காரியும், உப்பாடைக்காரியும் தோன்றுவார்கள். இத்தோற்றங்கள் மனமயக்கால் உண்டாகின்றனவேயொழிய உண்மை அல்ல. இதனை வேதாந்தி

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

# கடவுள் வெறியும், மதவெறியும்.

[தோழர் அ. இராகவன்]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

இன்று மதத்திலும் ஏனைய சமயங்களைப் போல் பகுத்தறிவுக்கொவ்வாக் கொள்கைகள் பலமலிந்து கிடக்கின்றன. எடுத்துக் காட்டாக உலகமும், அதிலுள்ள சகல பொருட்களும் தோன்றுவதற்குமுன் கடவுள் (தேவ ஆவியானவர்) ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் என்றும், முதலில் வெளிச்சத்தை யுண்டாக்கிவிட்டு பின் மூன்றாம் நாள் சூரியன், நக்ஷத்திரங்கள் முதலியவற்றைப் படைத்தாரென்றும் ஆதிமனுஷனாகிய ஆதாமை மண்ணினாலே உருவாக்கி அதன் நாசியிலே தேவன் ஜீவசுவாசத்தை ஊதியதும் அவன் மனிதனாக எழும்பி உலகில் வசித்தான் என்றும், பின்னர் அவன் விலா எலும்பைக்கொண்டு ஏவாள் என்னும் மனுஷியை உண்டாக்கினான் என்றும் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் காயின் ஆபேலென்றிரு ஆண்மக்கள் பிறந்தார்கள். காயின் ஆபேலைக்கொன்றதன்பின் காயின் நோத்என்னும் தேசத்தில் குடியிருந்தான், அங்கே தன்மனைவியை அறிந்தான் என்றும் அக்காலத்தில் பூமியில் இராக்ஷதர்களும் குடியிருந்தார்கள், தேவகுமாரர்கள் பூமியிலுள்ள மனுஷகுமாரிகளை மணந்தார்களென்றும் தேவன் உலகத்தையும், அதிலுள்ள சகலபொருட்களையும் ஆறு நாட்களுக்குள் படைத்து விட்டு ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார். ஆகையால் மனிதர்களும் அந்த ஓய்வு நாளில்யாதொரு வேலையும் செய்யாது ஓய்ந்திருக்கவேண்டும்.என்னும் இன்னும் பல விஷயங்களும் கிறிஸ்துவவேதப் புத்தகமாகிய பைபிளின் ஆதியாகமம் என்னும் ஒரு சிறு நூலில்மட்டும் காணக்கிடக்கின்றது.

மதப்பற்று மிகுந்தமக்களிடம், இறைவன் உலகத்தையும்,அதிலுள்ள பொருட்களையும் படைப்பதற்குமுன் ஜலத்தின்மேல் எவ்வாறு அசைவாடிக்கொண்டிருந்தாரென்று வினவினால் ஒரு சிறிதும் தங்கள் பகுத்தறிவைக் கொண்டு பாராது தேவனால் முடியாத காரியமொன்றுமில்லை. எல்லாம் அவனாலே ஆகும் என்றும் அறைகுவர். ஆனால் பிறசமயத்திலோ இத்தகைய விஷயம் ஒன்று காணப்படுமாயின் சகோதரர்களே! பாருங்கள் எவ்வாறு கடவுள் உலகத்தை உண்டாக்குமுன் ஜலத்தின் மேல் அசைவாடிக்கொண்டிருத்தல் கூடும். இவைகளெல்லாம் பகுத்தறிவுக்கொவ்வாத அறிவிலார் கூற்று இதை நம்பாதீர்கள் என்று கிறிஸ்துவர்கள் உரும்பி மொழிகுவர் இஃதே போன்று முதலில் வெளிச்சத்தையும், மூன்றுநாள் சென்றபின்னர் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் முதலியவற்றையும் படைத்தார் என்றும் கூறுவது எத்துணை அறியாமை. ஒருவன் முதல்நாளில் வெளிச்சத்தையும், இரண்டாம்நாள் தீபத்தையும் ஏற்றினான் என்றுகூறினால் பாடசாலையில் முதலாவது வகுப்பில் கல்விபயிலும் சிறார்களும் கூடஎள்ளிநகையாடுவாரன்றோ? இனிப்பை இன்றைக்கும் சர்க்கரையை நாளைக்கும் கொடுக்க முடியுமா? கேவரில் (கேப்பையில்) நெய்வடிகிறதென்றால் கேட்பாருக்கு புத்தியில்லையா? என்ற முதுமொழிக்கொப்ப இவ்வறிவிலாக் கூற்றுக்களை எவரேயொப்புக்கொள்வார். சூரியன் உண்டாக்கப்படு முன் எவ்வாறு நாட்கள் கணிக்கப்பட்டது? இவைகளெல்லாம் கிறிஸ்துவரல்லாத மக்களிடம் கூறினால் கைகொட்டி நகைத்து ஆ! எத்துணைபெரும் பொய் இதையும் நம்பும் மனிதர்களும் உலகிலுளரோ என்று கூறுகின்றனர். ஆனால் கிறிஸ்தவர்களிலும்கூட மதவெறி குறைந்த மக்கள் இக்கதைகளெல்லாம் பண்டைக்காலத்திலுள்ள பாமரமக்கள் கூற்று, அவைகளெல்லாம் இவ்விருபதாம் நூற்றாண்டிலுள்ள மக்கள் எவ்வாறு ஒத்துக்கொள்வர் என்று கூறி விடுகின்றனர். ஆனால் மதப்பற்று மிகுந்த கிறிஸ்துவர்களோ அறிவை அறவேபுறக்கணித்து ஆண்டவனால் ஆகாதகாரியமொன்றுமில்லை வேதத்தில் கூறப்பட்டுள்ள வார்த்தைகளின் தன்மையை உங்களால் அறிய முடியாது, அதற்குப் பொருள்வேறு, இதற்குப் பொருள்வேறு என்று கூறித்தப்பித்துக்கொண்டு போய் விடுகின்றனர். ஆதியிலே கடவுள் களிமண்ணினாலே மனுஷனை உண்டாக்கி நாசியில் ஜீவசுவாசத்தை ஊதி மனுஷனை உண்டாக்கினார் என்றுகிறிஸ்துவவேதம் கூறுகின்றது. இக்கொள்கை தற்கால விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியால் நீர்த்துளியாக்கப்பட்டு ஒழிந்து போய் விட்டது. ஐம்பூதங்களிலிருந்து பிராணவாயு (Oxygen) உப்புவாயு (Nitrogen) ஆகியவற்றின் சேர்க்கையால் ஆதியில் தாதுவக்கப் பிராணிகளும், பின்னர் கந்த மூலப்பிராணிகளும், கிருமிகள் வண்டுகள், ஊர்வன, பறப்பன ஆகிய பிராணிகளும் தோன்றி அவைகள் யாவும் மாண்டு மண்ணாகி,—அந்த மண்ணிலிருந்த பிராணவாயுவினால் தவளையும் அதைப்போன்ற உயிரினங்களும், பின் அந்தப்பிராணவாயு மலைகள் கற்கள் முதலியவைகளில் மோதி மான், காடி, யானை, ஒட்டகம் ஆகிய மிருகங்கள் தோன்றியதாகவும், பின்னர் அவைகளெல்லாம் நசித்து, ஓர் பெரும் மழையினால் அப்பிராணவாயுவின் அம்சங்களெல்லாம் கடலிற் போய்ச் சேரக்கடலில் மீன்களாகியும் அம்மீன்கள் கடலில் உள்ள பாசி முதலியவைகளையுண்டு வாலும் காலுமுள்ள ஒருவகை உருவத்தோற்றங்களாகமாறி, பின் அவ்வகை உருவத்தோற்றங்கள் நாளடைவில் குரங்குகளாக மாறி அக்குரங்குகளிலிருந்து வாலில்லாக் குரங்குகளாகி, அவைகள் நாளா வட்டத்தில் வெயிலுக்கும், குளிருக்கும் மரக்கொம்புகளில் வாழ்ந்து, தினே தினே அறிவு வளர்ச்சி பெற்று ஈற்றில் மனுஷர்களாக மாறி விட்டதென்றும் இவ்வகை மனுஷத் தோற்றங்கள் நிரக்ஷரேகைக்கு சமீபத்தில் பல்வேறிடங்களில் உண்டாகியிருக்கலாமென்றும் இவ்வாறுவெவ்வேறிடங்களில் மனுஷர்கள் தோன்றியதனால்தான் வெவ்வேறு தேசங்களிலும் வெவ்வேறு விதமான உருவமும் நிறமும் அங்க அமைப்புகளுமுடைய மக்கள் இருக்கின்றார்களென்று டார்வின் முதலிய அறிஞர்களால் கண்டு பிடிக்கப்பட்டு, கிறிஸ்துவப்பாதிரிமார்கள் பலராலும் எதிர்க்கப்பட்டு முடிவில் மேனாட்டு விஞ்ஞான விற்பன்னரால் ஒப்புக்கொள்ளப்பட்டு சர்வகலாசாலைகளிலெல்லாம் இத்தகைய நூற்கள் பாடபுத்தகமாக வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதமாக வெகு விரிவாய் ஆராய்ச்சி செய்து பகுத்தறிவிற்குப் பொருத்தமாக உலகமொத்துக்கொள்ளும்படியான ஒரு கொள்கையை தம் வேதபுத்தகத்தில் வேறு விதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது என்னும் ஒரே காரணத்திற்காகடார்வின் ஒரு நாஸ்திகன், அவர் கொள்கை எவ்வளவு புத்திக்குப்பொருத்தமானதாக இருப்பினும் உலகமே ஒத்துக்கொண்டதாயினும் நாங்கள் ஒப்புக்கொள்ளோம் என்று கிறிஸ்துமத பக்தர்கள் கூறிவருவதிலிருந்து மத வெறி மக்களின் அறிவைப் பாழ்ப்படுத்தி வருகிறது என்பது வெள்ளிடைமலையென விளங்குகின்றதல்லவா? மேலும் மனிதனுள் ஆண்டவனால் ஊதப்பட்ட ஜீவ சுவாசமாகிய பிராணவாயுவைத்தவிர ஆத்மாபோன்ற வஸ்து எங்கிருந்து வந்தது என்று கிறிஸ்தவர்களிடம் வினவினால் அவர்கள் என்ன கூறுவார்கள் என்றும், ஆதாமின் விலா எலும்பிலிருந்து மனுஷியைப் படைத்தது மெய்யானால் பெண்ணிற்கு இருப்பதைவிட ஒரு விலா எலும்பு குறைவாக இருக்கவேண்டுமென்று கிறிஸ்தவ அன்பர்களைக் கேட்டால் பல இடங்களில் தங்கள் மனுஷீகத்தன்மையை மீறி வைது கலகம் பண்ணிவருவதையான் நேரில் பலவிடங்களில் கண்டிருக்கிறேன். ஆதாமுடைய இரு ஆண்மக்களில் ஒருவன் கொல்லப்பட்டுப்போனபின் மற்றொருவன் நோத் என்னும் தேசத்தில் போய் எவ்வாறு தன்மனைவியை அறிந்தான். அங்கு பெண் எப்படி வந்தாள்? இராக்ஷதர்கள் பூமியில் எவ்வாறு தோன்றினார்கள்? அவர்களை உண்டாக்கினவர்கள் யார்? அவர்கள் பூமியில் இப்பொழுது எங்குள்ளார்கள்? தேவர்கள் யார்? அவர்கள் மனுஷகுமாரிகளை எவ்வாறு மணந்தார்கள்? மணந்து சதிபதிகளாக யாண்டு வசிக்கின்றார்கள்? தேவர்கள் ஸ்தூல சரீரிகளா? சூக்கும சரீரிகளா? என்ற விஷயங்களையெல்லாம் ஆராய்ச்சி செய்ய கிறிஸ்தவர்கள் மனம் தைரியப்படுவதில்லை. இத்தகைய விஷயங்களைப்பற்றிச் சந்தேகித்தலே பெரும்பாவம் என்று கிறிஸ்தவ பக்திமிகுந்த ஒரு பக்தன் கூறுகின்றான். வேதத்தில் கூறப்பட்ட கருத்துக்களை மனிதன் தன் சிற்றறிவினால் ஆராய்ந்து உண்மையை உணர முடியாதென்றெண்ணுகின்றான்.

சர்வ சக்தியும் வல்லமையுமுள்ள கடவுளுக்கு உலகத்தையும் அதில் உள்ளபொருட்களையும்உண்டுபண்ண ஆறுநாட்கள்செல்லவேண்டுமா? உண்டாகுக என்று கூறிய க்ஷணத்திலே உண்டாகி விடாதா? சர்வசக்தியத்துவமும் ஆற்றலுமுள்ள இறைவனுக்கு களைப்புத்தோன்றி ஓய்வு பெறுவானா? அதைப்போன்று மனிதர்களும் ஏன் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாகவும், அதைப்பரிசுத்த நாளாகவும், அந்நாளில் கிறிஸ்தவர்கள் தங்கள் மனைவிமக்களோ, வேலைக்காரர், மிருகங்கள் முதலியவைகளோ எவ்வித அவசரத்தையிட்டும் வேலை செய்யாதிருத்தல்வேண்டுமோ. யூதர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் அன்றைக்கு வேண்டிய ஆகாரமும்கூட முந்தின நாளில் செய்துகொண்டு ஓய்வு நாளில் யாதொரு வேலையும் செய்யாமல் சோம்பியிருப்பார்களாம். ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்தால் அதைவிடப்பாவம் வேறில்லையாம். இதைப் பகுத்தறிவினால் அலசி ஓர் கிறிஸ்துவனிடம் கூறினாலும் அவன் கடவுள் கட்டளையை யான் ஒரு பொழுதும்மீறேன் என்று பிடிவாதஞ்செய்வானேயொழிய அவனுடைய அறிவுக்கு ஒரு சிறிதும் மதிப்புக்கொடுக்கத்துணியான்.

கிறிஸ்துவர்கள் கொள்கைப்படி உலகம்தோன்றி கிட்டத்தட்ட ஆறாயிரம் வருடங்களாயின. (சென்ற திங்களில் இஸ்லாமியப்பத்திரிகையாகிய சென்னை சைபுல் இஸ்லாம் பத்திரிகையில் அபுல்ஹாலன் என்பார் உலகம் உண்டாகி ஏழாயிரம் வருடங்களாகிறது என்று கூறியிருப்பதால் முஸ்லிம்களும் இதை ஒத்துக்கொள்கிறார்களென அறியலாம்.) இஃது பிரபலபிஷப்மார்களால் பைபிளை நுணுகி ஆராய்ந்து வெளியிட்ட உண்மையாகும். இதையே எல்லாக்கிறிஸ்துவர்களும் ஒத்துக்கொள்கின்றார்கள். பூமி உண்டாகி

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# காந்தியார் பட்டினியால் தாழ்த்தப்பட்டார்க்கு பயன் யாது?

(‘தமிழன்’ ஆசிரியர் தோழர் ஜி. அப்பாதுரையார்)

காந்தியடிகள் சென்ற 20ந் தேதி முதற்கொண்டு பட்டினி விரதத்தை மேற்கொண்டு தாழ்த்தப்பட்டாருக்கு வழங்கப்பட்டிருக்கும் தனித்தொகுதி முறையை யெதிர்த்து வருகின்றார். அடிகள் சென்ற 20ந்தேதி நண்பகல் பன்னிரண்டுமணிக்குப்பூனா எர்வாடா சிறையில் தமது பிரார்த்தனைகாலத்தில் தாம் பட்டினி கிடக்கப்போவதைத்தம்முடனிருக்கும் தோழர்களாகும். திரு. மகாதேவதேசாய், திரு. சர்தார்படேல் ஆகிய இருவருக்கும் வெளியிட்டார். கடைசி யாகாரமாக க்கோதுமை ரொட்டியும், பேரிச்சம் பழங்களும், நீரில் ஊறிய நக்காளிப் பழங்களும், தயிரும், ஆரஞ்சிப்பழங்களும் உட்கொண்டார். தோழர் மகாதேவதேசாய் வழக்கப்படி எலுமிச்சம்பழத்தையும், சோடா உப்பையுங்கலந்து காந்திஜீ குடிப்பதற்காக கைநடுக்கத்துடன் கொடுத்தார். இவ்விதம் அடிகள்பட்டினிவிரதத்தை தொடங்கியபோது தோழர்களிருவரும் அழுதுவிட்டார்களாம். அந்தோ! நியாயமும் நேர்மையுமற்ற முறையில் ஓர் பெரியார் பிடிவாதத்துடன் உயிர் துறப்பதென்றால்; யார் தான் துயர்பெருக்கடையும் நிலைமையினையடையப் பெறுதிருக்க முடியும்? ஆதலின் நாமும் அத்தோழர்களடைந்த துயரத்தில்பங்கேற்றுக்கொள்ள கடமைபட்டிருக்கின்றோம்.

அடிகள் மேற்கண்ட பாடுகிடப்பால் தேசத்தில் ஓர்புத்துணர்ச்சியும், போலிக்கிளர்ச்சியும் எழுப்பப்பட்டிருப்பதுடன் காங்கிரஸ் கூட்டங்களின் ஆரவாரமும், வைதீகக்குழுக்களின் வெற்றொலியும், வரையறையற்றனவாய் மிளிர்கின்றன. வெறும் வாயைமெல்லும் தேசியப் பத்திரிகைகளுக்கு அடிகள் மேற்கொண்ட பாடுகிடப்பு ஒருவாய் அவல் அகப்பட்டதுபோல் மகிழ்வுற்றனவாய் தாழ்த்தப்பட்டோர்களுக்கு தருமோபதேசஞ் செய்யப் புறப்பட்டிருக்கின்றன. ஐந்துகோடி ஒடுக்கப்பட்ட மக்களின் உடலுயிர் பொருள் மூன்றும் எரிவாய்பட்ட மெழுகென இந்து சமூகத்தினரால் நைந்துருகிக்கொண்டிருக்க அவைகளைப்பற்றிக்கடைக்கண் பார்வையுங் கொள்ளாத அப்பத்திரிகைகள் காந்தியடிகள் இறந்துபட்டால் அப்பெரும் பழியைத்தாழ்த்தப்பட்டவர்கள்தான் ஏற்கவேண்டுமென்று பிதற்ற ஆரம்பித்திருக்கின்றன. நமது எம். சி. இராஜா அவர்கள் அப்பிதற்றலுக்கேற்ற மெய்விதிர்ப்புக்கொண்டு நடனமிட ஆரம்பித்திருக்கின்றார். இவைகள் யோக்கியத்தனமும். அநீதியுமான துணிபுகளென்பதையவைகள் உணர்ந்து கொள்ளுதற்குக்காங்கிரசின் பூரண சுயராஜ்ஜிய சுதந்தரம் இடந்தரவில்லைப்போலும்.

அடிகள் பட்டினி விரதத்தை மேற்கொண்ட சிறிது நாட்களுக்கெல்லாம் வைதீகமதில்களின் வாயல்களெல்லாம் ஆங்காங்கே திறக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களை வாவென்று கூவியழைக்கும் பேரொலி கேட்கப்படுகின்றது. டில்லியில் ஒடுக்கப்பட்டவர்களுக்காக ஆலயம் திறக்கப்பட்டது. ஆமதாபாத்தில் ஆலயத்தடை நீக்கப்பட்டது. பஞ்சாபில் குடி நீர்க்கிணறுகள் ஒடுக்கப்பட்டவர்களுக்காக விடப்பட்டது. சென்னையில் சமபந்தி போஜனத்திற்குக் கூப்பிடப்பட்டது. வேலூரில் தீண்டாமை விலக்குத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. என்னும் ஆர்ப்பாட்டங்களெல்லாம் ஒடுக்கப்பட்டவர் தம் துயர் நிலை போக்கும் உண்மை அன்பினலா? காந்திஜீயைக்காப்பாற்றித் தனித்தொகுதியைக்கைவிடச் செய்யும் சூழ்ச்சியாலா? வேண்டும்போது விடவும் வேண்டாதபோது விலக்கவுமான வைதிகத்திறவுகோல் மேல்ஜாதி இந்துக்கள் கைகளிலேயே இறுக்கிக்கொண்டிருக்கையில், இன்னோரன்ன அறியாதாரையேய்க்கும் அவசரக்கோல ஆர்ப்பாட்டங்கள் எதற்கு? தம்பியென்று தடவிக்கொடுத்துத்தானையவிழ்த்தகயமைக்கல்லால் அதனைவேறெதற்கு ஒப்பிடக்கூடும்?

இனி காந்தியடிகள் மேற்கொண்டிருக்கும் பட்டினிக்கிடப்பால் தாழ்த்தப்பட்டார் நலன்பெறக்கூடுமாவென்பது ஈண்டாராயத்தக்கதாம். அடிகள் பட்டினிகிடப்புக்காக மேற்கொண்டுள்ள காரணங்களைத்துருவிக் காண்போமானல் வியப்பைத்தருமொருசார்புடைத்தாக காணுமென்பதைத்தவிர விளக்கத்தரும் சார்புடைத்தாகவில்லை. ‘சர்வகட்சி மகாநாட்டில் சிறுபான்மையோர் உடன்படிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது தாழ்த்தப்பட்டார்க்குத் தனித்தொகுதியளிப்பதை என் உயிரைக்கொடுத்தாவது தடுப்பேன் என்று காந்திஜீ கூறியுள்ளமையாலும் இந்து மதத்தைக்கவனிக்கையில் தனித்தொகுதியின் பலனாக அம்மதம் பல கூறுகளாகப்பிரிந்து விடும் என்றும், தனித்தொகுதிகளை யேற்படுத்துவது தாழ்ந்த வகுப்பாருக்கே தீங்கு விளைவிக்குமென்றும் என்னுடைய மத சம்பந்தத்தின் காரணமாகவே பட்டினிக்கிடக்கப் போகின்றேனென்றும் முதன் மந்திரி ராம்சேமாக்டொனல்டுக்கும் இந்தியா மந்திரி சாமுவேல் ஹோருக்கும் காந்திஜீ கடிதமெழுதியுள்ளமையாலும் இதுபோது பட்டினவிரதத்தை மேற்கொண்டு விட்டதாகக் காந்திஜீ கூறுகிறார்.

பிரிட்டிஷார் கூறியிருக்கும்படியான தாழ்த்தப்பட்டார் சம்பந்தமான அரசியல் முடிவானது காந்திஜீ நினைக்கும் எண்ணம் தாழ்த்தப்பட்டாருக்காவது இந்து மதத்திற்காவது யாதும் பாதகத்தை விளைக்கக்கூடியதொன்றல்ல. முதன் மந்திரியார் காந்திஜிக்கு விடுத்த தமது விரிவான கடிதத்தில் அதனை இனிது விளக்கிக்காட்டி காந்தியின் வாதத்தை நன்கு தகர்த்தெறிந்திருக்கிறார். காந்தி அதனைச்சிறிதும் மறுத்துக்கூறவொண்ணாதவராய்த் தன்னையோர் மதப்பற்றுடையோனென்னும் நிலையில் மறைந்துக்கொண்டு தமது பிடிவாதமான பட்டினிக்கிடப்பை வற்புறுத்தி வருகின்றார். தாழ்த்தப்பட்டோர் இந்து மதத்தினின்று வேறுபடாதிருப்பதற்கும் தங்களுக்கு இந்து சமூகத்திலுள்ள அசௌகரியமான சிக்கலைப்போக்கிக் கொள்வதற்கும் துணைபோகக்கூடிய முறையிலேயே பொதுத்தொகுதியிலும் தனித்தொகுதியுமாக ஒடுக்கப்பட்டவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் இந்துக்களுடைய பொதுத்தொகுதியில் தாழ்த்தப்பட்டாரைப் பிரிக்காமல் தனித்தொகுதியொன்றே வழங்கியிருந்தாலும் அவர்கள் இந்து மதத்தைக்கடைபிடித் தொழுகுவதில் சிறிதும் முரண்பாடு கிடையாதாம். இங்ஙனமிருக்க தாழ்த்தப்பட்டாருக்கு வழங்கப்போகும் தனித்தொகுதி அவர்களைச்சட்ட மூலமாக இந்து மதத்தினின்று பிரித்துவிடக்கூடுமென்பது சிறிதும் ஆதாரமற்ற வெளிற்றுரையாமென்பது திண்ணம்.

இக்கருத்தை நமது காந்திஜீயும் பிறரும் அறிந்துகொள்ளக்கூடாத விதமாகவோ. அல்லது இருவித பொருள்தரக்கூடிய விகற்பமுண்ணுணர்வோ. அவ்வரசியல் வாசகம் வரையப்படாதிருந்தும் கவர்ன்மெண்டார் அதற்குரியஆதாரங்களைசேர்மையாய் விளக்கிக்காட்டியும் காந்தியார் நியாயத்திற்குக் கட்டுப்படாதவராய் மிக்கப் பிடிவாதத்தோடு தமது கோடலை வற்புறுத்தி நிற்பதை நோக்குழி; அவ்வினைத்து உலவிடுத்த கதைபோல் வேறு அரசியல் காரியத்தை நமது காந்திஜீ உள்ளக்கிடையாகக்கொண்டு மதத்தின் போர்வையில் தாழ்த்தப்பட்டார் தலையில் கை வைக்கப்புறப்பட்டிருக்கின்றார் என்ற துணிபு எவர் மனதையும் ஆட்சிக்கொள்ளும் என்பதிலிழுக்கென்னும்? ஆதலின் திரு. ராம்சேமாக்டொனல்ட் காந்திஜிக்கு எழுதிய கடிதத்தில் இப்பொழுது பல அசௌகரியங்களால் கஷ்டப்படும் தாழ்ந்த வகுப்பினர் தங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான பிரதிநிதிகளைத்தாங்களே தெரிந்தெடுக்கும் சுதந்தரம் பெறுவதைத் தடுப்பதற்காகவே நீங்கள் இவ்விதம் பட்டினிகிடந்து உயிரைவிடப்போவதாகச் சொல்லுகிறீர்கள். என்று அழுத்தந்திருத்தமாகக்கூறியுள்ளமையானது ஆச்சரியப்படத்தக்கதொன்றாயிருக்கிறதா?

தாழ்த்தப்பட்டார் நலனுக்காகவே பட்டினி கிடக்கின்றேனென்று பறையறையுங் காந்தியார் தம்மையோர் சநாதன ஹிந்துவாகப்பாராட்டிக்கொள்வதில் மிகவும் பெருமையுடையோராய்த் திகழ்கின்றார். அங்ஙனம் அடிகள் பிறழாத சநாதன ஹிந்துவானால், வைதீக ஸ்மிருதிகளைப் பின்பற்றி யொழுகும் உறுதியுடையோரானால், பகவத்கீதையை உண்மை நூலென்று நம்புவாரானால், இராம ராஜ்யத்தை வரவேற்கக்காத்திருப்பாரானால், பத்தாம் கலிகாலதாமத்தை எதிர்பார்த்திருப்பாரானால், அவரவர்களுக்குரிய பிறவித்தொழிலையே போற்றவேண்டுமென்று சாற்றுவாரானால், தீண்டாதாரை இந்துக்களோடு சமத்துவமுறச் செய்வதற்கு என்ன மார்க்கமுண்டென்று அறிய விரும்புகிறோம். அங்ஙனம் சமத்துவமுறச் செய்ய இந்துமதத்தில் வழியுண்டென்று காதிக்கின், சநாதனதர்மத்திற்கு மிகவும் இன்றியமையாதனவாகிய நான்கு வருணத்தாருள் எவ்வகுப்பாருக்குள் சமமாகத் தாழ்த்தப்பட்டாரைச் சேர்க்கப்போகின்றார். தாழ்த்தப்பட்டார்க்குச் சமத்துவமீந்து வரவேற்கக்காத்திருக்கும் வருணத்தார் யார்? மத நடுவு நிலைமையும், மதக்கலைகள் காப்பும் காங்கிரஸ் சுயராஜ்ய திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதின் பொருளென்ன? தாழ்த்தப்பட்ட மக்கள் விலக்கப்பட்டிருப்பதற்கு, இந்து மதமும் இந்துக்களுமே காரணமென்பதைக் காந்தியடிகள் ஒப்புக்கொண்டு “பல நூற்றாண்டுகளாகத் தாழ்ந்த வகுப்பினரைத் தாழ்வு படுத்தி வைத்திருப்பதற்காக ஜாதி இந்துக்கள் எவ்விதப் பிராயச்சித்தம் செய்தாலும் பரிகாரமாகாது” என்று கூறுகிறார். ஆதலின் இந்துக்கள் தங்கள் அக்கிரமத்தைக் கைவிட்டுத் தாழ்த்தப்பட்டாருக்கு நீதி வழங்குங்காலம் பட்டினி கிடந்து வெற்றியுறலாது காந்தியடிகள் என் முனையவில்லை. தங்கள் கையை தங்களுக்குதவியாக வேண்டுமென்ற முயற்சியிலீடுபட்டு முன்னேற்றத்திற்று அலைவி நிற்கும் ஒடுக்கப்பட மக்கள் கைகளுக்கு விலங்கிட்டுப் பிணிக்க நமது காந்தியார் பட்டினி கிடப்பாரானால் அதனைப் பொருள்படுத்த எதேனும் நியாயமுண்டாவென்பதை வாசகர் ஆராய்ச்சிக்கு விட்டுவிடுகின்றேன். அடுத்த கட்டுரையில் காந்தியடிகள் மேற்கொண்ட பட்டினிகிடப்பின் அரசியல் சூழ்ச்சியை விளக்குவாம்.

# "சமதர்ம முரசு"

## தனி ஒருவனுக்குணவிலையெனில் ஜகத்தினை யழித்திடுவோம்!

"35 கோடி ஜனங்களின் சங்க முழுமைக்கும் பொதுவுடைமை" பெற முயல்வதே நம்கடமை.

(தோழர் A. இரத்தினசபாபதி)

(6)

மன்னர் முதல் தோட்டி வரையுள்ள மக்கள் அனைவருக்கும் பசி பொதுவானதே யென்பதையும் மனிதரின் அந்தஸ்தில் எவ்விதபேதம் இன்றைய உலகில் காணப்படினும், இந்தப்பலவான அந்தஸ்துள்ளோருக்கும் இயற்கை நியதி ஒரே விதமாகவே இருக்கிறதென்பதையும் சென்ற கட்டுரையில் கண்டோம். மற்றும், உலகில் ஏன் ஒரு சிலர் செல்வந்தராயும், மற்றபெரும்பாலானோர் ஏன் ஏழைகளாயிருக்கின்றார்களென்பதையும் தெரிந்தோம். அதாவது நாடு, நாட்டுமக்களனைவருக்கும் சொந்தமான பொதுவுடைமையாகவிருக்க ஒரு சில தனிநர்கள் பெரும்பதி நிலங்களை தங்களின் தனி உடைமையாக வளைத்து கொண்டிருப்பதாலேயே என்பதை விபரமாக விளக்கினோம். இவ்வாறு "பசி" என்பது எல்லாமக்களுக்கும் இயற்கையான பொருளாயிருக்கையில், மனிதனை ஏற்படுத்திக்கொண்ட அந்தஸ்து பேதத்தையெண்ணி அவர்களது உணவு விஷயத்திலும் அந்தஸ்து பேதம் காட்டுவதாகாது எனக்கூறுகையில் எழும் இரண்டொரு ஆக்ஷேபனைகளுக்கு இடையில் விடையிறுப்பாம்.

### அறிவும் அந்தஸ்தும்.

இப்போதைய உலகில் காணப்படும்சகல அந்தஸ்தும் அவரவர்கள் செய்யும் தொழிலைப்பொறுத்திருக்கிறதென்பதை எவரேனும் மறுக்க முடியுமா?—முடியாது. ஆனால், இத்தொழில் பேதங்கள் எதைப் பொறுத்திருக்கிறதென ஆராயுங்கால் இன்றைய உலகில் அது இரண்டு விஷயங்களின் மேலேற்படுகிறது. (1.) அறிவு. (2.) செல்வம். இந்த "அறிவு, செல்வம்" ஆகிய வற்றில், ஒருவன் செல்வந்தனாயிருக்கிறானென்பதற்காக, அதாவது, ஓர் செல்வந்தனின் மைந்தனாகப்பிறந்திருக்கிறானென்பதற்காக அவனது அந்தஸ்தை எல்லாவழிகளிலும் உயர்த்திவிடுவது கண்டிக்கத்தக்கதாகும். ஆனால் அறிவின் விஷயமோ? அது வேறு விதமானது.

எவ்வாறெனில், இன்று நாம் 10 ஜனங்களை ஓரிடத்தில்சேர்த்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் 10 ரூபாய்கள் கொடுத்து, அதை நல்லவழியில் உபயோகித்துக்கொள்ளும்படி கூறினால், அவர்களில் சிலர் அப்பணத்தை எடுத்துக்கொண்டு கள், சாராயக் கடைகளுக்குச் செல்வார்கள், சிலர், நாடகம், லோக்கல் சினிமா முதலிய தமாஷ்களில் அப்பணத்தைச்செலவிடுவார்கள், வேறுசிலர், அதனை எடுத்துக்கொண்டு தாசி வீடுகளுக்கும் சூதாடுமிடங்களுக்கும் செல்வார்கள், இன்னுஞ்சிலர் அப்பணத்தைக் கொண்டு, அறிவுபயக்கும் நல்லபுத்தகங்களை வாங்குவார்கள்; சிலர் நல்ல ஆபரணங்கள் பெறுவார்கள், சிலர் தங்கள் வீட்டிற்கு வேண்டிய சாமான்களை வாங்குவார்கள். இங்ஙனமாக அவர்கள் வெவ்வேறான வழிகளில் பணத்தைச்செலவிடுவது எதனால்? "அவரவரது அறிவின்தன்மையால்" என்றவிடைதான் நமக்குக்கிடைக்கிறது.

எனவே, அறிவுடைய ஒருவன் எல்லா விஷயங்களிலும் நன்மைபெற வழியிருக்கிறது. அல்லாமலும் உலகம் அறிஞர்களுக்கு என்றும் மதிப்புத்தரும் என்பதில் ஆக்ஷேபனையில்லை. இந்த அறிவு எதனால் பெறப்படுகின்றதென நோக்குங்கால் "கல்வியால்" என்றபதில் நமக்குக் கிடைக்கிறது. தற்காலத்திய பட்டப்படிப்பற்ற எத்தனையோபேர் மிகுந்த அறிவாளிகளாக விருக்கவில்லையா, என்றுசிலர் கேட்கலாம். ஆம்! இருக்கிறார்கள்! நாமதை மறுக்கவில்லை. ஆனால் அதன்காரணம் அவர்களது பெற்றோரது உலகானுபவமேயாகும்.

பொதுவாக ஒருவனுக்கு அறிவு வேண்டுமானால் அவன் கல்விகற்றாக வேண்டும். எனவே மக்களனைவரும் அறிவுபெறவேண்டுமானால், அவர்களெல்லோரும் கல்விகற்கவேண்டும் எல்லோரும் கற்கவேண்டுமானால், எல்லோருக்கும் சந்தர்ப்பமான வசதி நாம் அமைத்துக்கொடுக்கவேண்டும் அல்லது அமைக்கப்பட்டிருக்கவேண்டும். ஓர் நாட்டைப் பரிபாலிக்கும் முடியரசோ, அல்லது குடியரசோ அது எதுவாயிருப்பினும், அங்கெல்லோருக்கும் பொதுவான அறிவைத்தரத்தக்க கல்வியை அவர்கள் கற்பிக்கும்படி வசதிகள் செய்வதுதான் வேண்டியது அவ்வரசாட்சியின் கடமைகளில் ஒன்றாகும்.

ஆகவே, ஒரு அரசாங்கத்தின் கீழுள்ள குடிஜனங்கள் ஆண் பெண் அனைவரும் ஓரளவு பொதுக்கல்வி பெற்றுத்தீரவேண்டு மென்னும் திட்டத்தை அவ்வரசாங்கம் கைக்கொள்ளவேண்டும். அதுவும், மனிதனுக்கு அவசியமான அறிவைத்தரும் கல்வி அவசியமென ஏற்படும் பொழுது, தனது குடிகளின் நன்மையை நாடும் அரசாங்கம், எல்லாமக்களும் அக்கல்வியைக்கற்கும் படியான வசதியளிக்கவேண்டும். இந்த இடத்தில் தான் கட்டாய இலவசக்கல்வி என்னும் திட்டம் இடம்பெறுகிறது.

நாட்டிலுள்ள ஆண் பெண் அடங்கலும், ஓர் குறிப்பிட்டவயது வரையில் எல்லோருக்கும் பொதுவான கல்வியைக்கற்கும் படிக்குக்கட்டாயச்சட்டமும், அவ்வாறு எல்லோரும் கற்பதற்கேற்றவாறு, இலவசமாக அக்கல்வியைப்புகட்டும் திட்டமும் ஏற்படில், அந்நாட்டிலுள்ள எவரும் கல்வியற்ற முட்டாள்களாக விருக்க முடியாது. ஆனால், ஓர் குறிபிட்ட காலம்வரையில், பொதுவான கல்வியையே எல்லோரும் கற்றபோதிலும் ஆசிரியர்கள் பாரபக்ஷமற்று போதித்தபோதிலும், அக்கல்வி பயிலும் எல்லாப்பிள்ளைகளும் ஒரேவிதமான அறிவைப்பெறுவார்களெனக்கூறமுடியாது. இது உலகின்பிரத்தியட்சப் பிரமாணமாயிருப்பதால், வேறுதிருஷ்டாந்தங்கள் கொண்டு இதனைவிளக்கத்தேவையில்லை.

### அறிவும் பதவியும்.

இந்த நியதியின்படி, ஓர் நாட்டின் எல்லாமக்களும் ஒரேவிதமான கல்வியைப்பெறும்படி அந்நாட்டின் அரசாங்கம் வசதியளித்தபோதிலும், எல்லாமக்களும் ஒரேதன்மையான அறிவைப்பெற முடியாதென்பதாகிறது. ஆகவே அவனவன் அறிவின் முதிர்ச்சிக்குத்தக்கபடி அவனவன் வேலை செய்யவேண்டியது நியாயமாகும். இதனையாவரும் மறுப்பதற்கில்லை—ஒரேகல்விச்சாலையில், ஒரேவயதில் சேர்ந்து, ஒரேவிதமான பாடங்களைக் கேட்டு, ஒரேகாலத்தில் வெளியில் வந்தபலமாணுக்கர்களுள், அவரவர்கள் அறிவு எவ்வளவுதூரம் விருத்தியடைந்திருக்கிறதோ, அதன்பிரகாரமாக அம்மாணுக்கர்களில் ஒருவன் ஜட்ஜாகவும், வேறொருவன் கலெக்டராகவும், இன்னொருவன் வக்கீலாகவும், ஒருவன் டாக்டராகவும், ஒருவன் இஞ்சினியராகவும், ஒருவன் ஆசிரியராகவும் ஒருவன் குமாஸ்தாவாகவும், ஒருவன் சமையல் செய்வோனாயும், ஒருவன் துணிநெய்வோனாகவும், ஒருவன் வீடுகட்டுவோனாகவும் ஒருவன் வேறேதேனும் முரட்டு வேலை செய்வோனாகவும், ஒருவன் சிறந்த ஓவியம் (படம்) வரைவோனாகவும் ஒருவன் சிறந்த கவியாகவும் ஆகலாம் அது அவரவர்களின் அறிவு அவரவர்களுக்கு அளித்தபதவி.

கல்விகற்றுத்தாலும் பேரறிஞனாவதற்கான வசதிகளிருந்தும், சோம்பேறித்தனமாகவும், கருத்தில்லாத்தனமாகவும் கலாசாலைநாளைக்கழித்த ஒருவன் தனது மட்டமான அறிவிற்குத்தகுந்த வண்ணம், வண்டியோட்டவோ, பங்காஇழுக்கவோ, மற்ற இதுபோன்ற வேலைகளையோ செய்கிறான். தனக்குக்கொடுக்கப்பட்ட கல்வியின் காலத்தைக்கிரமமாக உபயோகித்து அறிவு விருத்தி பெற்றவர்கள் நியாயாதிபதி, டாக்டர், வக்கீல், ஆசிரியர்போன்ற கௌரவமான பதவியைப்பெறுகிறார்கள்' இது நியாயமே. கல்வியைச்சீராகக்கற்றவன் நாற்காலியில் அமர்ந்து நியாயவிசாரணை செய்கிறான். இதுசரி! கல்வியற்றவன் அந்தநியாயாதிபதிக்குப்பின்னால் கால்கடுக்கநின்று, கைகடுக்கபங்கா இழுக்கிறான். இதுவும்சரி!—இந்த நியாயாதிபதியுடையவும் இந்த பங்காவாலாவுடையவும் அறிவிற்கு, கல்விக்குத்தக்க பதவிகளை அவர்கள் வகித்திருப்பதுசரி. ஆனால், சாப்பாட்டு வேளைவந்தவுடன் அந்தநியாயாதிபதிக்குப்பசியுண்டாகிறது போலவே இந்த பங்காவாலாவிற்கும் பசியுண்டாகிறதா இல்லையா என்பதுதான் நமது கேள்வி. இதைஇல்லையென்றுயார்மறுக்க முடியும்?

### பசியும் அந்தஸ்தும்.

இந்த நியாயாதிபதிக்கும் அந்த பங்காவாலாவுக்கும் கல்வித்திறமையில் வித்தியாசமிருக்கிறது. அந்த நியாயாதிபதியைப்போன்றே கல்விகற்றுக்கொள்வதற்கு இவனுக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தும், இவன் அதைச்சரியானபடி உபயோகித்துக்கொள்ளாதபடியால் அவ்விருவருக்குமுள்ள பதவியில்பேதமேற்பட்டிருக்கிறது. கல்விகற்றதன் பயனாய் சொகுஸாக நாற்காலியிலமர்ந்து நீதிபதி அமுல் நடத்துகிறார். கல்வி கற்றுக்கொள்ளாததன்பயனாய் இந்தபங்காவாலா கஷ்டத்துடன் பங்காஇழுக்கிறான். இது இவ்விருவரது கல்வி லேற்பட்டுள்ள பேதத்தின் பயன்.

ஆனால்,இவ்விருவரது கல்விக்கும் இவர்கள் செய்யும் தொழிலுக்கும் பேதமிருப்பதுபோல, இவ்விருவருக்கும் வயிற்றுப்பசியுண்டாவதில் பேதமுண்டாவென்பது நமதுகேள்வி கூறுமிடத்து அவ்விருவரும் செய்துள்ள வேலைகளுக்குத்தகுந்தாற்போன்று ஒருவருக்குச்சற்று முன்னதாகவே பசித்துவிடலாம்; மற்றவருக்குச்சிறிது தாமதமாகப்பசிக்கலாம் இதைத்தவிர அந்நியாயாதிபதிக்கும், இந்த பங்காவாலாவுக்கும் வயிற்றுப்பசியில் அந்தஸ்துபேதம் எதையும் காணோம். எனவே அவரவரது கல்விக்குத்தக்க தொழிலை அவரவர்கள் செய்த போதிலும், பசிநேரத்தில் அவர்களெல்லோருக்கும் வயிறார உணவளிக்கவேண்டும். ஏனெனில்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

# சென்னை கார்ப்பொரேஷனும் கனம் சங்கராச்சாரியும்.

## உபசாரப்பத்திரம் பொருத்தமுடையதா?

(தலையங்கம்)

கும்பகோணம் காம். சங்கராச்சாரிக்கு சென்னை கார்ப்பொரேஷன் சபையார்கள் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுப்பதாகத்தீர்மானித்திருக்கிறார்கள்.

ஒருசபையோ, சங்கமோ, சமூகமோ ஒருவருக்கு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கும் தத்துவம் உங்களுக்குத்தெரியும். உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கும் சபைக்கும் அதைப்பெற்றுக்கொள்ளும் அவருக்கும் பொருத்த மிருக்கவேண்டியது அவசியம். அப்பொழுதுதான் அந்த உபசாரப்பத்திரத்திற்கும் அதில் சம்மந்த பட்டவர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் பலனுமுண்டாகின்றன. அப்படியில்லாதிருந்தால் அந்த உபசாரப்பத்திரம் நம்முடைய மதிகெட்ட குணத்திலிருந்து வந்த மானங்கெட்ட செய்கையென்பதற்குச்சந்தேகமில்லை. மதிகெட்ட குணமும், மானம் கெட்ட செய்கையுமாயிருப்பதைப்பார்த்துத்தான் நம்மை அன்னியர்கள் நகைத்து சுயராஜ்ஜியத்தின் பொருப்பிற்கு லாயக்கில்லாதவர்களென்று சொல்லுகிறார்கள்.

ஒருசபையோ அதன் சங்கங்களோ யாருக்கு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கின்றனவோ அந்த நபர் அந்த சபையின் அமைப்பையும் அதன் ஆற்றலையும் தெரிந்து அனுபோகப்பட்டு அவைகளில் உழைத்து அதில் மேன்மையடைந்து, அதன் செய்கை ஒன்றிலேனும் பிரக்யாதியடைந்து, அச்சபையின் விருத்திக்கு அவர் அனுபோகம் உபயோகப்பட்டு, அவ்வழியில் மற்றவர்களும் நடந்துகொள்ள காரணமாயிருக்க வேண்டுவது அவசியம். அப்படியல்லாவிட்டால் அந்த உபசாரப்பத்திரம் பிரயோஜனப்படாமல் போவது மல்லாமல் அன்னியர்கள் கண்டுகேட்டு நகைப்பதற்கும் உள்ளில் அவமதிப்பதற்கும் ஏதுவாகும்.

எல்லாசபைகளும் சக்கரவர்த்திக்கோ அவரால் ஏற்படுத்தப்பட்ட பிரதி நிதிக்கோ மரியாதை செய்கின்றன. சட்டத்திற்குள் அடங்கின எல்லாசபைகளையும் அதன் வழிநடந்துசெல்லும் தடைகளை நீக்கி அதற்கு உதவிசெய்ய வேண்டுவது சக்கரவர்த்திக்கும் சக்கரவர்த்தியின் பிரதிநிதிகளுக்கு பொருப்பானதால் எல்லாசபைகளின் ஏற்பாடுகளையும் சக்கரவர்த்தியின் பிரதி நிதிகள் உணர்ந்திருக்கிறார்கள். என்பதைக்கொண்டு ராஜப்பிரதி நிதிகளுக்கு சபைகள் உபசாரப்பத்திரம் வாசிக்கின்றன. இதல்லாமல் பல சபைகளுக்கும் சங்கங்களுக்கும் ஜன சமூகத்திற்கும் பணத்தை ஏராளமாகக் கொடுத்தபிரபுக்களுக்கும் எந்தசபையும்உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுப்பது பொருந்தும். எப்படி என்னில் சக்கரவர்த்தியின் அதிகாரத்தின் உதவி எந்த சபைக்கும் வேண்டுவது போல பிரபுக்களின் பணமும் சபைக்குவேண்டும்.

ஒரு சபைக்கு அந்த சபையின் ஏற்பாட்டிற்குத்தக்க அறிவு அந்நிலையுடையவர்களின் உதவி அநுபோகம் சபையின் ஒழுங்கைகாக்கும் அதிகாரம். அந்த அதிகாரத்தைவகிப்பவர்களின் சிநேகம், அந்த சபையின் தொழில் நடைபெறப்பணம், அந்தப் பணத்தைக்கொடுக்கும் பிரபுக்கள் இவர்கள் சபைகளால் மதிக்கப்பட்டவர்களாகவும் மதிப்பிற்குரியவர்களாகவும் இருக்கிறார்கள். அப்படியிருக்க சென்னை கார்ப்பொரேஷனுக்கு இந்த ஒன்றிலேனும் சம்மந்த மில்லாத கனம். சங்கராச்சாரிக்கு உபசாரப் பத்திரம் வாசித்து கொடுப்பது எந்த நியாயத்தில் பொருத்த முடையது என்பதை ஆலோசித்துப்பாருங்கள்.

கனம் சங்கராச்சாரியும் அவரைச் சார்ந்த பண்டிதர்கள் அவர்சமயம், சாஸ்திரம், தேவர்கள், மந்திரங்கள், கிரிகை, சடங்கு, ஆசார அனுஷ்டான வழக்கங்கள் எல்லாம் முனிசிபாலிட்டிக்குவிரோதமானவைகள். முனிசிப்பாலிட்டியின் ஏற்பாட்டிற்கு எதிரிடையானவைகள். அதுமட்டுமல்ல முனிசிப்பாலிடியைப்பற்றி சங்கருடைய சமயத்திலுமில்லை. சாஸ்திரத்திலுமில்லை, வழக்கபழக்க ஏற்பாட்டிலுமில்லை. உண்மையாகச் சொல்லுவதனால் அவர் கும்பிடும் தெய்வத்திற்குக்கூட முனிசிப்பாலிடியைப் பற்றித்தெரியாது. அவர்கும்பிடும் தெய்வத்திற்குத் தெரியுமானால் அந்த தெய்வம் சொன்னதாகச் சொல்லப்படும் சாஸ்திரங்களிலிருக்க வேண்டும் தெயவத்தினிடம் அன்னியோன்ய சம்பந்தமிருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் ஆசாரியிடமிருக்க வேண்டும், அல்லது அவரைச் சார்ந்த சாஸ்திரிக்கூட்டம் சிஷிய கோஷ்டிகளிடமிருக்கவேண்டும், அவ்விதமில்லாததினால் அவர் கும்பிடும் தெய்வத்திற்கே சென்னை கார்பொரேஷனைப்பற்றி தெரியாதென்பது பொருந்தும்.

முதலாவது சென்னைக்கு கனம். சங்கராச்சாரி ஏன் வருகிறார், ஏழை எளியவர்களின் கஷ்டத்தைப்பார்த்துப் பரிகரிக்கவா? சாக்கடை நாற்றத்தைப் போக்கவா? அம்மை சுரம் முதலிய தொத்துநோய்களைத் துலைக்கவா? அதற்கு ஆஸ்பத்திரி கட்டவா? மேலே போகும்சாக்கடையைக் கீழே போக்கவும், கீழேபோகும் ஜனங்களை மேலே தூக்கவும் கணக்குப் போட்டுச் சொல்லவா? இவை ஒன்றுமல்ல. சென்னையில் பெரிய வக்கீல், வியாபாரி, துபாஷி, உத்தியோகம் முதலிய எல்லாத்துறைகளிலும் பணம் சம்பாதிப்பவர்களிருக்கிறார்' வைசியராக நினைத்துக் கொண்டிருக்கும் செட்டியார்களிருக்கிறார்கள். வைசியராக நினைக்கும் செட்டியார்களிருக்கிறார்கள். தடபுடல்காரர்கள், பெருமைக்காரர்கள், ஏமாளிக்காரர்கள் பலரிருக்கிறார்கள். புரோக்கர் வேலைக்கு தங்களிடத்தில் அதிசாமர்த்தியமுடைய வக்கீல்களிருக்கிறார்கள். அங்கு போனால் அதிகப்பணம் திரட்டலாமென்று வருகிறார், இந்த அவர் ஏற்பாட்டிற்கு முனிசிபாலிட்டியும் உபசார பத்திரம் வாசித்துக் கொடுத்தால் விளம்பரமாகும், காரியத்திற்கு அநுகூலம், மரியாதையும் வரும். ஒதுங்கி நிற்கும் பணக்காரனையும் உள்ளிற்கு இழுத்துக்கொள்ளலாம், வராத பணக்காரனை வக்கீலைக் கொண்டு பிடிக்கலாம், இன்னும் பலரைப் பலசிபார்சுகளால் சுற்றிப் பணம் திரட்டிவிடலாமென்பதை ஆலோசித்து தான் உபசாரபத்திர ஏற்பாடும் நடந்திருக்கிறது.

கனம் நாராயணசாமி செட்டியாரல்லவோ உபசார பத்திரம் வாசித்துக் கொடுக்கத் தீர்மானம் கொண்டு வந்தது. அது ஏன் என்பதிலுள்ள எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன். இப்பொழுது வைதீகக்கொடுங்கோன்மையை நிலை நிறுத்த வேண்டுமானால் பார்ப்பார்கள் முன் நிற்காமல் பின்னால் நின்று வைசியர்களாக நினைக்கும் நாராயண செட்டியார் போன்றவர்களை முன்னால் காட்டிச் சொல்லுவது வழக்கமாகவிருக்கிறது. கலியுகத்தில் பிராமண ஜாதியும் சூத்திர ஜாதியும் தவிர, வைசிய ஜாதியும் க்ஷத்திரிய ஜாதியும் இல்லை என்று பார்ப்பார சபைகளிலும் பார்ப்பார்களும் பேசி வருவதை நாராயண செட்டியார் அறியார். கோமுட்டி செட்டியார்கள் பார்ப்பானுக்கும் கீழ் ஜாதிப்பெண்ணுக்கும் பிறந்தவரென்று புஸ்தகத்திலெழுதி வைத்து ஊரெல்லாம் பரப்பி இன்னும் வைசியராக்கிக் கொண்டு தான் வருகிறார்கள். பிராமணனைத் தவிர மற்றவருனைத்தினர் எல்லோருக்கும் அவரவர்களின் புரோகிதனுடைய கோத்திரம் தான் என்று சாஸ்திரத்தில் எழுதப்பட்டிருப்பதை நாராயணசெட்டியார் அறியமாட்டார். இவர் பூணுல் போட்டு வைசியனாகி சங்கராச்சாரிக்கு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்தாலும் சங்கராச்சாரியுடைய மதமும் அவருடைய சாஸ்திரமும் நாராயண செட்டியாரை பிராமணனின் தாசிமகனென்றே சொல்லுவதையும் அவர் அறியார். நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கராச்சாரிக்கு ஏராளமான பொருளைக்கொடுத்து தனவைசியரானார்கள். அதில் சோமசுந்திரம் செட்டியாரைப் போல தென்னாட்டில் சங்கராச்சாரிக்கு உபசாரம் செய்தவர்களில்லை என்றே சொல்ல வேண்டும். இப்பொழுது அவர் குடும்பமும், அவருக்குப் பாதகாணிக்கை கொடுத்த குடும்பமும் சொத்தும் கீழ் நிலையடைந்ததற்குச் சங்கராச்சாரியின் ஆசீர்வாதம் ஒரு தூசிக்கூட உதவவில்லை என்பது நாராயணசெட்டியார் முன்னால் நின்றாலும் அவர் அறியார். உத்தம பிராமணன் அல்லாதவனுக்கு எவன் தானம் கொடுக்கிறானோ அவர் குடும்பத்தின் உயர்ந்த நிலை கெட்டுவிடும் யென்பது தரும சாஸ்திரமான ஸ்மிருதியின் விதி என்பதையும் அவர் அறியார். பொருள் சேகரித்து இருப்பு வைத்துக் கொண்டிருக்கும் கள்ளனை குருவென்று உபசரிக்கக்கூடாதென்று பராசஸ்மிருதியில் எழுதியிருப்பதை பார்ப்பார்கள் படித்துக் காட்டவில்லை. பார்ப்பார சமூகத்தின் முகஸ்துதிக்கோ பார்ப்பார சிநேகிதர்களின் சிநேகத்திற்கோ, சங்கராச்சாரியின் ஆசீர்வாதத்திற்கோ எதற்காகவோ உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கட்டும் முனிசிப்பாலிட்டிக்கும் சங்கராச்சாரிக்கும் உபசாரப்பத்திரம் பொருத்தமுடையதல்லவென்பதை மகாஜனங்கள் தெரியவேண்டும். அப்பொழுது விவேகமும் மனிததன்மையுமுடையவர்கள் தான் ஜனநாயகத்துவசபைகளுக்கு லாயக்குடையவர்கள் என்பதும் விளங்கிவிடும்.

முனிசிப்பாலிட்டியானது ஜனசமூகத்திற்கு வேண்டிய சுகாதாரம், கல்வி, தண்ணீர், அரசு, முதலியவைகளை நிர்ணயித்து அதை ஜனசமூகத்திற்குச்சரியாகப்பங்கிட்டுக் கொடுக்கும் ஜனநாயகத்துவத்தின்ஸ்தாபனமாகும். முனிசிப்பாலிட்டியானது ஆங்கிலேயர்களின் கொள்கைப்படி ஆங்கிலசட்டத்திலடங்கினவை. சங்கராச்சாரிக்குப்பிரதான சட்டம் ஸ்மிருதிகள், ஸ்மிருதிகளுக்கு விரோதமாகவோ அதையுக்தி வாதங்களில் விபகரிப்பவனே நாஸ்திகனாவான் என்பது இந்துமதத்தின் விதி.

சமூகம் ஒன்றுசேருவதற்கே சங்கரர்சட்டம்விரோதியாக இருக்கின்றன ஒரு சமூகம் கண்ணுக்குத்தெரியாமலும் ஒரு சமூகம் 64 அடியும், இன்னொருசமூகம் 32 அடியும், மற்றொரு சமூகம் 16 அடியும், பின்னொரு சமூகம் சமீபத்தும் விலகிநிற்கும் படியாக விதித்தும் அனுபோகப்படுத்தியும்சங்கரர்சட்டம்செய்திருக்கின்றன.

கல்வி எல்லாருக்கும் பொதுவென்கிறது, முனிசிப்பாலிட்டி கல்வி உயர்ந்த ஜாதியார்களுக்குமட்டும் தான் மற்றவர்களுக்கில்லை என்கிறது சங்கரர்சட்டம்'

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

# புதுவையில் இரண்டு சுயமரியாதைத் திருமணங்கள்.

## திருமதி இந்திராணி அம்மாள் அவர்கள் நடத்திவைத்தார்

புதுவை முத்தால்பேட்டை கனம் சு. மா. அண்ணாமலை செட்டியார் அவர்கள் பங்களாவில் 15—9—32 வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தோழர் சிவசங்கரனுக்கும் திருமதி கிருஷ்ணவேணிக்கும், தோழர் கேசவனுக்கும், திருமதி பவுனம்பாளுக்கும் சுயமரியாதைக் கொள்கைப்படி திருமணம் நடைபெறும் என்று பொது மக்கட்குஅறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி குறித்த காலத்தில் ஆண்களும் பெண்களுமாக ஆயிரக்கணக்கான மக்கள் பெருந்திரளாக வந்து கூடினார்கள். உள்ளூர் வெளியூர்களிலிருந்தும் பல பிரமுகர்கள் திருமண நிகழ்ச்சிக்கு விஜயம் செய்திருந்தார்கள். பாரீஸ் பெண்மணிகள் பலர் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்டது பெரிதும் குறிப்பிடத்தக்கது. திருமணப் பங்களா வெகு விமரிசையாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. திருமண மக்கள் தங்கள்தங்கள் ஆசனத்தில்அமர்ந்தார்கள். தோழர் பாரதிதாசன் அவர்கள் பிரஞ் இந்திய அரசாங்க அமைச்சர் தோழர் ஏ. வி. முத்தையா அவர்களை தலைமை வகித்து நடத்திக்கொடுக்குமாறு வேண்டினார்.

தோழர் ஏ. வி. முத்தையா அவர்கள் தலைமை வகித்து சுயமரியாதைத் திருமணத்தின் உண்மைத் தத்துவங்களை விளக்கிக்கூறி இம்முறையை எல்லா மக்களும் பகுத்தறிந்து பின்பற்ற வேண்டுமென்றும், இதுபோன்ற திருமணங்களை அவசியம் பதிவு செய்துவிட வேண்டுமென்றும், திருமணத்தை சிக்கன முறையில் நடத்துதல் தான் அவசியமென்றும், மணமக்கள் சீர்திருத்த முறையைப்பின் பற்றியது பாராட்டத்தக்கதென்றும் பேசினார். பின் தான் அவசர நிமித்தமாக வெளியில் செல்லவேண்டியிருப்பதை முன்னிட்டு பிரஞ் இந்திய சட்டசபை மெம்பர் தோழர் பி. இராமச்சந்திரன் அவர்களை தலைமை வகித்து பிற நிகழ்ச்சிகளையும் சிறப்புற நடத்திக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு விடை பெற்றுக்கொண்டு சென்றார்.

தோழர் பி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமை யேற்று முன்னுரை கூறியபின் தோழர் அ. பொன்னம்பலம்அவர்களை "சுயமரியாதைத் திருமணமும் வைதீகத்திருமணமும்" என்பதுபற்றி பேசுமாறு கேட்டுக்கொண்டார்.

தோழர் அ. பொன்னம்பலம்அவர்கள் "வைதீகத்திருமணங்களின் போக்கைப்பற்றியும், சுயமரியாதைத்திருமணங்களின் சிறப்பைப்பற்றியும் மிக விளக்கமாகவும் விரிவாகவும் விரிவுரை நிகழ்த்தினார்.

தலைவரவர்கள் திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மாஅவர்களை இரு திருமணங்களின் ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

திருமதி இந்திராணிபாலசுப்பிரமணியம் அம்மாள் அவர்கள் இரண்டு மணமக்கள் தம்பதிகளையும் தங்கள் தங்கள் ஒப்பந்தங்களை சபை முன்னர் வெளியிடும்படி செய்தார்கள். ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர் முறையே மலர் மாலை மாற்றிக்கொண்டும் மோதிரம் மாற்றிக்கொண்டும் திருப்பூட்டி அமர்ந்தார்கள்.

திருமதி இந்திராணிபாலசுப்பிரமணியம் அவர்கள் மணமக்களைப்பாராட்டியும் சுயமரியாதைத் திருமணத்தின் அவசியத்தை வலியுறுத்தியும், பெண் மக்கள் இத்தகைய செயல்களுக்கு முன்வர வேண்டுமென்றும், விரிவுரை நிகழ்த்தினார்.

தோழர் பாரதிதாசன் அவர்கள் மணமக்களுக்கு வாழ்த்துப்பத்திரம் ஒன்று வாசித்துக்கொடுத்தார். அதில் சுயமரியாதை இயக்கக்கொள்கைகள் முழுதும் விளக்கப்பட்டும், எதிர்ப்பவர்களின் யோக்கியதையை எடுத்துக்காட்டப்பட்டுமிருந்தது.

தோழர் பண்டிதர் திருஞான சம்பந்த அவர்கள் மணமக்களைப்பாராட்டியும் சீர்திருத்தத் திருமணத்தின் சிறப்பைப்பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்.

மணமக்கள் எல்லோருக்கும் நன்றிகூறியமர்ந்தார்கள். தலைவரவர்கள் முடிவுரைக்குப்பின் எல்லோருக்கும் மலர்மாலை, சந்தனம், மிட்டாய், தாம்பூலம் வழங்கினார்கள். பகல் 1மணிக்கு சமபந்தி விருந்து ஒன்று சிறப்பாக நடைபெற்றது.

### மாலை பொதுக்கூட்டம்.

மாலை 5 மணிக்கு திருமணப்பங்களாவிலேயே மீண்டும்பொதுக்கூட்டம்ஆரம்பமாயிற்று. பெருந்திரளான மக்கள் காலையைவிட அதிகம் வந்து கூடி விட்டார்கள். சட்டசபை மெம்பர் தோழர் பி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்து "மோக்ஷ இச்சை" என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினார். சட்டசபை மெம்பர் தோழர் சு, பெருமாள் அவர்கள் "எதைப்பின்பற்றுவது?" என்பது பற்றி விரிவுரை நிகழ்த்தினார். தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் "மூடப்பழக்கவழக்கமும் கல்விக்குறைவும்" என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினார். தோழர் பண்டிதர் திருஞானசம்பந்தர் அவர்கள் "காந்தீயமும், தனித்தொகுதியும்" என்பது பற்றி பேசினார். திருமதி. இந்திராணி அம்மாள் அவர்கள் பெண்கள் முன்னேற்றம் என்பதுபற்றி பேசினார். 'திராவிடன்' ஆசிரியர் தோழர் டி, வி. சுப்பிரமணியம் அவர்கள் "சுயமரியாதை இயக்கம் அவசியமா?" என்பதுபற்றி பேசினார்.

பின் தலைவரர்கள் முடிவுரைகூறினார். எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 8-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

இத்திருமணத்தின் பொருட்டு சுயமரியாதை இயக்கத்தோழர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கதாகும். (ஒரு நிருபர்.)

# ஈரோட்டில் பொதுக்கூட்டம்.

## டாக்டர் அம்பெத்காருக்கு ஆதரவு.

### திரு. காந்தியின் உயிரைக்காப்பாற்றுவது யார் கடமை?

ஈரோடு அலிசவுக்கில் 21-9-32. புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு தோழர் எல். வி. லிங்கம் அவர்கள் தலைமையில் ஓர் 'பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள். அ. பொன்னம்பலம் என். பி. காளியப்பன் முதலியவர்கள் தீண்டாமை யொழித்தலைப்பற்றியும், காந்தியின் உண்ணாவிரத உயிர்தியாகத்தைப்பற்றியும், தனித்தொகுதி கேட்பவர்களின் நோக்கம் என்ன? என்பது பற்றியும், தீண்டாதார்கள் எப்பொழுது பொதுத்தொகுதியை ஆதரிக்க முடியுமென்பதுபற்றியும், தோழர் காந்தியின் உயிரைக்காப்பாற்றவேண்டுவது யார்கடமை என்பதுபற்றியும், நீண்டவிரிவுரை நிகழ்த்தினார்கள்.

தோழர் முத்துக்கருப்பஞ்செட்டியாரவர்கள் ஐந்து தீர்மானங்களைப் பிரரேபித்து பேசியதாவது:- தீண்டாமையை யொழிக்கவேண்டுவது ஒவ்வொருவர்கடமை யென்றும், ஆலயங்களிலும் பிறபொதுஸ்தாபனங்களிலும் தீண்டாதாருக்கு சமவுரிமை வழங்கப்படவேண்டு மென்றும். தோழர். காந்தியின் உயிரைக்காப்பாற்றவேண்டுவது உயாசாதிக்காரரென்னும் இந்துக்கள் கடமை யென்றும், பேசினார்.

தோழர் கேசவலால் காளிதாஸ் அவர்கள் அதனை ஆமோதித்துப்பேசினார்.

பின் தலைவர் முடிவுரையாக சுயமரியாதைக்காரர்களின் நோக்கமென்ன? தனித்தொகுதி கேட்பதின் அவசியமென்ன? டாக்டர் அம்பெத்கார் அவர்கள் அறிக்கை, தோழர், காந்தியின் உண்ணாவிரதம், தமிழ் நாட்டுத் தேசிய விளம்பரப்பத்திரிகைகளின் புரட்டுச்செய்திகள், போலிதேசபக்தி என்பவைகளைப்பற்றி மிகவும் விளக்கமாக விரிவுரையாற்றினார். அதுபோது கையொப்பமிடாமல் 5 கேள்விகள் எழுதப்பட்ட துண்டுக்கடிதம் தலைவரிடம் கொடுக்கப்பெற்றது. அதற்கும் தக்கபதில்கூறினார் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

---

# விதவைகள் விடுதி.

## தோழர். ச. ம. சி. பரமசிவம் சுற்றுப்பிரயாணம்.

தமிழ்நாட்டுப்புரோகித மறுப்புச் சங்கக்காரியதரிசி உறையூர். தோழர். ச. ம. சி. பரமசிவம் அவர்கள் 15-9-32 தேதி காலை பாளையங்கோட்டை சென்று தம் துணைவியார் திருமதி. சண்முகம் அவர்களுடன் அங்கிருந்து புறப்பட்டு 17—9—32 தேதி மதுரை மார்க்கமாக காரைக்குடி வந்து சேர்ந்தார்கள். அங்குமுத்துபட்டணம் தோழர். ராம சுப்பையா—விசாலாட்சி அவர்களின் விருந்தினராக தங்கியிருந்தார்கள்.

தமிழ்நாட்டுப்புரோகித மறுபபுச் சங்கத்தின் ஆதரவில் "விதவைகள் விடுதி" ஒன்று கட்டுவதின் சம்பந்தமாக இப்பகுதியில் பலபிரமுகர்களைக் கலந்து ஆலோசிப்பதற்காகவே பள்ளத்தூர் கானாடுகாத்தான். தேவகோட்டை முதலியயிடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு 19.9-32௳ இரவு உறையூர் வந்துசேர்ந்தார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

---


## மதனுகமம்
### (புதுச்சேரிப் பதிப்பு)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. இதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிட லீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மை வாய்ந்ததென்பது யாம் கூறாமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம் விலை ரூ. 1—0—0.

வஸந்த நிலையம்

தர்மராஜா கோவில்வீதி, புதுச்சேரி

# (Ghandijis Fasting and the Depressed classes' Seperate Electorate.)

## காந்தியின் உண்ணாவிரதமும், தாழ்த்தப்பட்டோர் தனித்தேர்தலும்.

### சமதர்ம அபிப்பிராயம்.

### Socialist View)

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

நமது சமதர்ம அபிப்பிராயப்படி, காந்தியார், தாழ்த்தப்பட்டோர்பால், உண்ணாவிரதம் கொள்வதாக தீர்மானித்தது, ஆங்கில துரத்தனத்தாருக்கு பெருத்த வெற்றி என்றே கூறல் வேண்டும். நமது பிரிட்டிஷ் அரசியல் தந்திரத்தின் வெற்றி, இதனால் ஸ்தாபிக்கப்பட்டதென்று அறிதல் வேண்டும். காந்தியார், தான் கொண்ட சுயராஜ்யப் போரை விட்டுவிட்டு, இந்த உபயோகமற்ற பிரச்சினையில் தற்கொலை செய்து கொள்வதாக உடன்பட்டது, பிரிட்டிஷாருடைய அரசியலுக்கு மாபெரும் வெற்றி எனக்கருதல் வேண்டும். இதை (Triumph of British Diplomacy) என்றே அறிஞர் கருதுவர். பிரிட்டிஷாரின் அரசியல் தந்திரத்தில், நமது காந்தியார் எந்த மூலை? (He is nowhere) அவர் எங்குமில்லை என்றே சொல்லலாம்.

இவர் இவ்வாறு தாழ்த்தப்பட்டோர்பால், பரிந்து நடிப்பதின் காரணத்தை தெரிந்து கொள்ள வேண்டுமானால், இவருடைய சென்ற ஜீவ சரித்திரத்தை சற்று நோக்கிப்பார்க்கவேண்டும். ஒரு காலத்தில், ஜூலுஸ் (Zulus) என்ற ஆப்பிரிக்கர்களை கலகப்படுத்திவிட்டு, பிறகு ஆங்கிலேயர் அவர்களை நாசமாக்கியதைப் பார்த்து இருந்தவர். சென்ற 19 ஆம் நூற்றாண்டு இறுதியில், போயர் (Boers) களுடன் கூடியிருந்துவிட்டு, அவர்கள் சண்டையில் அவர்கள் விரோதியருக்கு உதவியாய் இருந்தார். யூரோப்பியன் மகாசண்டையில் (The Great European War) பிரிட்டிஷாருக்கு உதவி சேனையைத் தயாரித்து, அந்த சண்டை முடிந்த பிறகு, பிரிட்டிஷாருக்கே விரோதமாக, ஒத்துழையா இயக்கத்தைத் துவக்கினார். அதையாகிலும் செம்மையாக முடிவுக்குக் கொணர்ந்தாரா? இல்லை. யாரோ சிலர் கொல்லப்பட்டார்களென்று 50000 பேர் சிறையில் கிடக்க பர்டோலியில், அதனை நிறுத்திவிட்டார். இதுதான் இவர் செய்த காரியம். ஒரு பிரிட்டிஷாரை கொன்றவனைப் புகழ்ந்து பேசினார்! இத்துடன் இவர் முரண் (Contradiction) நிற்கவில்லை. நேற்று உபயோகமில்லாத உப்பு மறியலை ஆரம்பம் செய்து அதனால் 60000 பேரை ஜெயிலுக்கு அனுப்பி விட்டு டெல்லி உடன்படிக்கையில் (Delhi Pact) அதனையும் அவர்களையும் கைவிட்டார்!! இது நிற்க, சென்ற ஆறு மாதமாக சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்து விட்டு, சுமார் 60, 70 ஆயிரம் பேரை ஜெயிலில் அடைக்கச் செய்து, இந்துக்களையும் பஞ்சமர்களையும் பிரிக்கின்றதாக, தனித்தொகுதியின் பேரில் தனது கோபாவேசத்தைக்காட்ட உண்ணா விரதம் பூண்டு, தான் சாகப்போவதாக பறைசாற்றிவிட்டார்!!! இது என்ன அகோரக் காட்சி என்று கேட்கின்றோம்? இதனால் ஒன்று உலகம் தெரிந்து கொள்ளல்வேண்டும். அதாவது காந்தியார் எவ்வளவு உலகப்பிரசித்தம் பெற்றவராயினும், அவரை நம்பி எந்த காரியமும் செய்யலாகாதென்பதே. இவரை நம்புவதைவிட, சேற்றில் நட்டிய கம்பத்தை நம்பி கரை ஏற எண்ணலாம்!

இவர் வாழ் நாள் முழுமையுமே முரண்பட்ட காரியங்களாகவே இருந்து வருகின்றன. His Life is a Series of contradictions என்று யாதொரு ஆட்சேபணையும் இன்றி கூறலாம். இவர் புகழ், தென் ஆப்பிரிக்காவிலிருந்து கிளம்பியது. அங்கேயாகிலும் நின்று, தான் எடுத்த காரியத்தை சாதித்தாரா? 5, 6 வருஷம் அங்கே கலகத்தை மூட்டிவிட்டு, அங்குவாழும் இந்தியக் குடி மக்களை நடு ஆற்றில் விட்டு இந்திய நாட்டுக்கு வந்து விட்டார்! இத்தியாதி, Series of defeats, தோல்வியை வரிசை வரிசையாக அடைந்தவரை என் இந்த உலகம் இன்னும் நம்புகின்றதோ, அது நமக்கு விளங்கவில்லை? இவருடைய எதார்த்த மனப்பான்மையை தெரிந்துகொள்ளமனமுடையோர், "Sunday Advocate" என்ற வாரப்பத்திரிகையில், "நான் தெரிந்து கொண்ட காந்தி"—"Ghandi as I know him" என்ற கட்டுரைகளை வாசிக்கலாம்.

இவர் உண்ணாவிரத கிளர்ச்சி, வெறும் Clap Trap, அதாவது, வெறுங்கூச்சல் என்றே நமக்குத் தோன்றுகின்றது. தாழ்த்தப்பட்டோருக்குத் தனித்தொகுதி கொடுத்தால், என்னவென்று கேட்கின்றோம்? இந்ததனித்தொகுதியால் [Seperate Electorate] தாழ்த்தப்பட்டோருக்கு நியாய ஸ்தலங்களில் சில அங்கத்தினர்கள் அதிகமாக வந்தார்களென்று வைத்துக்கொள்ளுவோம். இதனால், இவர்கள் சாதித்துவிடப் போவதென்னை? தற்கால ஆங்கிலேயர் திட்டத்தில் யாருக்கு என்னதான் கிடைக்கப்போகின்றது என்று கேட்கின்றேன்? உங்களுக்கும் பே, பே; உங்கள் அப்பனுக்கும் பே, பே; உன் பாட்டனுக்கும் பே, பே; என்று சொல்லிக் கொண்டிருக்கும் திட்டத்தில், யாருக்கு என்ன அதிக சுதந்திரம் கிடைக்கப்போகின்றது? விஷயம் இவ்வாறிருக்க, ஏன் இந்த வீண் கூச்சல் என்று கேட்கின்றோம்? இந்தக்கூச்சல்யாவும் பகல் வேஷமென்பதே எங்கள் துணிபு

இந்துக்களை, ஜாதி இந்துக்களென்றும், ஜாதியில்லா இந்துக்களென்றும், இருவகுப்பாக, இந்தத் தனித்தொகுதி, பிரித்து விடுகிறதாம்! பஞ்சமர்கள், தனித்தொகுதியால், வேறுபட்டு விடுவார்களாம்!! தனித்தொகுதியால் இந்துக்கள், பஞ்சமர்களை எதிரிகளாகப்பார்ப்பார்களாம்!!! இவ்விருவருடைய ஒற்றுமைக்கு பகை வந்து விடுமாம்!!!! இந்தக் கதையைக்கேட்க, ஒரு பழமொழி நமது ஞாபகத்திற்கு வருகிறது. "ஆடு நனைகின்றதென்று, ஓனாய் குந்தி அழுகின்றதாம்"! இந்துக்கள், கடந்த 5000 வருஷமாக, பள்ளனையும், பறையனையும்; பஞ்சமனையும், தோட்டியையும், பங்கியையும், தியாவையும், சாரணரையும், மற்றும் பல தீண்டாதாரையும் (Untouchables) தாழ்த்தப்பட்டோரையும் [depressed classes) தங்கள் தோழர்களாக பாவித்து வந்ததைக் கெடுக்க இந்தத் தனித்தொகுதி நடுவில் வந்து விட்டதாம்! உலக ஒற்றுமைக்கு அழிவு வந்துவிட்டதாம்!! என்ன விந்தை!!! கோடான கோடி தாழ்த்தப்பட்டோர் வீடு, வாசல், உணவு, ஆடை, கல்வி, சுகாதாரம், வைத்தியம், இறந்தால் வாய்க்கரிசிகூட வழியில்லாமல் இருக்க இரண்டொரு (Votes) ஓட்டுகளால், என்ன வந்து விடப்போகிறதோ அது நமக்கு விளங்கவில்லை. கடந்த 50 வருஷங்களாக இந்திய சட்டசபைகளில், பொதுத்தொகுதியால், இந்துக்கள் என்ன பஞ்சமர்கள்பால் சாதித்தார்களெனவும் கேட்கின்றோம்? இந்தக்காலமெல்லாம் 5 கோடி பஞ்சமர்களுக்கு இந்துக்கள் என்ன செய்துவிட்டீர்கள்? எத்தனை கிணர்களை கட்டினீர்கள்? எத்தனை வீடு கட்டுவித்தீர்கள்? எத்தனை நல் நிலம் கொடுத்தீர்கள்? எத்தனை ஆஸ்பத்திரிகள் கட்டுவித்தீர்கள்? எத்தனை பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தீர்கள்? எத்தனை கல்லூரிகள் நியமனம் செய்தீர்கள்? எத்தனை சுகாதார ஸ்தாபனங்கள் உண்டாக்கினீர்கள்? எத்தனை (Free Scholarships) இலவசபடிப்புக்கு உதவி அளித்தீர்கள்? எத்தனை புஸ்தக சாலைகளை உண்டாக்கினீர்கள்? எத்தனை சுத்ததண்ணீர் வசதிகள் ஏற்பாடுசெய்தீர்கள்? ஐந்துகோடி தாழ்த்தப்பட்டபேரின் தரித்திரத்தையும், மூடபழக்கங்களையும், மூடபக்தியையும், மூடநம்பிக்கையையும், ஒழிக்க என்ன செய்தீர்கள்? என்னசெய்கின்றீர்கள்? என்ன செய்யப்போகின்றீர்கள் எனவும் கேட்கின்றோம்? ஏன் ஐயா இந்த உபயோகமற்ற தனித்தொகுதி பொதுத்தொகுதியைப்பற்றி இவ்வளவு கிளர்ச்சி? இவ்வளவு வீண்கூச்சல்? உலகம்கண்மூடிக்கொண்டிருப்பதாக எண்ணிக்கொள்ள வேண்டாம். சான்றோர் உலகம் கண்விழித்துக்கொண்டுதான் இருந்து வருகிறது. ஒருகாலம்வரும் 5 கோடி தாழ்த்தப்பட்டோர்கள் கண் விழிக்க, உங்களுடைய பகல் வேஷம் அன்றுதான் வெளியாகும்.

5000 வருஷமாக ஒன்றும் பஞ்சமர் பால் சாதிக்காத நீங்கள் பொதுத்தொகுதி (Simon Act) சைமன் திட்டத்தில் வந்த உடனே சாதித்துவிடப் போகின்றீர்கள்?

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

## சென்னைக்கு ஏஜண்டு தேவை.

நமது "குடி அரசு" பத்திரிகையை விற்பனை செய்ய தகுந்த டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் சென்னைக்கும், மதுரைக்கும் தேவை. இது சமயம் இவ்விரு நகரங்களில் 150 பிரதிகளுக்கு மேல் செலவாகிவருகிறது. கமிஷன் 100க்கு 25. மற்ற விபரம் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்.



# குடி அரசு.

ஈரோடு 1932 செப்டம்பர்மீ 25-உ


## தீண்டாதார்க்கு விமோசனம் உண்டா?

—:0:—

திரு. காந்தியவர்கள் தற்பொழுது உண்ணாவிரதம் ஆரம்பித்திருப்பதைப் பற்றியே எங்கும் பேச்சாக இருக்கிறது. நமது நாட்டு அரசியல் வாதிகளும், சீர்திருத்தவாதிகளும், வருணாச்சிரம தரும வாதிகளும் கூட திரு. காந்தியவர்களின் உயிர்காப்பாற்றப்படவேண்டும் என்பதைப்பற்றிப் பத்திரிகைகளிலும் அறிக்கைகள் வெளியிடுகின்றனர்; பொதுக்கூட்டங்களிலும் பேசி வருகின்றனர். நாமும் அவருடைய உயிர்காப்பாற்றப்படவேண்டுமென்பதை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளுகிறோம்.

ஆனால், திரு காந்தியவர்கள் எதற்காக உண்ணாவிரதமிருக்கிறார்? அவர் உண்ணாவிரதமிருப்பதன் மூலம், அவர்கருதுகின்ற காரியமோ, அல்லது ஏழைமக்களுக்கு விடுதலையோ பூரணமாக ஏற்பட்டுவிடுமோ என்பதைப்பற்றி, நம்மைப்பொறுத்தவரை ஒன்றும் ஏற்பட முடியாது என்றுதான் கூறுவோம். தாழ்த்தப்பட்ட சமூகத்தார்க்குத் தேர்தலில் தனித்தொகுதி அளித்திருப்பதால், இந்து மதம் பிளவுபட்டுவிட்டதென்றும், தாழ்த்தப்பட்ட சமூகத்தாரும் இந்து மதத்திலிருந்து பிரிந்துவிட நேர்ந்து விடுமென்றும், ஆகையால், இந்துமதம் காப்பாற்றப்படவும், தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து சமூகத்திலிருந்து பிரியாமலிருக்கவும் வேண்டுமானால் தனித்தொகுதியை ரத்துச் செய்ய வேண்டும் என்றுங் கூறியே இப்பொழுது உண்ணாவிரதமிருந்து வருகிறார்.

திரு. காந்தியவர்கள் சென்ற 20—9—32ல் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்குப் பேட்டிகொடுத்துப் பேசிக்கொண்டிருந்தபோது அவர் கூறிய விஷயங்களைக் கவனித்தால் இவ்வுண்மையைத் தெரிந்துகொள்ளலாம்.

"தனித்தொகுதித் தேர்தல் முறையை ரத்துச்செய்வதன் மூலம் எனது உண்ணாவிரதம் பொதுவாக முடிவுபெறும்; ஆனாலும் எனது விரதத்தின் அடிப்படையான எண்ணம் ஒரு பொழுதும் நிறைவேறியதாகாது. நான் எப்போதும் ஒரு தீண்டாதவனைக் கொண்டிருப்பதால், தீண்டக்கூடியவர்களுக்கும், தீண்டக்கூடாதவர்களுக்கும் தற்கால சாந்தியாக ஏற்படும் எந்த ஒப்பந்தத்தையும் நான் ஒப்புக்கொள்ள முடியாது. தீண்டாமையை அடியோடு கல்லி எறிந்துவிட வேண்டும் என்பதே எனது ஆவல். நான் அதன் பொருட்டே உயிரோடிருக்கிறேன். அதை ஒழிக்க சந்தோஷத்தோடு எனது உயிரை இழக்கவும் தயாராக இருக்கிறேன். இருசாராருக்கும் நிலையான உடன்படிக்கை ஏற்படவேண்டுமென்பதே எனது ஆவல். இவ்வாறு ஏற்படும் ஒப்பந்தத்தினால் இப்பொழுதே தீண்டாதார்களுக்கு நன்மை ஏற்பட வேண்டும். ஆகையால் இந்தியா முழுவதும் ஆட்சேபனையின்றி ஒப்புக்கொள்ளக்கூடிய ஒப்பந்தமே ஏற்படவேண்டும். ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது என்று ஆவின் ஆர்ப்பாட்டம் செய்வதில் பயனில்லை."

என்று சொல்லியிருப்பதைக் கொண்டு, திரு. காந்தியவர்கள் உண்மையிலேயே தீண்டாதவர்களின் நன்மையைக் கருதியேதான், அதாவது அவர்களுடைய சமத்துவத்தைக் கருதியேதான் உண்ணாவிரதமிருந்துவருகிறார் என்று கூறலாம். ஆனால், திரு. காந்தியவர்கள் இதற்குமுன் கூறிக்கொண்டுவந்த சில விஷயங்களை நினைக்கும்பொழுது, இவர் எந்த அளவில் தீண்டாமை ஒழித்தலையும், அவர்களுக்குச் சமத்துவம் கொடுக்கவேண்டுமென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறார் என்பதில் சந்தேகம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. அதாவது, வருணாச்சிரம தருமம் இருக்கவேண்டும். ஆனால் தீண்டாமை ஒழியவேண்டும் என்றும், "பிறப்பினால், மனிதர்களின் குணத்தில் வேறுபாடுகள் இருப்பதினால் பிறப்பில் வித்தியாசம் உண்டு" என்றும் இதற்கு முன் கூறியிருக்கிறார்.

இப்பொழுது இவைகளையெல்லாம் மறந்துவிட்டு, உண்மையாகவே இந்துசமூகத்துடன் தீண்டாதவர்களும், ஒன்றுபட்டு வாழவேண்டும், என்று திரு. காந்தியவர்கள் அபிப்பிராயப்படுவதாகவே வைத்துக்கொள்ளுவோம். ஆயினும் இது தீண்டாதாரின் நன்மையின் பொருட்டா அல்லது இந்துமதத்தின் நன்மையின் பொருட்டா என்பதைப்பற்றி ஆராய்ந்தால், இந்துமத நன்மையின் பொருட்டேயென்பது வெளிப்படையாக விளங்கும். இதனை இதற்கு (முன் உண்ணாவிரதத்திற்கும்) அரசியலுக்கும் எவ்வகையிலும் சம்பந்தமில்லை. ஆயினும் இதனால் அரசியல் விஷயத்தில் பலன் உண்டாகாது என்று கூறிவிடவும் முடியாது. தீண்டாமையை விலக்கத் தகுந்த வழிகளைக் கைக்கொள்ளுவதால் அரசியல் விஷயத்திலும் சிறந்த பயன் உண்டாகும். அன்றியும் அதில் மதம் தர்மம் சம்பந்தமான விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. நான் தீண்டாமையைக் கண்டிப்பதானது இந்துமதத்தில் உள்ள ஆபாசங்களின் அடிப்படையைக் கண்டிப்பதாகுமென்றே நான் நம்புகின்றேன். எனவே சுயராஜ்ய அரசியல் திட்டத்தைவிட அவ்விஷயம் மிகவும் முக்கியமானது என்று பத்திரிகைப் பிரதிகளிடம் கூறியிருப்பதைக் கொண்டுமே, இந்தியாமந்திரிக்குத் திரு. காந்தியவர்கள் எழுதியிருக்கும் கடிதத்தில்,

"இந்துதர்மம் சம்பந்தப்பட்டவரையில் தனித் தொகுதி முறை அச் சமூகத்தைச் சின்னாபின்னமாகச் சிதைத்து, உருப்படாமல் செய்துவிடும். நான் சம்பந்தப்பட்டவரையில் இந்த வகுப்பாரின் தர்ம சம்பந்தமானதும், மத சம்பந்தமானதுமே முக்கியமானதாகும். தர்ம விஷயத்தையும் மத விஷயத்தையும் கவனிக்கும்போது அரசியல் விஷயம் முக்கியமானதாயிருந்தாலும் அது, தானே முக்கியமற்றதாகி மறைந்துவிடுகிறது."

என்று குறிப்பிட்டிருப்பதைக் கொண்டும் அறியலாம். இவைகளைக்கொண்டு, திரு. காந்தியவர்கள் உண்மையிலேயே தாழ்த்தப்பட்டார்களால் அநுதாபங்கொண்டு அவர்களுக்குச் சம சுதந்தரங்களும் அளிக்கவேண்டுமென்று கேட்பதாம், இந்துமதம் அழியாமலிருக்கவேண்டும் என்பதற்காகவே என்னும் உண்மையை உணர்ந்துகொள்ளலாம். திரு. காந்தியின் சுயராஜ்யத்திட்டங்கூட மதத்தை அடிப்படையாகக்கொண்ட சுயராஜ்யத்திட்டம் என்பதை நாம் பல தடவைகளில் விளக்கிக் காட்டியுள்ளோம்.

திரு. காந்தியவர்களின் நோக்கப்படி இந்துமதம் காப்பாற்றப்படவேண்டுமானால் தீண்டாமையை ஒழித்து தீண்டாதார்களையும் இந்துக்களுடன் சேர்த்துக்கொள்ளப்படாதவரையில் இந்து மதம் நிலைத்து நிற்கமுடியாது என்ற தீர்மானத்திற்கு திரு. காந்தி வந்துவிட்டார் என்றே தெரிகின்றது. மற்ற இந்து மகா சபைக்காரர்களும், முஸ்லிம்களுக்கு எதிரான நோக்கமுடைய மற்ற அரசியல் வாதிகளும் தீண்டாமை ஒழியாவிட்டாலும் அவர்களை இந்துக்களினின்றும் பிரிக்காமலிருந்தால்தான் இந்து மதம் நிலைக்க முடியும் என்பதை உணர்ந்துகொண்டார்கள். இதனாலேயே திரு. காந்தியவர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்தவுடன் பலதிறப்பட்ட அபிப்பிராயமுடையவர்களும், தீண்டாமையை ஒழிப்பதற்கும், தனித்தொகுதியை ரத்துச்செய்வதற்கும்பம்பாயில் சமரசமகாநாடுகூட்டி ஆலோசனை செய்திருக்கிறார்கள்.

இச்சமயத்தில், தீண்டாதார்களையும், அவர்களின் தலைவர்களையும் சமாதானப்படுத்துவதற்காகப் பல கோயில்களை அவர்களுக்காகத் திறந்து விடப்படுவதாகவும், பல குளங்களிலும் கிணறுகளிலும் தண்ணீர் எடுக்க அநுமதிக்கப்படுகிறதாகவும் பத்திரிகைகளில்காணப்படுகின்றன. உண்மையிலேயே இத்தகைய உரிமைகளும், இன்னும் தீண்டாதார் கேட்கும் உரிமைகளும் தீண்டாதார்களுக்குக்கொடுக்கப்பட்டு விட்டால், அவர்கள் இந்துக்களோடு சேர்ந்திருப்பது பற்றியோ, அல்லது தனித்தொகுதித் தேர்தலை ரத்து செய்து பொதுத்தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்க ஏற்பாடு செய்வதைப்பற்றியோ நாம் கவலைப்படப்போவதில்லை.

ஆனால் தீண்டாதாருக்கு இத்தகைய உரிமைகளை யளிக்க சநாதன தர்ம இந்துக்கள் ஒருநாளும் சம்மதப்படமாட்டார்கள் என்றே தான் நாம் கூறுகின்றோம்.

இதற்கு உதாரணம் வேண்டுமானால் இப்பொழுது நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தாலே விளங்கும். இன்று கோவில்களைத் திறந்து விடப்படுவதாகச் செய்திவருவதெல்லாம் வட நாட்டிலிருந்துதான் வருகின்றன. அங்கும், பிரபலமாக விளங்கும் பொதுக் கோயில்கள் எதையும் திறந்து விட்டதாகக் காணமுடியவில்லை. அநாமதேயக் கோயில்களையும், சிலர் தங்கள் சொந்தக்கோயில்களையும் திறந்து விட்டிருப்பதாகத்தான் செய்திகள் கிடைக்கின்றன. தென்னாட்டைப் பொறுத்தவரையில் அந்தப் பேச்சுக்கூட இல்லை. நமது மாகாணத்திலும், சென்னை, சிதம்பரம், திருச்சி, மதுரை, கும்பகோணம், ஸ்ரீரங்கம், திருநெல்வேலி போன்ற பெரிய ஊர்களிலும் தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்றும், அதன் மூலம் திரு. காந்தியின் பட்டினி விரதத்தையும், தனித்தொகுதியையும் மாற்றவேண்டும் என்றும் கூட்டங்கள் போட்டுப்பேசியிருக்கிறார்கள். ஆனால் இவ்வூர்களில் உள்ள கோவில்களில் பிரவேசிக்கவோ, அவைகளைத்திறந்து விடச் செய்யவோ முயற்சி செய்வதாகத் தெரியவில்லை.

சென்னையில் கந்தசாமி கோயிலில், சில ஆதிதிராவிடர்கள் சென்றதாகச் செய்தி வந்தது. மறுநாள் கோயில் அடைக்கப்பட்டுவிட்டது. மைலாப்பூர் கோவிலுக்குள் செல்ல அனுமதிகேட்பதற்காகச் சென்ற உயர்ந்தசாதி இந்துக்களையே கோயிலுக்குள் விடாமல் கதவடைத்து விட்டார்கள். இந்த நிகழ்ச்சியிலிருந்தே, தென்னாட்டில் உள்ள மற்றக்கோயில்களில் தீண்டாதார்கள் செல்ல சுலபத்தில் அனுமதிப்பார்களா? என்பதை ஆலோசித்தால் உண்மை விளங்காமற் போகாது.

அன்றியும், இச்சமயத்தில்கோயில்பிரவேசத்திற்குவைதீகர்களின் எதிர்ப்புக் கிளம்பியிருப்பதையும் கவனிக்கவேண்டுகிறோம். குருவாயூரில் நீண்டகாலமாகக் கோயில் பிரவேசத்திற்காகச் சத்தியாக்கிரகம் செய்யப்பட்டும் வைதிக இந்துக்களின் மனம் இன்னும் இரங்கவில்லை. இன்னும், திரு. காந்தியவர்கள் உண்ணா விரதம் ஆரம்பித்தும்கூட அங்கு கோயில் கதவு தாழ்த்தப்பட்டவர்களின் பொருட்டு அடைக்கப்பட்டே இருக்கிறது. நாசிக்கிலுள்ள ஆலயத்தில் தாழ்த்தப்பட்டோரை அனுமதிக்கவேண்டும் என்று சொல்லிச் சில இந்துத்தலைவர்கள் முயற்சி செய்வதைக் கண்டு வைதீகர்கள் எதிர் சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். அகமதாபாத்தில் உள்ள காளியின் ஆலயத்தில் தாழ்த்தப்பட்டாரும் போகலாம் எனச் சிலர் முயற்சியால் போடப்பட்டிருந்த விளம்பரத்தைக்கண்டு வைதீகர்கள் பரபரப்படைந்து ஒன்றுகூடி அவ்விளம்பரத்தை எடுத்தெறிந்துவிட்டனர், தாழ்த்தப்பட்டார் யாரும் அக்கோயிலுக்குள் நுழையமுடியாதபடி மறியலும் செய்யத்தொடங்கி விட்டனர். பம்பாய் வைஷ்ணவகுருமார்களில் ஒருவரான திரு. கோகுலநாத்ஜீ கௌரோஜி என்பவர் தாழ்த்தப்பட்டவர்களைக் கோயிலில் விட அநுமதிப்பதை மறுத்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார் அதில்

"சநாதனதர்மிகள் சம்மந்தப்பட்டவரையில் அவர்களுக்கு மதமே முக்கியமானதாகும், இரண்டாவதாகவே அரசியல் விஷயங்கவனிக்கப்படும். எங்கள் சமயத்திலும் கொள்கையிலும் அரசாங்கம் தலையிடாதிருந்தால் அவர்கள் மற்ற விஷயங்களில் எவ்வாறு இருந்தாலும் நாங்கள் மாகாணசட்டசபைகளிலும், இந்தியாசட்டசபைகளிலும் ஸ்தானங்கள் வேண்டுமென்று போராடமாட்டோம்."

என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். இன்னும் பம்பாய் வருணாச்சிரம சுயராஜ்ய சங்கத்தார் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்

"சமயமும், சமய சம்பந்தமான கொள்கைகளுமே எங்களுக்குமிகவும் முக்கியமானதாகும், சட்டசபைகள் எங்கள் மதத்திலோ மதாச்சாரத்திலோ தலையிடுவதை நாங்கள் பார்த்துச்சகித்துக்கொண்டிருக்க முடியாது"

என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இன்னும் தென்னாட்டில் உள்ள சிதம்பரம், சீரங்கம், கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருவாரூர் போன்ற ஊர்களில் உள்ள பெரியகோவில்களில் தீண்டாதாரை அழைத்துக்கொண்டுபோக ஆரம்பித்தால் அப்பொழுது கும்பகோணப்பார்ப்பனர்கள் என்ன செய்வார்கள் என்பது தெரியும்.

ஆகையால் உண்மையிலேயே திரு. காந்தியவர்கள் விரும்புவது போலத்தீண்டாதார்களுக்குச் சமத்துவம் கொடுக்கும் விஷயத்தில் வைதிகர்கள் சிறிதும் விட்டுக்கொடுக்கவே மாட்டார்கள் என்பது நிச்சயம். தீண்டாதார்க்குக்கொடுத்துள்ள தனித்தொகுதியை ரத்துச்செய்யவேண்டும் என்று திரு. காந்தியவர்கள் கூறுவதற்கு மாத்திரம்தான் இன்று வைதீகர்களும் அவருடைய உயிர் காப்பாற்றப் படவேண்டும் என்று கூறுகின்றார்கள். இப்பொழுது திரு. காந்தி 'தனித்தொகுதி ரத்து' என்னும்பேச்சைவிட்டுவிட்டுத் 'தீண்டாதார்க்குக்கோயில் பிரவேசம் போன்ற உரிமைகளைக்கொடுக்க வேண்டும்; இன்றேல் பட்டினி கிடந்து இறப்பேன்' என்று கூறுவாரானால் இன்று சமரசம் பேச முன்வந்திருக்கும் வைதிகர்களில் நூற்றுக்குத்தொண்ணூற்றொன்பது பேர் "இந்த மதத்துரோகியாகிய காந்தி பட்டினி கிடந்து இறக்கட்டும். அது பற்றி யாரும் கவலைப்படவேண்டாம்" என்று நெஞ்சிரக்கமில்லாமல் கூற முன்வந்திருப்பார்கள என்று சத்தியஞ் செய்து கூறுகிறோம்.

ஆகையால் தற்பொழுது திரு. காந்தி செய்யும் பிடிவாதத்தினால், தீண்டாதார்களும், அவர்களுடைய சமூகத்தைப் பலிகொடுத்து, தனித்தொகுதித் தேர்தல் முறையை ரத்துச் செய்பச்சம்மதித்து திரு. காந்தியின் உயிரைக் காப்பாற்றினாலும், தீண்டாச்சமூகத்தினரின் அடிமையும், கஷ்டமும் நீங்கப்போவதில்லை யென்றே உறுதியாகக்கூறுவோம். திரு. காந்தியவர்கள், பிடிவாதமாகத் தீண்டாமையை ஒழிப்பதற்கு முயல்வாரானால், முன்பு "தீண்டாமை விலக்குத்" திட்டத்தைக் கொண்டிருந்த ஒத்துழையாமை இயக்கத்தை, நமது நாட்டுப்பார்ப்பனர்கள், சுயராஜ்யக் கட்சியைக்கிளப்பி அதன் மூலம் ஒழித்ததைப் போல இப்பொழுதும் புதிதாக ஏதாவதொரு கட்சியைக் கிளப்பி அதன் மூலம் அடக்கிவிடுவார்கள் என்பதில் ஐயமில்லை. அன்றியும் முன்பு போல் திரு. காந்தியையும் மூலையில் உட்காரவைத்து விடுவார்கள் என்பதிலும் ஆட்சேபணையில்லை.

ஆகையால் தீண்டாதார்களின் உரிமைகள் முழுவதும், சட்டமூலமாக ஏற்படவேண்டும். ராவ்பகதூர் ஆர். சீனிவாசன் அவர்கள் கூறுவதுபோல, தீண்டாமை என்பதைக் குற்றமாகக் கருதும்படி சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யவேண்டும். இவ்வாறு அவர்கள் உரிமை முழுவதும் சட்டமூலம் ஏற்பட்டபின் அவர்களுக்கு எந்தத்தொகுதி இருந்தாலும் கவலையில்லை. இது ஏற்படுவதற்குமுன் அவர்களுக்குரிய தனித்தொகுதி முறையை ஒழிக்க முயல்வது அவர்கள் சமூகத்தை என்றென்றும் விடுதலையில்லாமற் செய்வதற்கு முயலும் சதியாலோசனை என்று தான் நாம் கூறுவோம்.

ஆகையால், தீண்டாதாருக்குள் பிளவுண்டாகும்பொருட்டும், அவர்களுடைய தலைவர்களில் சிலரைத்தங்கள் வசமாக்கும் பொருட்டும், தீண்டாதார் சமத்துவத்தைப்பற்றி வெறும் வாய்ப்பேச்சு பேசுவதில் கடுகளவும் பயனில்லை. "தீண்டாதார் பொருட்டு காந்தி பட்டினி கிடக்கிறார் ஆகையால் நாமும் பட்டினிகிடக்கவேண்டும். அவருடைய உயிருக்காகப் பிரார்த்தனை செய்யவேண்டும்" என்று பிரசாரம் பண்ணுவதிலும், பட்டினி கிடப்பதிலும், பிரார்த்தனை பண்ணுவதிலும் பலனில்லை. இந்தப்பட்டினியும், பிரார்த்தனையும் இன்னும் மக்களை மூடர்களாக்கவும் பகுத்தறிவற்றவர்களாக்கவும்தான் பயன்படும். சென்ற 20—9—32ல் சென்னை மாகாணத்தில் பட்டினிகிடந்த பார்ப்பனர்கள் எத்தனைபேர்? அவர்கள் தீண்டாதாருக்கு அன்று தினம் என்னசெய்தார்கள் என்று கேட்கிறோம்.

ஆகையால் தாழ்த்தப்பட்ட மக்களும், அவர்களுடைய தலைவர்களும் பட்டினியையும் பிரார்த்தனையுங்கண்டு ஏமாறவேண்டாம் என்று எச்சரிக்கை செய்கின்றோம். சட்டமூலமாகத்தீண்டாதார்களுக்குள்ள தடைகளும், துன்பங்களும். கொடுமைகளும் ஒழியாதவரையில் அவர்கள் தனித்தொகுதியை விட்டுக்கொடுத்து கூட்டுத்தொகுதியை ஏற்றுக்கொள்வது அவர்களுடைய அழிவுக்கேகாரணமாகுமென்றுதீர்மானமாகக்கூறுகின்றோம்.

---

## சாரதாசட்டதிருத்தம்

## மசோதா தோற்றது.

20—9—32 தேதி கூடிய இந்திய சட்டசபையில் பாலியவிவாகத் தடை சட்டத்தை திருத்த வேண்டுமென்ற விவாகத்திற்கு ராஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரியார் விவாதத்திற்குப்பதிலளித்தார். மசோதா ஓட்டுக்கு விடப்பட்டதில் 21 ஓட்டுகள் சாதகவும், 53 ஓட்டுகள் பாதகமாகவும் கிடைத்ததால் மசோதா தோற்றது.

---

1932-ஹு அக்டோபர் மாதம் 8, 9-ந்தேதி
சனி, ஞாயிறுகளில்

தஞ்சாவூர் சுதர்சனமஹாலில்

சென்னை மாகாண

# பார்ப்பனரல்லாதாரின் 12-வது மகாநாடு

நடைபெறும்.

—:—

மகாநாட்டுத்தலைவர்
உயர்திரு. பொப்பிலி மகாராஜா அவர்கள்.

வரவேற்புத்தலைவர்
உயர்திரு. என். ஆர். சாமியப்பா அவர்கள்,

பார்ப்பனரல்லாதார் அனைவரும் வருக.

ஐ. குமாரசாமி பி. ஏ.,
டாக்டர் தாஜுடீன் எம். எல். சி.,
காரியதரிசிகள்.


## திருச்செங்கோடு. வாலிப சகவாசசங்கம்.

இன்று (25—9—32) ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு இச்சங்கத்தின் ஆதரவில் இவ்வூர் யூனியன் போர்டு பிரசிடெண்டு தோழர் ஆர். கே. பாலு அவர்கள் யூனியன் போர்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதைப் பாராட்டி வாழ்த்து பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுப்பார்கள்.

அது சமயம் தோழர்கள் அ. பொன்னம்பலம், அ. இரத்தினசபாபதி, ஆர். அன்னபூரணி அம்மாள், எஸ். வி. லிங்கம், என். பி. காளியப்பன் முதலியவர்கள் "சமூக சீர்திருத்தமும் வாலிபர்கள் கடமையும்" என்பது பற்றி விரிவுரை நிகழ்த்துவார்கள் என்று தோழர் எஸ். சி. ஆர். சாமி அவர்கள் அறிவிக்கிறார்.

—————

## உதகமண்டலம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 18—9—32 மாலை 4 மணிக்கு கார்டன் காட்டேஜில் திரு. எஸ். அப்பாசாமி (முனிசிபல் கவுன்சிலர்) அவர்களின் தலைமையின்கீழ், உதகமண்டலம் ஆதிதிராவிடர்கள் கூட்டமொன்று நடைபெற்றது. ராவ்சாஹிப் வி. ஐ. முனிசாமிபிள்ளை. எம். எல். ஸி. அவர்கள் தாழ்த்தப்பட்டோருக்கு தனித்தொகுதியினால் ஏற்படப்போகும் நன்மைகளைப்பற்றியும் கூட்டுத்தொகுதியினால் வரப்போகும் தின்மைகளைப் பற்றியும் விளக்கமாக எடுத்துக்கூறினார். அன்னவரை அனுசரித்து, திரு ஜி. ஏ. நாராயணன் அவர்களும், வி. ஷண்முகம் அவர்களும் சொற்பொழிவாற்றியபின் தலைவர் முடிவுரை கூறுமுகத்தான் தனித்தொகுதியே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்றியமையாததென்று கூறிமுடித்தபின் எல்லோராலும் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டு சுமார் 6 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது. (ஒரு நிருபர்)

## நாகைதாலூகாவில் சுயமரியாதைப் பிரசாரம்.

18—9—32 தேதி மாலை 5 மணி வண்டியில் பட்டுக்கோட்டையிலிருந்து தோழர்கள் கே. வி. அழகர்சாமி அவர்களும், டேவிஸ் அவர்களும் சிக்கில் வந்து சேர்ந்தார்கள். ஏராளமானவர்கள் வந்து வரவேற்று அழைத்துக்கொண்டு சென்றார்கள். கூட்டத்திற்கு சுமார் 2000 பேர்களுக்கு மேல் நாகை தாலூகாவின் சுற்று புரங்களிலிருந்து வந்திருந்தார்கள். கூட்டத்திற்கு தோழர் எச் திருநாவுக்கரசு அவர்கள் தலைமைவகித்து முகவுரைகூறியபின் தோழர்கள் என். சாமிநாதன் குஞ்சு இவர்களால் சுயமரியாதைப்பாடல்கள் பாடியதும் நாகை தோழர்களான எஸ். பி. கிருஷ்ணன் ப. சாமிநாதன் இவர்கள் 'சமூக சீர்திருத்தம் என்பது பற்றியும் தோழர் டேவிஸ் பி. ஏ., அவர்கள் தற்கால நிலைமைஎன்பது பற்றியும் பேசியபின் தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் அறிவான தெய்வமெது என்பதுபற்றிபலமேற் கோள்களுடன் மக்களின் மனதில் பதியுமாறு நீண்டசொற்பொழிவாற்றினார் பின் தலைவர் முடிவுரை கூற கூட்டம் இரவு 9-30 மணிக்கு முடிவுற்றது.

## சுயமரியாதைப் பிரசாரம்.

———

தோழர்களான—அன்னபூரணி இரத்தினசபாபதி, அ. பொன்னம்பலனார். என். பி. காளியப்பன். எஸ். வி. லிங்கம் இவர்கள் 25 தேதி திருச்செங்கோட்டிற்கும், 26 தேதி சேலத்திற்கும் சுயமரியாதைப்பிரச்சாரம்செய்ய செல்வார்கள்.

————


# மாதர்களுக்கு

இதுதான்வேண்டியது.

## கெர்ப்ப எண்ணெய்



மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம்உண்டாகும்மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அன்னிய நாட்டார் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி S. I.



# ஹிமகிரி தைலம்.

ஸ்நானத்திற்கு ஏற்றது.

உடம்பையும், கண்களையும், மூளையையும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் குளிர்ச்சி செய்கிறது. சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. தலைவலிக்கு சிறந்த மருந்து அபிப்பிராயம்:- ஆர். எஸ் முட்டன்ராஜு பி. இ. எலக்டிரிக்பவர் ஹவுஸ் உதகமண்டலம். கடந்த ஆறுமாத காலமாக தங்கள் தைலத்தை நான் உபயோகிக்கிறேன் எல்லாத்தைலங்களை விட தங்கள் தைலம் சிறந்து விளங்குவதோடு குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் தரத்தக்கதாயிருக்கிறது. உள்நாட்டு மூலிகைகளைக்கொண்டு செய்யப்பட்ட விலை சகாயமான தைலம் இதுவே. நல்ல பலந்தரக்கூடியதாயிருக்கிறது. பொதுஜனங்களுக்கு இதை சிபார்சு செய்கிறேன்.

விலை 1—0—0, 0—8—0.

## ரத்னமிஸ்ரிஹல்வா

—:0:—

மூளையையும், உடலையும், பலப்படுத்துவது.

பலவீனம், ஜீரணக்குறைவு, சோம்பல், இந்திரிய ஸ்கலிதம் முதலியவற்றை நீக்கவல்லது. தாதுவிர்த்திக்கேற்றது. விலை 2—8—0, 1—4—0.

நற்சாட்சி பத்திரங்களும், தங்கமெடல்களும் பரிசுபெற்றது.

கிடைக்குமிடம்:—

எம். பெருமாள் நாயடு,
மளிகை ஈரோடு,

மெடிகல் எம்போரியம், ஈரோடு.

சோல் ஏஜண்ட்,
அனந்தகிருஷ்ண பிளவர் மில்ஸ்,
பெங்களூர்சிட்டி.

(9-ம்பக்கத் தொடர்ச்சி)

'கடித்த பாக்கை கொடாத சித்தப்பன் வழிகொண்டுவிடப்பார்க்கின்றானும்!'

இத்தனை வருஷம் பொதுத்தொகுதியால் கிடைக்காதலாபம் தனித்தொகுதியால் கிடைக்கட்டுமே! ஏன் இதை பரீட்சிக்கலாகாது? பஞ்சமர்கள் ஆங்கிலதுரைத்தனத்தில் சாதிப்பதை பார்ப்போமே! ஏன் கூடாது?

இதுகாறும் காங்கிரஸ்வாதிகளாகிய நீங்கள் மிண்டோமார்லி திட்டத்திலும் (Minto Morley Constitutions) மாண்டேகு செம்ஸ்பர்ட் திட்டத்திலும் (Montague Chelmsford Constitutions) கடந்த இருபது வருஷமாக சட்ட சபைகளில் நுழைந்து அரசுபுரிந்து வந்தீர்களே! பஞ்சமர்களுக்கு என்ன சௌகரியங்கள் உண்டு பண்ணினீர்கள் ஐயா? சற்று கை விடுங்கள் பார்ப்போம்? ஒன்றுஞ்செய்யாத உங்களுக்கு இந்த வீண் பேச்சும், ஒத்துழையாமையும், உண்ணாவிரதமும் ஏன்? ஆனால் தனித்தொகுதியை சில பஞ்சமர்களுக்குக்கொடுத்துவிடப் போகின்றார்களாம்! உலகம் இருண்டுவிடப்போகின்றதாம்! இதனைக்கேட்கும் நமது குழந்தைகளும் சிறிக்கின்றன!

இன்னொரு கூச்சல் பத்திரிகைகளில் எழுகின்றன. 'கோவிலை திறந்து விடுங்கள்' 'குளங்களை பொதுவாக விடுங்கள்' 'பஞ்சமர்களை வீதிகளில் போகவிடுங்கள்' என்று காசிமுதல் ராமேஸ்வரம் வரை கூக்குரல் போடுகின்றார்கள். இதனால் என்ன என்று கேட்கின்றேன்? கோவிலையும் குளங்களையும் பஞ்சமர்களுக்குத் திறந்துவிட்டால் அவர்களுக்கு என்னாகும் என்று கேட்கின்றேன்? அவர்கள் வயிர் நிரம்புமா? அவர்கள் குழந்தைகளுக்கு வயிர் நிறைய பால் கிடைக்குமா? அவர்கள் பெண்களுக்கு பிரசவ உதவி (Maternity Benefit) கிடைக்குமா? அவர்கள் வாழ்வுக்கு வேண்டிய குறைந்தவசதிகள் (Minimum Comforts) என்ன ஏற்படுமெனவும் கேட்கின்றேன்?

உண்மையாக சொல்லவேண்டுமானால் பஞ்சமர்களுக்கு கோயிலைத்திறந்து விடுவதும், குளங்களைத்திறந்துவிடுவதும், பஞ்சமர்களுக்கு உயிரைவிடுகின்றேன் என்று சொல்வதும் நமது 5 கோடிஏழை பஞ்சமர்களை இனியும் மூடபக்தியிலும், மூடநம்பிக்கையிலும், தரித்திரத்திலும், அறியாமையிலும், தாழ்வடைந்து கிடந்து உழலச்செய்யும் தந்திரமென அறிக. இத்தியாதி உபாயங்களால் கடந்த 5000 வருஷமாக தாழ்த்தப்பட்டோர் ஏமாந்து எல்லா சுதந்திரங்களையும் இழந்து மிருக வர்ழ்க்கையில் இருந்து வருகின்றனர். இந்தக் கேவல வாழ்க்கையை நீடிக்கச் செய்யத்தான், நமது இந்து முதலாளிகள் பாமர மக்களுக்குப் பரிந்து பேசுவதாக நடிக்கின்றார்கள்.

நாம் சொல்வது மிகுதி என்றால், காந்தியார் தன்னுடைய கோஷ்டியாராகிய சமீன்தார், மிராசுதார், சுரோத்திரியதார், இவர்களை அந்தந்த ஜமீன், மிராசு சுரோத்திரியம் இவைகளில் இருக்கும் பண்ணை ஆட்களுக்கு வயிற்றுக்குபோதுமான உணவு கொடுக்கச் சொல்லட்டும்? இதற்கு உண்ணாவிரதம் இருக்கட்டும்? இதற்கு உயிரைவிடட்டும்? எந்த ஜமீன்தார், எந்த மிராசுதாரன், எந்த சுரோத்திரியம்தார் இவர் உண்ணா விரதத்திற்கும் உயிரை விடுவதற்கும் இறங்குகின்றான் பார்ப்போம்! தீண்டாதாருக்கு இரண்டொரு சீட்டு அதிகமாகவும் பிரத்தியேகமாகவும் கொடுத்து விட்டார்கள் அதனால் நான் உயிரைவிடப்போகின்றேன் என்றால் அது என்னமதி?

முதலாளிகளுடைய சூட்சிதான் பாமர மக்களை கண்விழிக்க வொட்டாமல் செய்துகொண்டிருக்கிறது. நமது இந்திய முதலாளிகள் கோயில்களையும் அதில் திருவிளக்குகளையும், தேரையும், திருவிழாக்களையும், கோயில் மண்டபங்களையும், குளங்களையும் கம்பராமாயணங்களையும், காலட்சேபக் கதைகளையும் காட்டி பாமர மக்களுக்கு வேண்டிய விஷயங்களில் அவர்கள் மனது நுழையவொட்டாமல் செய்து கடவுளையும், தேவதைகளையும், பேய் பிசாசுகளையும், மந்திர தந்திரங்களையும் கற்பித்து அவர்களை மயங்கச்செய்து வருகின்றனர். இந்த சூதை அறியாத பாமரமக்கள் அற்பசொற்ப விநோத வேடிக்கைகளில் காலத்தைப்போக்கிக்கொண்டு வறுமையிலும், நோய், மரணம், அறியாமையிலும் கிடந்துவருகின்றனர்.

இந்த தந்திரத்தை அனுசரித்தே நமது காந்தியாரும் பஞ்சமர்களுக்கு 'தீண்டாமை நீக்குவோம். கோயில்களில் உங்களை விடுவோம் உங்களுக்காக உயிரைவிடுவோம்' என்ற மழலைச்சொற்களை சொல்லிக்கொண்டு வருகின்றார். இந்த இனிய சொற்களை நமது அம்பேத்கார் தலைவரும் எம். சி. ராஜாவும் கேட்டு மயங்கி விடுகின்றார்கள்! ஆனால் இந்த சொற்களிலுள்ள விஷத்தை உணர்ந்தாரிலர்.

ஒன்று தெரிவிக்கக்கடமைப் பட்டுள்ளோம். தாழ்த்தப்பட்டோர் உலக சுகபோகங்களை அடையவேண்டுமானால் அரசியல் துறையில்தான் அடையமுடியும். எவ்வித அரசியலானாலும் அதை த்தாழ்த்தப்பட்டோர் கைப்பற்றினாலொழிய அவர்களுக்கு தங்கள் தரித்திரமும், சுகமின்மையும், நோயும் பிணியும் நீங்கவே நீங்கா. ஆதலின் தோழர்களே உங்களைத் தவிற யாரும் உங்களை காப்பாற்ற மாட்டார்கள். உங்களை நீங்களே காப்பாற்றிக்கொள்ளல் வேண்டும். (No one can save another. You can only save yourself—Buddha's sayings.)

---

# கல்வி மந்திரி குமாரர் திருமணம்.

## திருநெல்வேலியில் வைபவம்.

11—9—32 தேதி சென்னை கல்விமந்திரி கனம் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் குமாரர் திரு. ராமசுப்புரெட்டியார்அவர்களுக்கும், திரு. குருவய்ய ரெட்டியார் அவர்கள் குமாரத்தி திருமதி ஆவுடையம்மாளுக்கும் திருநெல்வேலியில் விவாகம் விமரிசையாய் நடைபெற்றது. திருமண வைபவத்திற்கு உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும், சிநேகிதர்களும், பந்துக்களும் ஏராளமாய் விஜயம் செய்திருந்தனர். திருமணவைபவத்திற்குப் பின்னர் பாட்டுக் கச்சேரியும் விருந்தும் நடைபெற்றன.

மண மக்கள் ஏராளமான சன்மானங்கள் பெற்றனர்.

---

3-ம் நெ. நமூனா.

கீழ்க்கண்ட விளம்பரமானது ஈரோடு முனிசிபல் ஆபீஸ் நோட்டீஸ் போர்டில் 19—9—32 தேதி பிரசுரிக்கப்பட்டது.

## ஈரோடு டவுன் பிளானிங் ஸ்கீம்

### ஏ விளம்பரம்.

1932-ளு ஆகஸ்டு மாதம் 31-ந் தேதிய மீட்டிங்கில் ஈரோடு முனிசிபல் சங்கத்தார் 1920-ம் வருஷத்திய டவுன் பிளானிங் ஆக்ட் 9-வது பிரிவு 1-வது உட்பிரிவின்படி கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதை ஷை ஆக்ட் 10-வது பிரிவு 1-வது உட்பிரிவின்படிக்கு இதனால் விளம்பரப்படுத்தப்படுகிறது.

31—8—32 தேதிய 242 நெ. தீர்மானம்.

புதிய ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்திலுள்ள விஸ்தீரணத்தில் டவுன் பிளானிங் ஆக்ட் 9-வது செக்ஷன்படி 1-வது நெம்பர் டவுன் பிளானிங் ஸ்கீம் ஏற்படுத்தும்படி டவுன் பிளானிங் டைரக்டர் அவர்களின் அபிப்பிராயத்தின்பேரில் ஆபீஸ் நோட்டு.

டவுன் பிளானிங் டைரக்டர் அவர்களின் சிபார்சுப்படி கீழ்க்கண்ட டவுன் சர்வே நெம்பர்கள் அடங்கிய 1-வது நெம்பர் ஸ்கீமுக்கு ஏ விளம்பரம் பிரசுரம் செய்ய இந்தக் கவுன்சிலார் தீர்மானிக்கிறார்கள்.

ஈரோடு 1-வது பிட்—ட. ச. நெ. 389 முதல் 397, 398ஏ, 399ஏ, 400, 401, 402ஏ, 403ஏ, 405ஏ.

„ 2.வது பிட்—ட. ச. நெ. 1039 முதல் 1044, 1051ஏ.

சூரம்பட்டி —ட. ச. நெ. 39ஏ, 40ஏ, 42ஏ, 43 முதல் 50, 52.

2. ஸ்கீமில் சேர்க்க பிரேரேபித்திருக்கும் விஸ்தீர்ணத்தின் பிளான் காப்பி ஒன்றை (ஏ படம்) 1—10—32 தேதி முதல் 60 நாள் வரைக்கும் முனிசிபல் ஆபீசில் ஆபீஸ் நேரங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

3. பிரேரேபிக்கப்பட்ட ஸ்கீமினால் பாதகம் எற்படும் என்று நினைக்கிற எந்த நபரும் பிரேரேபிக்கப்பட்டிருக்கிற ஸ்கீம் விஷயமாய் 1—12—32 தேதிக்குள் தங்களுடைய ஆக்ஷேபணைகளையோ அல்லது அபிப்பிராயங்களையோ எழுத்து மூலியமாய் சேர்மனவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டியது.

ஈரோடு முனிசிபல் ஆபீஸ்,
தேதி 15—9—32.

கே. ஏ. ஷேக்தாவுத்,
சேர்மன்.

[7ம் பக்கத்தொடர்ச்சி]

தண்ணீர் ஆகாரம் எல்லாருக்கும் சுத்தமாக விருக்கவேண்டு மென்கிறது முனிசிபாலிடி, சுத்தமான காராம் பசுவின்பால் பிராமணன் தவிர சூத்திரன் குடித்தால் நரகத்திற்குப் போவார்கள் அல்லது கெட்டுப்போவார்கள் என்கிறது ஸ்மிருதிவிதி, அதை ஜனசமூகத்தினிடையும் சங்கரர்சட்டம் பரப்பியிருக்கிறது. உச்சிட்ட மன்னம் தாதவ்யம் பிராமணனின் எச்சில் அன்னத்தை திரு. நாராயணசெட்டியாரானசூத்திரனுக்குக்கொடுக்க வேண்டுமென்று சங்கரர்சட்டம் சொல்லுகிறது, காசிவெடிகட்டின தண்ணியை யார்கொண்டுவந்தாலும் சுத்தமாக விருப்பதால் எல்லாரும் குடிக்கலாமென்று முனிசிபாலிடிசொல்லுகிறது. அசுத்தமாயிருக்கும் பார்ப்பானுனுலும் தண்ணீர்அழுக்காகவிருந்தாலும் குடிக்கலாமென்கிறது சங்கரர் சட்டம் அதைமறுப்பவனைஜாதிப்பிரஷ்டமும் செய்யச்சொல்லுகிறது.

ஜன சமூகத்தினடமிருந்து பணம் வசூலித்து வியாதிகளைத்தடுத்து சுகாதார ஏற்பாடுகளைச்செய்து உண்ணலளித்தல், கல்வி, பயிற்சி, அரசு சுயராஜ்ஜியம் முதலியவைகளின் பாதையில் ஜனசமூகத்தைச்செலுத்திக்கொண்டு வரும் முனிசிப்பாலிடிக்குள்ளே பணத்தை வசூலித்து வயிர் நிறைந்துகிடக்கும் பார்ப்பார்களுக்கு பட்சணத்துடன் இரண்டுவயர் சோற்றைப்போட்டு,வயரைப்பெருக்கடித்து ஒன்றுக்குமுதவாத சோம்பேரியாக்கி வம்பு வளர்க்கவும், சூதாடவும், மேகவியாதியைப்பரப்பவும், பிரயோஜனமற்றப் பொய்ப்புராணக்கதைகளைச் சொல்லவும், உபயோகமற்ற கிரிகைகளைச்சொல்லி வயர்வளர்க்கவும், ஒன்றுக்குமுதவாத மூடபக்திகளை உபதேசித்து ஆலோசனுசக்தியைத் தடுத்து விவேகமற்றவர்களாக்கவும் செய்துவரும் சங்கராச்சாரியையும் அவர் சட்டத்தையும் நுழைத்தால் நம்முடைய ஆண்மையை நசுக்கிப்பழிக்கிடமாகியக் குரூரமான ஜாதி ஆசாரங்களினின்றும் பரஸ்பர அன்பினுல் விடுபட்டு முடிதூக்கி தோள் கோர்த்து நிற்போமென்று எதிர்பார்த்தது ஈடேறுமா? மனிதஜாதியுடன் சமநடையாகச்செல்லத்தான் முடியுமா? அறிவுச்சுடர் கொளுத்திய வீதி வழிப்போகத்தான் முடியுமா? காலத்திற்கு முந்திகிழவனுய் குருட்டு நம்பிக்கைஎன்ற மூடச்சுமையால் வளைந்துபோன முதுகு நிமிறத்தான் செய்யுமா? விடுதலையின் கொடியைத் தூக்கிக்காட்டுகிறவர்களின் பாதச்சுவடைப்பற்றத்தான் முடியுமா? நிராசாந்தத்தினிடையே கண்விழித்து உதயம்வருமென்று காத்திருக்கும் உத்தமர்கள் உள்ளம் வருந்தாதா?

நம்மையபமுறுத்தின பழம் பூச்சாண்டி! எப்பொழுதும் நம்முடைய செவியைப்பிடித்துக்கொண்டிருக்கும் ஆசாமி,தானும் தன்னினமும் சௌக்கியமாக விருப்பதற்கு அண்டி அதன் பூஜைக்குப்போகையில் தர்ம நியாயங்களை மிதித்து இடறிக்கொண்டுபோக வேண்டிவருமென்பதை எங்கள்முனிசிபல் கௌன்சிலர்கள் உணரவில்லையே. கோட்டும், ஷர்ட்டும், குல்லாவும், மயிர்வெட்டும்,மீசைமுறுக்கும், கைகுலுக்கும், காரும், காஸ்மாபாலிட்டின் கிளப்புகாப்பியும் அதோடு மனிதத்தன்மை முடிவடைந்து விட்டதென்று முடிவுகட்டி விட்டார்களே?

ஏழைகள் கூலிகள் தொழிலில்லாதவர்கள் வியாதியஸ்தர்கள் இவர்களுக்கு உதவிசெய்ய முனிசிபாலிடி சொல்லுகிறது. பணக்காரர்கள் பங்களாக்காரர்களுக்கு ஆசீர்வதித்து பார்ப்பனர்களான தடியர்கள், சோம்பேரிகள், சூதாடுகிறவர்கள், விவகாரகர்த்தாக்கள், வயிர்நிறைந்தவர்கள் முதலியவர்கட்குச்சோறு போட்டால் சுவர்க்கம் வருமென்று சங்கரர் சட்டம்சொல்லுகிறது.

விஷக்கிருமிகளிருக்கும் எந்தத் தண்ணீரையும் உபயோகப்படுத்தக் கூடாதென்கிறது முனிசிப்பாலிடி எந்த விருஷக்கிருமி இருந்தாலும் தீர்த்தமென்றுபெயர் இருந்தால் அள்ளிக்குடிக்கச்சொல்லுகிறது சங்கரர்சட்டம்.

விரிப்பதை நிறுத்திச் சுருக்கிச் சங்கரர் சட்டத்தைச் சொல்லுவதானுல் மலம் கழித்த பார்ப்பாருக்கு மலத்தைச் சுத்தி செய்ய எவ்வளவு தண்ணீர் வேண்டுமோ அவ்வளவு தண்ணீரில் பாதித்தண்ணீரே சூத்திரர்களுக்கும் பெண்களுக்கும் உபயோகிக்க வேண்டுமென்பது கலியுகத்திற்குப் பிரமாணமான பாராசர ஸ்மிருதியின் விதியின் சங்கரர் சட்டம்.

கனம் சங்கரரோ பெரியவர், குரு, ஆச்சாரி, சங்கரர் அவதாரமேசங்கராச்சாரி. எப்படியிருந்தாலும், அவர்சட்டம் மனிதனை மனிதன் அடிமைப்படுத்தக்கூடாது. அவர் சட்டம் ஒழுங்காய் ரிஷிகளால் ஆத்மார்த்தமாகச் செய்யப்பட்டதாகச் சொல்லுகிறுர்கள். பார்ப்பான் மலநாற்றம் போக கழுகும் தண்ணீரில் பாதித்தண்ணீரை சூத்திரனுக்கும் பெண்களுக்கும் விதித்த விதியின் ஆத்மார்த்தத்தை நாராயணசாமி செட்டியாரும் கார்ப்பொரேஷன் அங்கத்தினர்களும் பிரசிடெண்டு அவர்களும் தெரிந்தது போல சென்னையில் சூத்திரர்களிருந்தால் அவர்களும் பெண்களும் தெரிந்திருப்பார்களோ என்னவோ, இனிமேல் சென்னையிலுள்ள பெண்களெல்லாம் பார்ப்பார்கள் மலம் கழுகும் தண்ணீரின் அளவைப்படித்து, அதில் பாதித்தண்ணீரை அளந்து தங்கள் மலத்தைக் கழுகுவதே குரு பீடத்தை உபசரிப்பதற்கும் மரியாதைக்கும் ஏற்றதாகும். ஏனெனில் பெரியவர்களை உபசரித்து உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுப்பது அவர்களைப்பின்பற்றி அவர்கள் மேலான குணங்களின் வழி நடந்து செல்வதல்லவா? இப்படி உலக வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் குரூரமான கொடுங்கோன்மையை நடத்திச் சென்று இனியும் நடத்த ஆசைகொள்ளும் சங்கராச்சாரிக்கு முனிசிப்பாலிடி உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுப்பவர்களும் அவர்கள் ஜனங்களும் ராஜாங்கத்தில்கூசாமல் பரிபூரண விடுதலை கேட்பது மிகுந்த வியப்பிற்கிடமல்லவா?

உண்மைக்கும் பொய்யிற்கும் ஒப்பந்தம் உண்டாகும் குணம் போய், உண்மைக்குப் பரிந்து பேசும் உத்தம குணம் வந்து தன் சொந்த அறிவை உபயோகப்படுத்தாமல் ராஜாங்கத்தாரை நோக்கி சாம்ராஜ்ய சபைகளில் எங்களுக்கும் ஸ்தானம் வேண்டுமென்று கேட்பது வெட்கக்கேடேயாகும். இதைப்படிப்பவர்கள் எங்கள் டவுனில் இதெல்லாமில்லை, ஸ்மிருதிகளையும் சங்கரர் சட்டத்தையும் யார் கவனிக்கிறுர்கள், இதெல்லாம் முன் காலம், இந்தக்காலத்தில் இதை முனிசிப்பாலிடி கவனிக்காது, நாங்களும் கவனிப்பதில்லை. முனிசிப்பாலிடி சங்கராச்சாரி சொன்னது போலவா நடக்கப்போகிறது. அதுவுமில்லை என்று சொல்லலாம். அப்படியிருக்கும் போது சங்கராச்சாரிக்கு உபசாரப்பத்திரம் எதற்கு? முனிசிப்பாலிடிக்கு விரோதப்பட்ட ஒருவருக்கு எதற்காக உபசாரப்பத்திரம் வாசித்துப் பொதுப்பணத்தை வீண் பண்ணவேண்டும். சங்கராச்சாரிக்கு உபசாரப்பத்திரம் பாவம் செய்யும் பணக்காரர் வீட்டில், சோம்பேரிக்குச் சோறுபோடும் மடத்தில். முனிசிப்பாலிடியில் எதற்காக உபசாரப்பத்திரம்?

---

## சங்கூடங்கலா.

19—9—32 மாலை 5-30மணிக்கு நாகை எஸ். பி. கிருஷ்ணன் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அதுபோது தோழர்கள் எம். எ. கோவிந்தசாமி, ரத்தினசபாபதி. வேணு முதலியோர் சுயமரியாதைக் கீதங்கள் பாடியபின் தோழர்கள் ஆர். வி. கோபால், ஷண்முகம், டேவிஸ், எஸ். வேணுகோபால் முதலியவர்கள் சுயமரிமாதை இயக்கம் என்ன சொல்கிறதென்பதைப் பற்றி சிலமணி நேரம் பேசியபின் தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் நம்நாடு இதரநாடுகளைக் காட்டிலும் வறுமையாகவும், சுதந்திரமற்ற தாகவும், கல்வியற்ற தாகவுமிருப்பதற்குள்ள காரணங்களையும் இன்னும் பல அறிய விஷயங்களைப் பற்றி சுமார் 2மணி நேரம் மிக அழகாகப்பேசினுர். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

---


## கொக்கோகம்.

மூலமும் உரையும்-காலிகோபயின்ட்

64 வகை சிற்றின்ப அசல் கிலேஸ் போட்டோ படங்கள். சதிபதிகளும், தனி மாதர்களும் சேர்ந்த தனி கட்டடத்தோடு, விலை ரூ. 5. வெளிநாட்டினர் ரூ. 5—8—0 முன் பணம் அனுப்பவேண்டும்.

T. G. பாக்கியம் & கோ.,
வேப்பேரி, சென்னை.

---

ANANGARANGABATIKA.

*(Enjoyment Pill)*

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of failure Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**
*Chandanpur,*
**(Khulna) E. B. R.**

---

## எங்கே கிடைக்கும்?

பல மருந்துகளையும் கையாடி பயனடையாமல் இருப்பவர்கள் தக்க மருந்தையறிந்துகொள்ளும் பொருட்டு இதைப்பிரசுரம் செய்திருக்கிறேம்.

எவ்வித வியாதிக்கும் ஏற்றமருந்து பழனி மலையப்பசாமி வைத்தியசாலையில்தான் கிடைக்கும்.

வியாதிவிபரம் எழுதி ஏற்ற மருந்தை அடையுங்கள்! இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S.I.

# காந்தியின் சபதம்.

## மரணப்பட்டினி கிடக்க முடிவு.

(C. S.)

செப்டம்பர் மாதம் 20-ந் தேதி திரு. காந்தியின் “மரணயோகம்” தொடங்குகிறது. உண்ணாவிரதம் இருந்து யதீந்திரதாஸை பின்பற்றிச் செல்ல காந்தி தீர்மானித்துள்ளார். இவர் உண்ணாவிரதம் கொண்டால் அக்டோபர் மாதம் 20 தேதிவரை தான் உயிருடன் இருக்க முடியும் என்று அசோசியேட் பிரஸ் நிருபர் விசாரித்து அறிந்து கூறுகிறார்.

இந்த ‘யோக’ சாதனத்தை காந்தி மூன்றாம் முறையாய் கைக்கொண்டதன் காரணம் என்ன? அதன் வரலாறு யாது? இவற்றை (12 தேதி) அரசாங்கத்தார் வெளியிட்ட ஐந்து கடிதங்களில் பரக்கக்காணலாம்.

மார்ச்சு மாதம் 11 தேதி திரு. காந்தி இந்திய மந்திரி சாமுவேல் ஹோருக்கு எழுதிய கடிதத்தில் வருமாறு குறிப்பிடுகிறார்.

1. பத்திரிகைகளிலிருந்து சமீபத்தில் அரசாங்கத்தார் வகுப்புப் பிரச்சினைப்பற்றி ஓர் முடிவு கூறக்கூடும் என்று காண்கிறேன்.

2. மேல் வகுப்பார் பல நூற்றாண்டுகளாக கட்டுப்பாடாக, கீழ் மக்கள் என்பாரை அகௌரவப்படுத்தி தாழ்த்தியுள்ளார்கள் என்பதை நான் அறிவேன்.

3. ஆயினும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதி கூடாதென லண்டனில் வட்டமேஜை மகாநாட்டிலேயே வாதித்தேன்.

4. இந்தியா திரும்பியதும் எனது கொள்கைக்கு ஆதரவு தேடலாம் என்று எண்ணியிருந்தேன். (சிறைப்பட்டதால்) முடியாது போயிற்று.

5. தாழ்ந்த மக்களும் எவ்வளவு விரிவான வாக்குரிமை அளிப்பதிலும்—ஆண்களுக்கும் பெண்களுக்கும், சொத்து உடையவர்கட்கும் இல்லாதவர்கட்கும் கல்வி கற்றவர்கட்கும் கல்லாதவர்கட்கும் வாக்குரிமை அளிப்பதில்—எனக்கு சம்மதமே.

6. ஆனால் தனித்தொகுதி அளித்தால், தாழ்ந்த வகுப்பினர், மேல் குலத்தவரை வயிற்றுப் பிழைப்பிற்கு நம்பி இருத்தலால், முன்னவருக்கு தீங்கே நேரிடும். மேல் கீழ் வகுப்பினர்கள் ஒருக்காலும் ஒன்று சேர இயலாது, இந்து மதமே அழிந்துவிடும்.

7. ஆகவே அரசாங்கத்தார் தாழ்தப்பட்டவர்களுக்கு தனித்தொகுதி அளிக்க தீர்மானித்தால் நான் பட்டினி கிடந்து மாள்வேன்.

இதுவே திரு. காந்தியின் முதற் கடிதத்தின் சாரம். இதற்கு சாமுவேல் ஹோர் ஏப்ரல் மாதம் 13 தேதி விடுத்த பதிலில் லார்டு லோத்தியனது வாக்குரிமைபற்றி அறிக்கை வெளியான பின்னரே, கவர்மெண்டார் வகுப்புப் பிரச்சினைப்பற்றி ஒரு முடிவு கூறக்கூடும் என்றும், மேற்கொண்டு திரு. காந்தி இருப்பதா? இறப்பதா? என்ற பிரச்சினையை முடிவு செய்து கொள்ளலாம் என்றும் தெரிவித்து விட்டார்.

பிரிட்டிஷ் ஸ்டைல் என்றால் நமது மகாகனம் மந்திரிக்கே தகும்.

பின்னர் லோத்தியன் அறிக்கை கவர்மெண்டு ‘வகுப்புப் பிரச்சினை முடிவு’ இரண்டும் வெளியாயின. உடனே ஆகஸ்டு மாதம் 18 தேதி திரு. காந்தி பிரதம மந்திரிக்கு கடிதம் எழுதினார். தன் வாழ் நாள் குறுகி விட்டதாக நினைத்து விட்டதால் அக்கடிதத்தை தந்தி மூலம் பிரதம மந்திரிக்கு அனுப்பிவைக்கும்படி திரு. காந்தி, அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். ஆயினும் அது நடைபெறவில்லை என்று தெரிகிறது. இக்கடிதத்திற்கு பிரதம மந்திரி செப்டம்பர் மாதம் 8 தேதிதான் பதில் எழுதியுள்ளார்.

காந்தி தனது இரண்டாவது கடிதத்தில்,

1. “தாழ்ந்த வகுப்பினரின் பிரதிநிதிகள் ஒரேவித வாக்குரிமையுடன் கூடிய பொதுத் தொகுதியின் மூல்யமே வெளிவரல்வேண்டும்.

2. தனித்தொகுதி தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு நன்மையா? தீமையா? என்ற பிரச்சினையில் எனது மற்ற கொள்கைகளும் ஊடுருவி நிற்கின்றன. தனித்தொகுதி நன்மையாயின்எனது வாழ்க்கையே பொய்த்துவிடும். இவ்விரதமே என் குற்றத்திற்கு உரிய பிராயச்சித்தம் ஆகட்டும். என்னை முழுதும் நம்பி பின்பற்றும் பல கோடி மக்களும் உண்மையை உணரட்டும்.

3. தனித்தொகுதியால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துன்பமே அன்றி ஒருநாளும் இன்பமில்லை. ஆகையால் அரசாங்கத்தார் தம் முடிவை மாற்றும் வரை பட்டினி கிடப்பேன். மாற்றாது போயின் உயிர் துறப்பேன் என்று குறிப்பிட்டார்.

பின்னர் பிரதம மந்திரியின்பதில்:- அதையும் சுருங்கக் கூறுவாம்.

1. அரசாங்கத் தீர்ப்பில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பொதுத்தொகுதியில் சேர்ந்து ஓட் கொடுக்க உரிமையும், முதல் இருபது ஆண்டுகளுக்கு மாத்திரம் ஒரு சில தனி தொகுதிகள் மூலயம் தம் பிரதிநிதிகளை அனுப்ப வசதியும் கண்டுளோம். இம்முறையில் தாழ்ந்த வகுப்பினர் இரண்டு ஓட்டுகள் அடைகின்றனர்.

2. முஸ்லீம்களுக்கு அளித்துள்ள தனித் தொகுதியில் இந்து முஸ்லீம்களுக்குள் எவ்வித தொடர்பும் இல்லை, ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என வகுத்துள்ள தனித் தொகுதி முறையில் உயர் குலத்தவர் இவர்கள் ஓட்டை நாடவும், இவர்கள் மேன் குலத்தவர்தம் ஓட்டை தேடவும் வேண்டும். ஆகவே தாழ்த்தப்பட்ட மக்கள் மற்ற இந்து சமூகத்தினின்றும் பிரிவுபடவில்லை என்பது புலனாகும்.

3. இந்நிலையில் தாங்கள் உண்ணாமல் இருந்து என் உயிர் விடவேண்டும் என்பது புலப்படவில்லை. தாங்கள் படும் கொடுமைகளை போக்குவான் வேண்டி தாழ்த்தப்பட்ட மக்கள் இரண்டு ஓட்டுகள் பெறுவதை தடுப்பதே தங்கள் விரதத்தின் நோக்கம் போலும்!

4. இந்துக்கள் தங்களுக்குள் ஒரு முடிவிற்கு வராதவரையில் எங்கள் தீர்மானத்தை (தங்கள் கதி என்னவாயினும்) மாற்ற முடியாது.

இதைக்கண்டவுடன் திரு காந்தியின் கண்கள் சிவந்தன. ஆயினும் செப்டம்பர் 9உ. மீண்டும் ஒரு கடிதம் விடுத்தார். அதில்

1. தீண்டாதார் விஷயம் சமய விஷயம் ஆகையால் தங்களால் அது தீர்மானிக்கப் படக் கூடியதல்ல.

2. தாங்கள் அளித்துள்ள இரண்டு ஓட்டுகள் அவர்களுக்கு ஒரு நன்மையும் செய்யாது. அவர்களுக்கு தனித்தொகுதி அளிப்பதன் மூலயம் இந்து மதத்தையே அழிக்க முன் யோஜனையுடன் ஏற்பாடாகி இருக்கிறது என்றே நான் நினைக்கிறேன்.

3. தாழ்தப்பட்ட மக்கள் தங்களை இந்துக்கள் என்று கூறிக்கொள்ளும் வரை இவ்விதம் தனித்தொகுதி மூலயம் பிரிப்பதை நான் ஆட்சேபிக்கிறேன்.

4. இந்து சமூகசீர்திருத்தக் காரர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றத்திற்காக செய்து வரும் கைங்கரியங்களை தனித்தொகுதி ஏற்படாமல் நிறுத்தி விடுவார்கள் என்பதை அரசாங்கத்தார் உணரவில்லை. என்று எழுதியிருக்கிறார்.

இக்கடிதங்களில் மந்திரிகளின் தெளிவும் திரு காந்தியின் மயக்கமும் வெளியாவதை உய்த்துணர்க.

சாதி மதம் கடந்த நாட்டிற்காக (Nationalism) வல்லரசை எதிர்த்து நின்ற வீரன், அந்தோ! கேவலம் இந்து சாதிக்காக இந்து மதத்திற்காக தற்கொலை செய்து கொள்ள துணிந்ததை என்னென்று கூறுவது.

“கொடுங்கோன்மை” “வரிக்கொடுமை,” “மானபங்கம்” இவைகளை முன் நிறுத்தி அரசாங்கத்துடன் போராடியாய் விட்டது. முன் 1919 ஆண்டில் கிலாபத்தை முன் நிறுத்தி கிளர்ச்சி செய்ததுபோல் இன்று (முஸ்லீம்கள் ஒதுங்கிவிட்டதால்) இந்து மதத்தை முன் நிறுத்தி ஒடுங்கிய ஒத்துழையாமையை உயிர்பிக்க காந்தி உண்ணாவிரதம் கொள்கிறார் போலும்.

20உ உண்ணாவிரதம் கொண்டால் மூன்றாம் முறையாகும். முன் ஒருக்கால் 21 நாள் பட்டினி கிடந்தது பலருக்கு ஞாபகம் இருக்கலாம். அந்த விரதத்தினால் இந்து முஸ்லீம் சமூக மாச்சரியம் மாறி, இரண்டு சமூகங்களும் இரண்டறக் கலந்துவிடும் என்று நம்பினோர் காந்தியுள்பட கோடி. நாட்டில் ஏற்பட்டுள்ள விழிப்பிற்கு (Awakening) தான் பொருப்பாளி ஆகையாலும் அவ்விழிப்பினாலேயே இந்து முஸ்லீம் பிணக்கு முற்றியதனாலும் பிராயச்சித்தமாகவும், சீர்திருத்த முறையாகவும் அன்று பட்டினியிட்டார். பின்னர் ஏழு நாட்கள் தன் ஆச்சிரமத்திலேயே ஒழுக்கக்குறைவு ஏற்பட்டதனால் பட்டினியிட்டார். இவ்விரண்டு விரதங்களாலும் ஏற்பட்ட பலன் என்ன. ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டை தாழ்பாள் என்ற கதையைப் போல் இந்து முஸ்லீம் பிணக்கு முற்றி தீராப் பகையாய் முடிந்தது. ஆண்—பெண்ணை பிரித்தாலன்றி இயற்கை உணர்ச்சியே மேவி நிற்கும் என்பதும் உறுதியாயிற்று. அந்த இரண்டு விரதங்களாலும் தன் தாய் நாட்டினரை, தன் உடன் பிறந்தோரை, தன் உடலில் பிறந்தோரை மாற்ற முயன்றார். இன்றோ 5000 மைலுக்கு அப்பாலுள்ள ஒரு அன்னிய வல்லரசை மாற்ற விரதம் மேற்கொள்கிறார். திரு- காந்தி கல் பிள்ளையாரின் மேல் மோதிக் கொள்கிறார். பலன் ஊகிக்கக்கூடியதே.

காந்தி முனிவர் இத்துன்பங்களை மேற் கொள்வது எதற்கு? இந்து மதத்திற்கா! வியாசன் நாவிலே பிறந்து இன்று காந்தியின் உயிரிலே நிற்கும் இந்து சமயம் சாதித்ததுதான் என்னை! 35 கோடி மக்களை நடைபிணங்களாக்கி, அஞ்ஞான களஞ்சியங்களாக்கி பன்னூறு ஆண்டுகளாக அன்னியருக்கு அடிமை ஆக்கின பெருமை தவிர வேறு என்ன பெருமை தான் உண்டு? இன்று ஏழு கோடி மக்கள் நாயினும் கடையராய் வாழ்வதற்கு இந்து மதமே அன்றி இந்து சமூகமா காரணம்? இல்லை! இல்லை!! கேவலம் தனித்தொகுதியால் சட்டென அழியக்கூடிய மதமும் ஓர் மதமா? அத்தகைய மதத்தின்பொருட்டு உயிரையும் விடவேண்டுமோ! ‘தீண்டாதாரை கண்ட மாத்திரம் இந்துக் கோயில்களுக்கு தெய்வீகம் போய் விடும்’ என்று கூறும் வைதீகர்களுக்கு தனித்தொகுதியை ஏற்படுத்தின அன்றே இந்து மதம் அழியும் என்று அஞ்சும் காந்திக்கும் வேற்றுமையில்லை. ஒன்று இவைமாயப்பேச்சாய் இருக்கவேண்டும் அன்றி அறியாதார் கூற்றாய் இருக்கவேண்டும். இரண்டில் எதுவோ? காந்தி,

தனது மூன்றாவது கடிதத்தில் 4 வது பாராவில் கண்டுள்ளதைச்சற்று காண்க. தனித்தொகுதி ஏற்பட்டால் இந்து சமூக சீர்திருத்தக்காரர்கள் தாழ்ந்த வகுப்பினரை கைவிட்டு விடுவார்களாம். தாழ்ந்த மக்கள் இந்து மதத்தினர் என்ற காரணத்தினாலேயே சீர்திருத்தவாதிகள் இத்துணை பாடுபடுகிறார்களாம். தனித்தொகுதியினால் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்துமதத்திற்குப்புறம்பாய் விடுவதால் அவர்கள் உதவி கிடைக்காதாம். என்னே இந்தச்சீர்திருத்தக்காரர்கள் அறிவும், இவர் தம் சமய பக்தியின் நேர்மையும்! பிறர் எவராயினும் அவர்தம் இடுக்கண்களைவதன்றோ நட்பு. தனித்தொகுதி காரணமாக தாழ்ந்த மக்களை புறக்கணிக்கக் கூடிய சீர்திருத்தக்காரர்களை நம்பி எத்துணை காலம் தீண்டாதார் வாழ்வது. இந்து மதமே உன்னைவிட இழிந்த நிலை எய்தி உள்ள மதம் வேறு உண்டோ!

திரு. காந்தி முதற்கடிதத்தில் 4 வது பாராவில் தன்னை, தாய் நாடு திரும்பியதும் சிறை செய்ததால் தான் பொதுத் தொகுதிக்கு ஆதரவு தேட இயலாது போயிற்று என்று கூறுகிறார். 25 வருடமாக ஓடியாடி தேடி தேடிப்பார்த்த செல்வம் 'இந்து சமூக ஐக்கியம்' கிட்டாது போனதை மறந்து, உயர் குலத்தினரின் சாதி ஆணவத்தை உணர்ந்தும், அதையும் மறைத்து, சிறைப்பட்டதால் 'எல்லாம் போயிற்று' என்று துன்புறுவானேன்?

மேலும் எய்தவன் இருக்க அம்பை நோவானேன்! பல்வேறு சமூகங்களும் ஒன்றுபடாதிருந்த நிலையில் அரசாங்கத்தார் ஒரு 'முடிவை' வெளியிட்டனர். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தொகுதி அமைத்ததற்கு இந்தியர் அன்றி அன்னியர் காரணமல்ல என்பதையும் திரு. காந்தி மறந்து விட்டார் 'தனித்தொகுதியை விடுத்தால் அன்றி உயிர்விடுவேன்' என்று சிமைக்கு எழுதியதைவிட்டு 'பொதுத்தொகுதியை கொண்டாலன்றி' உயிர்விடுவேன்,என்று சாதிஇந்து தலைவர் கட்கும் தீண்டாதவகுப்பு தலைவர்களுக்கும் ஓலை விட்டிருந்தால் நேர்மையாய்இருக்கும்; அதுவே காந்திபோன்ற உண்மையாளர்களுக்கு அழகாகும்.

"தங்களை இந்து சமூகத்தை சார்ந்தவர்கள் என்றுசொல்லிக் கொள்ளும் வரை தீண்டாதவர்கட்கு தனித்தொகுதிஅளிக்க ஒருப்படேன்" என்கிறார் காந்தி. நாசிக், வைக்கம், கோவில் சத்தியாக்கிரஹங்களே திரு- காந்திக்கு இம்மயக்கத்தை ஊட்டின. தீண்டாதார்களின் அம்முயற்சிகள் தங்கள் சமூக அந்தஸ்தை விர்த்திசெய்து கொள்ளவே அன்றி இந்து சமயத்தில் உள்ள பற்றினால்அல்ல என்பதை திரு. காந்தி உணரட்டும். பிறமதம் புகும் இந்துக்களில் பெரும்பான்மையோர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்பதை திரு. காந்தி அறியட்டும். பல்லாயிரம் ஆண்டுகளாக தமக்கு இடையூறின்றி நன்மைசிறிதும் நல்கா ஒரு மதத்தின்பால் தாழ்த்தப்பட்டமக்களுக்கு பற்றுஎவ்வாறு இருக்கும்? இராமனுஜர் போன்றோர் சமயச்சார்பில் தீண்டாதமக்களை சீர்திருத்த முயன்றும் பலனில்லாது போனபின், சமயத்தை புறக்கணிப்பதைத்தவிர தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழிவேறுளதோ? இதை தாழ்த்தப்பட்ட மக்களும் திருகாந்தியும் ஆராயட்டும்.

கூட்டுத்தொகுதியே காலச்சிறந்தது எனினும் அதைஅடைய உண்ணாவிரதமோ ஏற்றமுறை? அறிவிற்கு ஒவ்விய முறைவேறு இல்லையோ? உடலைவாட்டி சட்டத்திற்கு அடங்கி நடக்கச்செய்யும் அடக்குமுறைக்கும் உள்ளத்தை கசிந்து உருகச்செய்து, (அறிவை மறைத்து) ஒரு குறிப்பிட்ட கொள்கையை பிறர் ஏற்கச்செய்யும் சத்தியாக்கிரக முறைக்கும் வேறுபாடு ஏதுளது. ஆய்ந்து தெளிந்து தேராத ஓர்முடிவு நீடித்து நிற்குமா?

காந்திஅடிகள் தீர்மானத்தை அற்பமாக கருதி இக்கட்டுரை வெளிவந்தன்று 'பீஷ்ம' என்றபெயர் காந்திக்கே முற்றிலும் பொருந்தும்.ஆயினும் காந்தி இந்த தீர்மானத்தை கொள்வதேன் என்பதை ஆராய்வது நம் கடன்.

பட்டினி கிடத்தல் பொதுவாக சமயசம்பரதாயம். இன்றுமதத்தின் பேரால் காந்தி உண்ணாவிரதம் மேற்கொள்வதால் மறைந்து வரும்இந்து சமய உணர்ச்சி புத்துயிர்பெரும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே உண்ணாவிரதம் அறிவியக்கத்திற்கு இடையூறுவிளைவிக்கும்.

உண்ணாவிரதம் யாருக்கும் என்ன வேணும் நன்மைசெய்யாது. இதை அரசியல் முறையாக்கொள்வது பேதமை. இது அறிவிற்கு ஏற்றது அன்று. நியாயமற்றது, மனிதத்தன்மைக்கு மாறுபட்டது.

ஆகவே தீண்டாதமக்களுக்குத் தனித்தொகுதியே நன்மைதரும். என்று ஆராய்ந்துகண்டுகோர்விரதத்திற்கு அஞ்சி, கொள்கையை கைவிடாது, பிரிட்டிஷ் மந்திரிகளைப் போன்று தம்கடமையைச்செய்வாராக.

"உண்மையோடியைந்த வாழ்வு" நடாத்தி சுயசரிதம் எழுதிய திரு. காந்தி அறிவோடியைந்த வாழ்வு என்று நடத்துவாரோ அறியோம்.

---

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

மனிதனுக்குப்பசி இயற்கை, அப்பசியைத்தணிக்க உணவு தேவை; இந்த பல திறப்பட்ட தொழில் செய்யும் மக்களெல்லோரும் இந்த இயற்கைக்கு நியதிக்குட்பட்ட "மனிதர்கள்" என்பதனுல் தான்!

நியாயம் இவ்வண்ணமிருக்கஇவன் படித்தான்; அதனுல் பெரிய உத்தியோகம்செய்து பசித்தபோது சாப்பிடுகிறான்; அந்தமட்டிப்பயல் படிக்கவில்லை அதனுல் தாழ்ந்த வேலை செய்து பசியெடுத்தபோது பட்டினி கிடக்க வேண்டியதுதான்" எனச்சிலர் கூறும் வாதம் எவ்வளவு அர்த்தமற்றதாயும், இயற்கைக்கு மாறுபட்டதாயுமிருக்கிறதென்பதை அறிஞர்கள் சிந்திக்க.முதலாவதாக மக்கள் அனைவரும் எவ்வகை பேதமுமில்லாது மூலவசமான, ஆனால் கட்டாயமாகக் கல்வி பயிலும் படி செய்யவேண்டியது அந்நாட்டின் சர்க்காரது கடமை. இரண்டாவது, கல்விக்குத்தக்க பதவியை வகித்துள்ள மனிதர்களிடம் அவர்களின் கல்விக்குத் தகுந்த வேலை யேற்றுக் கொண்டு, பசிவேளையில் பேதமற்ற போதிய உணவு அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டியதும் அந்த சர்க்காரது கடமையாகும்.

சிலர் இதுபற்றிக் கூறும் ஆட்சேபணையென்னவெனில், "ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பாடு படுவதாயிருக்க, எல்லோருக்கும் ஒரே விதமாக உணவு முதலிய கொடுப்பதென்பது நியாயமற்றது" என்பதாம். ஒவ்வொருவரும் தங்கள் கல்விக்குத் தக்கவாறு வெவ்வேறு விதமான வேலைகளைச் செய்கிறார்களென்பது உண்மைதான். ஆனால், இந்த மனிதர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாகப் பாடுபடுவது என்? என்று நாம் கேட்கிறோம். அவனவன் பசிப்பிணியை நீக்கிக் கொள்வதற்காக வல்லவோ? சேவிப்பதும், சென்றிரப்பதும், தெண்ணீர்க்கடல் கடப்பதும், பாவிப்பதும் பாட்டிசைப்பதும், இப்பாழும் வயிற்றின் உபாதையைத் தீர்த்துக்கொள்வதற்காக வல்லாமல் பிறிதெதற்கு? அங்ஙனம் பாடுபடுவதெல்லாம் வயிற்றுப்பசியைத் தணித்துக் கொள்வதற்காயிருக்க பசிநேரத்தில் அனைவருக்கும் உணவிட வேண்டும் என நாம் கூறுங்கால் சிலர் சீறிவிழுவதன் கருத்தென்ன?

நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் எக்கேடு கெட்டாலும் சரி; தான் மட்டும் வயிறு வாடாமல் பால் பாயாசமும், பச்சடி பிரமான்னமும் உண்டு, ஏழைகள் கண்டு ஏங்கித் தம்மை அடிபணியச்செய்ய வேண்டுமென்பதற்காகவல்லவா செல்வந்தர்கள் சமதர்மத் திட்டத்தை எதிர்க்கின்றனர்? உலகில் எத்தனையோ பேர், பிறக்கும் பொழுதே, கண்ணற்றகபோதியாயும், காலில்லாத நொண்டியாயும், கையற்ற முடமாயும், பேசச் சக்தியற்ற ஊமையாயும், கேட்கச்சக்தியற்றசெவிடாயும் பிறக்கிறார்களே! இவர்கள் கதி என்ன?

இவர்களெல்லோரும் கல்விகற்றபோதிலும், கண்ணற்றவன், கண்களை உபயோகித்துச்செய்ய வேண்டியவேலைகளைத் தவிர வேறெதையாவதுதான் செய்ய முடியும். அதுபோலவே காலில்லாதவன், காலாலாகவேண்டியதைத் தவிர வேறு வேறு வேலைகள் செய்யவும், முடவன், கை உபயோகிக்க வேண்டாத வேலை செய்யவும், செவிடன், கேட்காமல், (செவிகளை உபயோகப் படுத்தாமல்) செய்யத்தக்க எழுதுதல் போன்ற வேலைகளையும், ஊமை வாய் பேச வேண்டிய அவசிய மில்லாத வேலைகளையும் தான் செய்ய முடியுமென்பதை எவரே மறுப்பர்?—இந்த அங்கஹீனர்கள் பல வாறிருந்த போதிலும் இவர்கள் செய்யத்தக்க வேலைகளும் பலவாறிருந்த போதிலும், இவர்களெல்லோருக்கும் அந்த நேரம் வந்தவுடன் பசி வந்துவிடுவதில் துவை வேறுண்டோ..?

செல்வவான் மாளிகையில் இத்தகைய அங்கஈனமான குழந்தைகள் பிறந்தால், எவ்விதக் கஷ்டமுமின்றி வேளாவேளையில் உண்டு உடுத்துச் சுகமாகவிருக்கின்றனர். மற்றப்படி இந்நாட்டின் கோடிக்கணக்கான ஏழைகளின் குடிசையில் இத்தகைய குழந்தைகள் பிறந்து வளர்ந்தால், இந்த குருடு, நொண்டி, ஊமை, முடம், செவிடு, ஆகியவர்கள் போகும் கதி என்ன? தகப்பனிடம் ஆஸ்தியொன்றும் கிடையாது. அவனிருக்கும் வரையில் பாடுபட்டுக்கால் வயிறு கஞ்சி இவர்களுக்கு வார்த்தான். அவன் காலத்திற்குப் பிறகோ? இந்தக்கோஷ்டிகள் கூடி ஊரூராய்ச்சுற்றி கடைத்தெருக்களிலும் வீட்டுவாசல்களிலும் சென்று, தங்கள் அங்கக்குறைகளைக் காட்டி, ஈனசுரத்தில் முகாரி இராகம் பாடி, பிச்சை எடுக்க வேண்டியதைத் தவிற வேறு வழியென்னவிருக்கிறது? நாம் இன்று திருநாள் நடக்குமிடங்களுக்குச்சென்றால் இந்த அங்கஈனக்கோஷ்டிகளைத் தான் முதன்முதலில் பார்க்கிறோம். என்பதை எந்த ஆஸ்திகர் இல்லையென்பார்?

பிச்சை கிடைத்த வேளைகளில் அதை உண்பதும், கிடைக்காத வேளைகளில் கையிலகப்பட்டதை அடித்துக்கொண்டு போவதையும் தவிரவேறெதை இவர்கள் செய்ய முடியும்? சமீபத்தில் ஓர் பத்திரிகையில் வெளியான செய்தியில், ஓர் நொண்டி 17 முறை திருட்டுக் குற்றத்திற்காகத் தண்டனையடைந்தானெனப் படித்தோம். "என்ன பாபம் பண்ணியோ இவன் நொண்டியாகப் பிறந்திருந்தும், இப்பொழுதும் இப்படித்திருடுகிறானே?" என்று ஓர் ஆஸ்திகர் ஆவலாதியடைந்தார். "அவன் நொண்டியாயிற்றே என்று அவன் வயிறு பசியாதிருக்கிறதோ? என நாம் அவரைத் திருப்பிக்கேட்டோம். ஆஸ்திகர் தலை குனிந்தார். அவன் திருடுகிறானேயெனில், அவன் ஏன் திருடுகிறானென்பதைக் கவனித்து, அவன்திருடிப் பிழைக்காதிருக்கத் தக்க வழிகளைச் செய்யவேண்டும், இதுதான் ஒழுங்காகும்.

எனவே, நாம் இதுவரை ஆராய்ந்தவற்றால், உலகில் மனிதனாகப்பிறந்த ஒவ்வொருவரும் தத்தமது அந்தஸ்து எவ்வாறிருந்த போதிலும், தங்கள் தங்கள் சக்தியனுசாரம் பாடுபடுவது பாழும் பசியினைத் தணிக்கவே என்பது நன்கு பெறப்பட்டமை காண்க.

### தேவையும் உரிமையும்.

இனி, இதன் மற்றோர்புறத்தை ஆராயில், இந்த ஏழைகளும் அங்க

# சிதம்பரம் ஆதிதிராவிடர்கள் பொதுக்கூட்டம்.

## தோழர் சகஜானந்தம் அவர்கள் எம். எல். ஸி. தலைமை வகித்தார்.

### "நாங்கள் தனித்தொகுதியை விட்டுக்கொடுக்க முடியாது"
### "தோழர் காந்தி உண்ணாவிரதமிருந்து உயிர்விடுவது எதற்காக"?

சிதம்பரம் ஸ்ரீ நந்தனார் கல்விக்கழகத்தில் 18-9-32 ஞாயிற்றுக்கிழமை மாலை 5—30 மணிக்கு ஆதிதிராவிடர்களின் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு தோழர். எ. எஸ். சகஜானந்தம் அவர்கள் எம். எல். ஸி. தலைமை வகித்தார். அவர் தலைமையுரையின் சுருக்கம் வருமாறு,

சகோதர சகோதரிகளே!

இன்று நாம் இங்கு எதற்காக கூடியிருக்கின்றோமென்பதை நீங்கள் யாவரும் அறிவீர்கள்! நாட்டில் இப்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியானது நம்மவர்களையும் தோழர் காந்தியவர்களையும் பொருத்ததாகும். நாம் அன்று முதல் இன்று வரை நம்மவர்கட்குத் தனித்தொகுதியே வேண்டுமென்று போராடி வந்திருக்கிறோம். தோழர் காந்தியவர்கள் நம் தனித்தொகுதியை எதிர்த்துப் பொதுத்தொகுதியை வலியுறுத்தி வருகிறார். தோழர் காந்தியின் வலியுறுத்தலைப்பற்றி அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. நாம் விரும்பியவாறே நம்மவர்கட்குத் தனித்தொகுதியும் பொதுத்தொகுதியில் ஓட்டுரிமையும் வழங்கிவிட்டார்கள்.

நமக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளை மறுப்பதற்காகவே தோழர் காந்தி அவர்கள் உண்ணாவிரதமிருந்து உயிரை விட்டு விடப்போவதாக அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். அரசாங்க மந்திரிக்கு தோழர் காந்தி அவர்கள் எழுதிய கடிதமும் அதற்கு பதில் அரசாங்க மந்திரி காந்தி அவர்கட்கு எழுதிய கடிதமும் பத்திரிக்கையில் வெளியாகியிருக்கின்றது. காந்தியின் உண்ணாவிரதத்திற்காகவோ! உயிர்தியாகத்திற்காகவோ! தாழ்த்தப்பட்டவர்கட்கு வழங்கப்பட்டிருக்கும் தனித்தொகுதியை தடை செய்ய முடியாது என்று அரசாங்கமந்திரி திட்டமாக எடுத்துக் கூறியுள்ளார். தோழர் காந்தி அவர்கள் கூறும் காரணம் நமக்கு வேடிக்கையாகவிருக்கிறது. தீண்டாதாருக்குத் தனித்தொகுதி வழங்குவதாய் இந்து மதத்திலிருந்து அவர்கள் பிரிக்கப்பட்டு தனித்த சமூகமாகவே என்றும் இருக்க நேரிடும் என்று கூறுகின்றார். பொதுத்தொகுதியால்தான் தீண்டாதார் சம உரிமை பெறக்கூடுமென்று நம்பிக்கொண்டிருக்கின்றார். இது அவர் நம்மீது நல்ல எண்ணத்துடன்தான் கூறிவருகின்றார் என்று வைத்துக்கொள்வோம். தோழர் காந்தியின் விருப்பப்படி இன்று எத்தனை கோடி தேசபக்தர்கள், இந்துக்கள் தீண்டாமையை யகற்றிவிட்டு நம்மவர்கட்கு எல்லா ஸ்தாபனங்களிலும் நமக்குப் போதிய உரிமைகளையளித்து பொதுத்தொகுதில் சேர்த்துக்கொள்ளத்தயாராகயிருக்கிறார்கள்? பொதுத்தொகுதியின் பெயரால் எங்கள் சமூகத்தார் எந்த ஸ்தபனங்களையாகிலும் எட்டிப்பார்க்க முடியுமா? பொதுஸ்தாபனங்கட்கு வருவது பின் இருக்கட்டும்; முதலாவது அவர்களும் மனிதர்கள் தான் என்று கருதப்படுவார்கள்? இன்று நம்மவர்கள் உயர் ஜாதி இந்துக்களிடம்படும் கஷ்டத்தை எவர் அறிகின்றார்? பொது ரோடுகளில் நடக்கும் உரிமை, பள்ளிக்கூடங்களில் படிக்கும் உரிமையும், குளத்து நீரை எடுத்துக் குடிக்கும் உரிமையும் தடுக்கப்பட்டு வரும் கொடுமையை எவரால் மறுக்க முடியும். மற்றும் தேவகோட்டை, திருவாடானை, கூத்தூர், மதுராந்தகம் முதலிய இடங்களில் உயர்சாதிக்காரர்களால் சகிக்க முடியவில்லையே. இக்கஷ்டங்களெல்லாம் பின்னர் தானாகவே ஒழிந்து வரும். நாளடைவில் தீண்டாமையும் போய்விடும் இன்று நீங்கள் கூட்டுத்தொகுதியை ஆதரியுங்கள் என்று கூறுவது எவ்வளவு நீதியானது என்பதை நீங்களே யோசியுங்கள். இந்நிலையில் நான் ஒன்று கூறுகிறேன். "உலகமே அழிந்தாலும் கவலையில்லை. எங்கள் சமூகத்தார் முன்னேற்றமடைதலும் சம உரிமை பெற்று வாழவேண்டுமென்பதுதான் என் கவலை,"

இந்நாட்டுமக்கள் தீண்டாமை பொழிந்து சமஉரிமைகொடுத்து பொது ஸ்தாபனங்களிலும் பிறமுன்னேற்றங்களிலும் எங்களுடன் அன்புடன் கலந்து பழகும் நாள் என்றோ அன்று வேண்டுமானால் நமக்கும் உயர்சாதிக்காரர்களிடம் நம்பிக்கையும் உண்மையான அன்பும் ஏற்பட்டால் அப்போது காந்தியின் பொதுத்தொகுதியைப் பின்பற்றலாம். அதுவரை நாம் எவர் எவ்வாறு கூச்சலிட்டாலும் எத்தனை காந்தி பட்டினிகிடந்தாலும், எத்தனை பத்திரிகைகள் நமது தனித்தொகுதியைவிட்டுக் கொடுக்குமாறு பெரிய எழுத்துக்களில் விளம்பரம் செய்தாலும், நாம்மட்டும் இதுசமயம் மிக்க உறுதியோடு ஒற்றுமையாகயிருந்து நமது தலைவர். டாக்டர் அம்பேத்கார் போன்றவர்களுடன் கலந்து தனித்தொகுதியை மட்டும் விட்டுக்கொடுத்து ஏமாற்றமடைந்து விடாமல் மிக்க எச்சரிக்கையாக யிருக்கவேண்டுவது அவசியமாகும்.

நாம் காந்தியாரை சாகவேண்டுமென்று விரும்பவில்லை. அவர் சாகவேண்டிய அவசியமோ, நெருக்கடியோ ஒன்றும் ஏற்படவில்லை. தீண்டாதாரின் தனித்தொகுதியை மறுப்பதற்காக காந்தியார் உண்ணாவிரதமிருந்து இறந்து போவதாகச் சொல்வது பொறுப்புடைய வார்த்தையாகாது. எனவே காந்தியார் இதுசமயம் அவசரமாக தம்உயிரைத் தியாகம் செய்து விடப்போவதாகக் கூறுவதைக்கேட்டு நாம் நமதுஉரிமையை இழந்து உயர்ஜாதிக்காரர்களிடம் இன்னும் அடிமையாகவும் மனிதத்தன்மையற்ற இருகால் மிருகங்களாகவும் இருக்க முடியாது. காந்தியார் வேண்டுமானால் உயர்ஜாதிக்காரர்களிடம் தீண்டமையை யொழிக்குமாறு கேட்டுக்கொண்டு உண்ணாவிரதமிருக்கட்டும், உயிரை விடப்போவதாகவும் கூறட்டும் அது எல்லோராலும் போற்றத்தக்கதாகும் நாமும் போற்றுவோம்.

சிதம்பரத்திலுள்ள பார்ப்பன தீக்ஷதர்களைப்பார்த்து நீங்கள் இன்றோடு தீண்டாமையை விட்டு விடுகின்றீர்களா? என்று கேட்டுப்பாருங்கள்! என்னபதில் கிடைக்கும்? "காந்தி இறப்பதைப்பற்றி கவலையில்லை. தீண்டாமை யொழிவதை நாங்கள் சகிக்கமாட்டோம், எங்கள் உயிரை விட்டேனும் தீண்டாமையையும், இந்துமதத்தையும் காப்பாற்றவே தான் பாடுபடுவோம் என்றுதான் பதில்வரும். தோழர். காந்தி அவர்கள் இங்கு ஸ்ரீ நந்தனார் பட்டணத்திற்கு வந்தபோது நமதுகஷ்டங்களைச்சொல்லி அதைப்போக்குவதற்கு வழிகாட்டுங்கள் என்று கேட்டுக்கொண்டோம். அவர் தக்கபதில் ஒன்றும் கூறாது மௌனமாகவேயிருந்து விட்டார். சிதம்பரத்தில் தற்சமயம் நடக்கப்போகும் தேர்தல் சம்மந்தமாக நம்மிடம் ஓட்டுக்கேட்கவருபவர்கள் நம்மிடத்திற்கு நேரே மோட்டாரில் வந்திறங்குகிறார்கள். இது மூன்று வருடத்துக்கு கொருமுறை! நாம் அவர்கள் வீதிக்குச்சென்று ஓட்டுக்கேட்பதானால் அவர்கள் வீதிக்குள்ளேயே போக முடியாது. போனாலும் நின்றுகொண்டுதான் பேசவேண்டும். அடிமையென்ற முறையில் அடக்கமாகவே நின்றுபேசவேண்டும். பணக்காரர்கள் நம்மவர்களை எதுவும் மரியாதைதாழ்வாகப்பேசினாலும் சகித்துக்கொண்டுதான்வரவேண்டும். இது தான்நமது இன்றைய நிலையாகும். பணக்காரர்களில் சிலர் இதுபோது நம்மவர்களில் படிப்புவாசனையில்லாத தம்வீட்டுப்பண்ணையாட்களை தேர்தலில் நிற்கும்படிசெய்து ஸ்தாபனங்கட்கு அங்கத்தினராக வருமாறுசெய்கின்றார்கள். இதுவும் அவர்கள்சொந்த நன்மையின் பொருட்டேயாகும். இந்நிலையில் நாம்எப்படி பொதுத்

---

வீனர்களும், மனிதனுக்கு அவசியம் தேவையான வயிற்றுப்பாட்டுக்காகப் பாடுபட, அதே நேரத்தில் ஓர் செல்வான் என்ன எண்ணுகிறான்? —வியாபாரம் பெருகவேண்டும். அளவு கடந்த லாபம் கிடைக்கவேண்டும்! மாடமாளிகை கூடகோபுரங்கள் கட்டவேண்டும்; மோட்டார் ஆகாயக் கப்பல் வாங்கவேண்டும், பலமனைவியரை மணக்கவேண்டும், வைரத்தினாலும் தங்கத்தினாலும், பட்டுப்பட்டாடைகளாலும் அவர்களை அலங்கரித்துப் பார்க்கவேண்டும். விதவிதமான உணவு உண்ணவேண்டும், விதவிதமான உடை உடுக்கவேண்டும், பாங்கிகளில் பணத்தை வட்டிக்குப் போட வேண்டும். ஒரு ஜமீனையே விலைக்கு வாங்க வேண்டும்" என்று இப்படியெல்லாம் எண்ணமிடுகிறான். இவைமனிதனின தேவைக்கதிகமானவை என்பதிலென்ன தடை? தேவையான உணவு கிடையாமல்பல லக்ஷக்கணக்கான மக்கள் தவிக்கையில், இத்தப்பணத்திமிர் படைத்தவன் இவ்வாறெண்ணமிடுகிறான்.— ஒவ்வொருவனும் இவ்விதமாகவே எண்ணமிட்டு முயலுவானால் அந்த விஷயம் வேறு. தேவையான உணவு கிடைக்கவழியே உலகிலில்லாவிட்டால் ஒருமனிதன் தனது சக்திக்கியன்றபடி மனப்பூர்த்தியாகப் பாடுபட்டும், அவனுக்கு அவசியம் தேவையானதும், உரிமைப் பொருளானதுமான உணவு கிடைக்காவிட்டால் இந்த பிரமாண்டமான உலகம் அந்தத் தனிமனிதனுக்கு என்ன உதவியைச் செய்ததது? ஒருமனிதன் இயன்றவரை பாடுபடத்தயாராயிருந்தும் அவனது ஒரு வயிற்றுக்கு உணவு கிடைக்காவிட்டால் இந்த உலகம் இருந்தால் தானென்ன? அன்றி அழிந்தால்தானென்ன? இதனைக்குறித்தே காலஞ்சென்ற, கவி, சுப்ரமண்ய பாரதியாரும் "தனிமொருவனுக் குணவில்லையெனில் ஜகத்தினை யழித்திடுவோம்" என்று ஆத்திரமூண்டு, உணர்ச்சி ததும்பிக் கூறினர்.

எனவே, உலகில் மனித சமூகத்தில் தோன்றிய ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணும் தங்கள் தங்களது கல்வியறிவிற்கும், சக்திக்கியன்றவாறு பாடுபடுவதும், அவரவர்கள் உலகில் உயிர் வாழ்வதற்கின்றியமையாததான சுத்த ஆகாயம், நல்ல தண்ணீர், போதிய உணவு, ஓய்வு, தங்கியிருக்கச் சவுகரியமான இருப்பிடம் முதலியன பெறும் வண்ணம் நாட்டின் அமைப்பு திருத்தப்படவேண்டியதும் அவசியமாகும். இனி, அவற்றை அடையத்தக்க தேச அமைப்பு எவ்வாறிருக்க வேண்டும் என்பதை அடுத்த கட்டுரையில் விளக்குவாம்.

---

தொகுதியில் நின்று பொதுஸ்தாபனங்கட்குப் போய் சமவுரிமையடைந்து முன்னேறப்போகின்றோம். நமக்கு சிறிதேனும் பொதுத்தொகுதியில் நம்பிக்கையில்லை. நாம் ஆரம்பமுதலே தனித்தொகுதிதான் வேண்டுமென்று கூறிவந்தோம். இன்னும் நாம் தனித்தொகுதியை தான் ஆதரிக்கின்றோம். நம் தலைவர்களிலொருவரான தோழர் எம். சி. ராஜா அவர்கள் ஆரம்பத்தில் நம்முடனிருந்து தனித்தொகுதியை நாடினர். வடநாடுசென்று அங்குள்ளார்வசப்பட்டு இன்றுபொதுத்தொகுதியை வலியுறுத்துகின்றார். எவர் எவ்விதம் கூறினும் நாம் ஏமாற்றமடையாது நமது உரிமையில் நாம்மிக்க எச்சரிக்கையாகவும், விழிப்பாகவும் இருக்குமாறு வேண்டுகிறேன்.

அதன் பின் தோழர்கள் அ. பொன்னம்பலனார். என். தண்டபாணி, எஸ். பெரியசாமிமுதலியவர்கள் தனித்தொகுதியை ஆதரித்தும், காந்தியின் உண்ணாவிரத மிருந்துஉயிர்விடப் போவதாகச்சொல்லும் அறிக்கையைக்கண்டித்தும், விரிவுரை நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரை கூறியபின் எல்லோருக்கும் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. கூட்டம் முடிவில் தென்னார்க்காடு ஜில்லா போர்டு தலைவர் தோழர் ஜம்புலிங்கமுதலியார் தம் சகாக்களுடன் வந்து கலந்துகொண்டார். அவர்கட்கும் நன்றி கூறி மலர்மாலை சூட்டினார்கள் என்று நமது நிருபர் எழுதுகிறார்.

[4ம் பக்கத்தொடர்ச்சி]

கோடிக்கணக்கான வருடங்களாயினவென்றும் அதில் மனிதர்கள் தோன்றியும் லக்ஷக்கணக்கான ஆண்டுகளாயிற்றென்றும் பூமி சாஸ்திரம் (Geography) சித்தாந்தப்படுத்துகிறது. நமது உலகத்திற்கு ஆதாரமாக இருக்கும் சூரிய உலகம் உற்பத்தியாகி முப்பத்தைந்து கோடியே ஐம்பது லட்சம் வருடங்களானதாக லீகாண்டி என்னும் விஞ்ஞான விற்பன்னர்கணித்துள்ளார். ஆதியில் அக்னிமயமாயிருந்த இந்த உலகம் குளிர்ந்துகட்டிமயமாக 8,00,00,000 எட்டுகோடி வருஷங்களானதன்றியில்; இது சூரியனிடமிருந்து பிரிந்தபோது 2,00,000 சென்டிகிரேட் உஷ்ணத்திலிருந்து 200 சென்டிகிரேட் குளிர்ச்சிக்குவர 350000000 முப்பத்தைந்து கோடி வருஷங்களாயின. இப்படி ஜனித்த பிரபஞ்ச பிண்டமானது இப்போது 1256195670000000000000 டன் கனமுள்ளதாயிருப்பதாக லெப்ரோடிக் (Leprotic] என்னும் சாஸ்திரியார்கணித்துள்ளார். மேலும் ஒளியானது விநாடியொன்றுக்கு 192,500 மைல்கள்வீதம்செல்வதாக வானசாஸ்திரம் கூறுகிறது. உலகத்திற்கு மிகச்சமீபத்திலிருப்பது போல் தோன்றும் நக்ஷத்திரங்கள் பூமியிலிருந்து அநேக கோடி மைலுக்கு அப்பாலிருக்கிறது, அந்த நட்சத்திரங்களின் ஒளி பூமியில் படுகின்றதற்கு 50000 வருஷங்களுக்கு மேலாயிருக்குமென்று விஞ்ஞானப்புலவர்கள் தக்க ஆதாரத்துடன் இயம்புகின்றார்கள். நக்ஷத்திரங்கள் 6000 வருடங்களுக்கு முன் சிருஷ்டிக்கப்பட்டிருந்தால் அந்த நக்ஷத்திரங்களின் ஒளி இன்னும் 50000 வருடங்கள் சென்றல்லவா பூமியில் படவேண்டும்? இப்பொழுது அதன் ஒளி பூமியில் படுவதேன் என்று கூறிய கலிலியோ என்ற வானசாஸ்திரி கிறிஸ்துவ மதவெறியர்களால் கொல்லப்பட்டு போயினும் இன்றைய பகுத்தறிவு உலகம் இதைவினவாமலிருக்குமா? இன்னும்பல நுண்ணிய கருவியினாலும் நுட்பமான அறிவினாலும் இப்பொழுது பூமிக்கு ஒளிகொடுக்கும் நக்ஷத்திரங்களின் ஒளியானது அதினின்று பூமிக்கு வந்து சேர பல லக்ஷ வருஷங்களாகியிருக்குமென்று ஏர்ஷல் என்னும் சிறந்த பண்டிதர்கள் கூறியிருக்கின்றார்கள். நியூஆர்லியன்ஸ் என்னுமிடத்தில் மிஸிஸிபி பள்ளத்தாக்கிலிருந்து வட அமெரிக்கா வரை மனிதர் எலும்புகள் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டுப் பார்த்ததில் அவை குறைந்தது ஐம்பதினாயிரம் வருஷங்களுக்கு அதிகமாகவே புதைக்கப்பட்டிருக்கலாமென பௌதிக சாஸ்திரிகள் கணக்கிடுகின்றார்கள். அமெரிக்காவில் இருபதினாயிர வருஷங்களுக்கு அதிகமாக ஒரு மரம் நிற்பதாக மரங்களின் ஆயுளைத்தீர்மானிக்க வைத்திருக்கும் இயந்திரத்தின் உதவியால் அறிந்து அம்போல்ட்டு என்னும் அறிஞர் சொல்லுகின்றார். இன்னும் பல மேதாவிகளும் பூமி உண்டாகி 6000 வருஷம் என்று கூறும் கூற்றைத் தவிடுபொடியாக்கியுள்ளார்கள். மதப்பித்தர்கள் என்னதான் கூறினும் அதை ஒத்துக்கொள்ளார். சில படித்த கிறிஸ்தவர்கள் பைபிளில் நாள்என்று கூறியிருப்பது தற்பொழுது நாம் கூறும் 24 மணிநேரத்தைக்கொண்டதல்லவென்று கூறி பொது மக்களை ஏமாற்றப்பார்க்கின்றார்கள். டாக்டர் ஜான் ஸ்மித் என்னும் பாதிரியார் ஒரு நாள் என்று பைபிளில் கூறுவது பல லட்ச வருஷங்களைக்கொண்டது என்று கூறியுள்ளார். இது மெய்யானால் இன்னும் ஓய்வு நாள் வரவில்லையேயென்பதை கிறிஸ்தவர்கள் உணரவேண்டியதோடு, இதுவரை ஓய்வு நாள் என்று சோம்பியிருந்ததெல்லாம் பயனற்றதென்றும் கிறிஸ்தவர்களுக்கு எடுத்துக்காட்டினாலும் மதவெறியினால் பகுத்தறிவு மங்கிக்கிடக்கும் மக்கள் ஒரு பொழுதும் ஒப்புக்கொள்ளார். எனவே நாட்டில் பகுத்தறிவு ஜோதி பிரகாசிக்க வேண்டுமானால் மதவெறியும் கடவுள் வெறியும் கட்டாயம் ஒழிதல் வேண்டும் என்னும் முடிவுக்குவாராமல் முடியாதென்பதை வாசகர்கள் நன்கறிவர். இதுபற்றியே மதநம்பிக்கையுடையவரும் பிரபல பண்டிதரும் ஆராய்ச்சி மிக்காருமான டாக்டர் அன்னிபெசண்டு அம்மையாரும் ஹிந்து மத ரக்ஷணையின் பரிகாரம் (In Defence of Hinduism) என்னும் நூலில்,

“மேல் நாட்டில் நடைபெறுகிற கிறிஸ்துமதம் தத்துவஞானிகளை முற்றும் தவிர்த்து விட்டது. அவர்களை மதத்திற்குப் புறம்பாகத் தள்ளி விட்டது. புஸ்தகங்களையும் பொதுஜனக்கூட்டத்தாருடைய அபிப்பிராயங்களையும் மாத்திரம் ஆதாரமாகப் பெற்று இப்போது நடைபெறுகின்றது. அதனால் பிரத்தியக்ஷப்பிரமாணங்களின் ஆராய்ச்சியால் ஏற்பட்டுள்ள புலனறிவு சாஸ்திரங்களின் முன்னிற்க இயலாமலும் அதன் ஆக்ஷேபணைகளுக்குச் சமாதானம் சொல்ல அசக்தமாகவும் இருக்கிறது. கிறிஸ்து மதத்தின் உண்மைகளையுணர்ந்த தத்துவ ஞானிகளை சாதாரண கிறிஸ்தவ மூடச்சனங்கள் பகைத்தார்கள்; தவிரவும், சாஸ்திரப் பயிற்சியுள்ள (Moors) ஜாதியார்களை வெறுத்தார்கள். இவ்விரண்டு காரணங்களால் கிறிஸ்துமதம், அறிவின் ஆதாரத்தின் மேல் நிற்காமல் சாதாரண ஜனங்களுடைய மூட நம்பிக்கையை ஆதாரமாகக்கொண்டது, ஞான வெளிச்சத்தைக்கண்டு மறைந்தது. இக்காரணம்பற்றி அறிஞர்கள் கிறிஸ்துவமதத்தில் நம்பிக்கையை விட்டார்கள். கிறிஸ்துவ மதம் செல்வாக்குள்ள காலத்தில், அம்மதத்தின் சித்தாந்தங்களின் அபிப்பிராய பேதத்திற்காக மனிதர்களை சிறையில் அடைக்கிறதும், கிட்டிபோட்டு ஹிம்ஸிக்கிறதும் நெருப்பில் போட்டுத்தகிக்கச்செய்வதும் இன்னும் பலவிதக்கொடுமைகளைச்செய்து அம்மதத்தின்மீது தூரபிமானமுள்ளவர்களாகச்செய்து விட்டார்கள். இக்கொடுமைகளின் நினைவு சாஸ்திரிகளின் மனதில் இருந்துகொண்டிருக்கிறபடியால் ஒரு நூதனவிஷயம், சாஸ்திர ஆராய்ச்சியினால் கண்டு பிடிக்கப்பட்டு அது கிறிஸ்துமார்க்கத்திற்கு விரோதமாக இருந்தால் அப்புது விஷயத்தை ஆதாரமாகக்கொண்டு கிறிஸ்துமதக்கொள்கைகளின் அறிவின்மையைத் தூற்றிச்சின்னாபின்னப்படுத்துவதில் சாஸ்திரிகள் அத்துவர்ப்பாக இருக்கிறார்கள். அத்தகைய கொள்கைகள் அநேகம் விஞ்ஞான வாதிகளின் வாதக்குண்டுகளால் சிதரிச்சிதைந்து போயின— சில முந்திய உருவம்முற்றும் மாற்றப்பட்டு ஞானதத்துவங்களாக மாறியிருக்கின்றன; புத்தகங்களை ஆதாரமாகக் கொண்டிருந்த மதிமயக்கம் நீங்கிக்கொண்டு வருகிறது”

“கிறிஸ்துமதமானது மேல் நாட்டில் இவ்வாராய்ச்சி என்ற அக்கினியில் பிரவேசித்துப் புனிதமாக வேண்டும் கீழ் நாடுகளில் ஹிந்துமதம் பௌத்தமதம், இஸ்லாம் இவைகள் இத்தன்மையான, பரீக்ஷையான அக்னியில் பிரவேசஞ்செய்து தேறிவர வேண்டும், மதசம்மந்தமான தத்துவங்கள் எப்பொழுதும் அழியா. ஆனால் மதங்கள் அழியும், முன்னும் அழிந்திருக்கின்றன. இனியும் அவைகள் அழியும், மாறிக்கொண்டிருக்கும் காலதேசவர்த்தமானங்களுக்குத்தக்கவாறு தாம்மாறாமல், ஒரேபிடிவாதமாக நின்று கொஞ்சமேனும் இளகாமல் இருக்கும் மதம் அழியும்; அதனால் அதன் உயிர்ப்பாகம் நீங்கிவிட்டதெனத்தெரியவரும் உயிருள்ள சரீரம் இடத்தைநோக்கி தன்னைமாற்றிக்கொள்ளுமல்லவா? மாற்ற இயலாமல்போனால், மரணதர்மம் வந்துவிட்டதென நினைக்கற்பாலது.”

(தொடரும்.)

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

கள் மாயை (Maya) என்றும் கூறுவர். கட்டையில் கள்ளனை பார்ப்பது போலவும், கிளிஞ்சியில் வெள்ளியைக்காணுவதைப்போலவும் கானலில் நீரை அருந்துவதைப்போலவும், பாழ்வீட்டில் பேயையும், பிசாசுகளையும், செத்தவர் பட்டவர்களை பார்ப்பதாகும். ‘மிரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்’ என்ற பழமொழியைக்கேட்டதில்லையா? நாம் மெஞ்ஞான முறையைப்பற்றி நமது ‘குடிஅரசில்’ எழுதிவரும் வியாசங்களை கவனித்துப்படித்து வருவீர்களாகில் நீங்கள் இறந்தோர் விஷயமாகக்கொண்டுள்ள மருள்யாவும் விலகிப்போகும். நமது அஞ்ஞான மொழிந்து, மெஞ்ஞானம் பெருக வேண்டுமானால் காலம சூத்திரத்தில் புத்தர் சொன்ன வாக்கியத்தை கவனியுங்கள். “தேவன் சொன்னதினாலேயே நம்பாதீர்கள், ‘பாட்டன் பூட்டன் சொன்னதினாலேயே நம்பாதீர்கள், ‘பெரியோர் குருமார் சொன்னதினாலேயே நம்பாதீர்கள், ‘வேத புத்தகங்களில் சொன்னதினாலேயே நம்பாதீர்கள், ‘ஒவ்வொன்றையும் விசாரியுங்கள். உங்கள் யுக்திக்குப் பொருந்தி இருந்தால் யாவர் நன்மைக்கும் உவந்திருந்தால் அதனை நம்புங்கள், அதனைக்கையாளுங்கள்”.

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி “குடி அரசி”ல் வெளியான “சத்தியாக்கிரகமா சண்டித்தனமா” என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 6. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... | 0—4—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—C |
| 8. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு.

---

## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

---

## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

---

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

### மாதர் சுதந்திரம் அல்லது

# பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

---

## Goshaye office pillss.
## கோஷாயி
## ஆபீஸ் மாத்திரை



உதவி டாக்டர்
T. K. V. Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

டாக்டர் B. A. எதிராஜ்,
(காலராபைரி) கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

---

## "பசிக்கும் வயிற்றிற்கு ஒரு கவள சாதம் கொடுக்க சக்தியற்ற சாமிகளும், சாஸ்திரங்களும் இந்நாட்டுக்கு வேண்டியதில்லை"

---

**ANANGARANGABATIKA.**

*(Enjoyment Pill)*

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of failure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**
*Chandanpur,*
**(Khulna) E. B. R.**

---

### "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

**வேலூர்.**
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

**கரூர்.**
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

**திருப்பூர்.**
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

**திண்டுக்கல்.**
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

**காரைக்குடி.**
விஸ்வனாதம், வெற்றிலைக்கடை-கல்லுக்கட்டி.

**சேலம்.**
சிவசுப்ரமணியம், வீரராகவ செட்டி தெரு, அரிசிபாளயம்.

**கொளும்பு.**
சிவன் கோவில் மேற்குமடம் பருத்தித்துரை.

**புதுவை.**
திருவள்ளுவர் வாசிப்புசாலை
4 ஓர்லெயன்வீதி.
நடேசமுதலியார் சோடாபாக்டரி ராஜவீதி.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும். இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுபைமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன. இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என் எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.